March -2018 | Volume-4 | issue-42

# காட்டாறு

**அறிவியல் பண்பாட்டு மாத இதழ்**

மார்ச் - 2018 பருவம் - 4 புனல் - 42 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only




# சமையலறைகளை உடைப்போம்


Invoke a system for integration of boys and girls in classrooms instead of separating them in seating arrangements.
Implement a system where boys and girls are made to sit together consecutively to promote egalitarianism.


Implement Co-hostel or unisex hostel system in all institutions as followed in New Delhi JNU, AIIMS and other higher educational institutions. Include gender education in the syllabus from primary education.


Shut down and cancel the license of schools and colleges, run by barbarians, that punish girls and boys who speak and socialize inside the campus premises.
SCHOOL


Sex education must be included as a subject from school.


Ban ear piercing function for children which inculcates the fact that girls are meant to be beauty idols only.


Ban puberty function which degrades women moral.




காட்டாறு

# உடைப்போம் சமையலறைகளை!

2017 ஆம் டிசம்பர் 24 ஆம் நாள் பாலினச் சமத்துவ நோக்கில் பல கோரிக்கைகளை முன்வைத்து சமையல் மறுப்புப் போராட்டத்தை அறிவித்து, நடத்தினோம். 2018 டிசம்பர் 24 இல் ‘சமையலறை உடைப்புப் போராட்டம்’ என அறிவிக்கிறோம். ஏன்? எதற்காக?

சமுதாய மாற்றங்களுக்காக உழைக்கும் தோழர்களில் ஏராளமானோர், ஜாதி, மத மறுப்புத் திருமணங்களுக்குத் தயாராக உள்ளனர். ஏராளமானோர் ஜாதி மறுப்பு மணங்களைச் செய்தும் வருகிறார்கள். ஆனால், அந்த ஜாதி, மத மறுப்பு இணையர்களின் வாழ்வில் பாலினச்சமத்துவம் இருக்கிறதா? என்றால், 99 சதவீத இணையர் களின் வாழ்வில் ‘இல்லை’ என்பதே உண்மை.

ஜாதி, மதம், ஜாதி, மத வன்கொடுமைகள், தமிழ் நாட்டு உரிமைப் பறிப்புகள், பாலியல் வன்கொடுமைகள், காதல் ஆசிட் வீச்சுக்கள், குடும்ப வன்முறைகள், பாலினப் பாகுபாடுகள் என அனைத்துக்கும் எதிராகக் களத்தில் கடுமையாகப் போராடும் தோழர்கள்கூட வீட்டில் தங்கள் குடும்பப் பெண்களை அடிமைகளாக நடத்துவது இயல் பாக - சாதாரணக் காரியங்களாக இருக்கிறது. போராடும் தோழர்களின் குடும்பங்களின் நிலையே இப்படி என்றால், சராசரி ஆண்களிடம் சிக்கித் தவிக்கும் பெண் இனத்தின் நிலையை எண்ணிப் பாருங்கள்.

எனவே, முதற்கட்டமாக எமக்குத் தொடர்புள்ள குடும்பங்களிலாவது பாலினச்சமத்துவம் குறித்த விரிவான விவாதங்கள் உருவாக வேண்டும் என்று திட்டமிட்டோம். காட்டாறுக்கு ஆதரவான தோழர்கள், தங்கள் குடும்பங் களிலும், தங்கள் துணையிடமும் நடத்தும் ஆதிக்கங் களுக்கு எதிராகத்தான் முதல் தாக்குதலைத் தொடுத்தோம். விளைவாக, ஆண் தோழர்களின் மனதில் ஒரு குற்ற உணர்வையும், ஒரு சுயவிமர்சனத்தையும் உண்டாக்கி உள்ளோம். பெண் தோழர்களிடம் விடுதலைச் சிந்தனை களை வளர்த்துள்ளோம். இதை முதற் கட்ட வெற்றியாகக் கருதுகிறோம்.

காட்டாறு குழுவைத் தாண்டி, பரந்துபட்ட அளவில் பாலினச் சமத்துவ நோக்கிலான கருத்துக்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, ‘சமையலறை உடைப்பு’ என அறிவித்துள்ளோம். நாம் கோரிக்கை வைப்பது அரசுகளை நோக்கித்தான் என்றாலும், அவை அனைத்துமே சமுதாய மாற்றத்தினால் மட்டுமே சாதிக்கக் கூடியவை. அதைச் சாதிக்க மக்களிடம் ஒரு மனப்புரட்சி உருவாக வேண்டும். அதற்கான பரப்புரையை அனைத்து வழிகளிலும் மேற்கொள்ள இருக்கிறோம்.

எமது கோரிக்கைகள் வெகுமக்களைச் சேரவேண்டும், விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்காக சிறிய அளவில் ஒரு கருத்துக்கணிப்பையும் நடத்தி னோம். அதன் முடிவுகள் இந்த இதழில் வந்துள்ளன. பொது மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தியதோடு, நின்று விடாமல், மக்களுக்காக உழைக்கும் அமைப்பு களின் கருத்துக்களையும் கேட்டு வாங்கி வெளியிட் டுள்ளோம். அனைத்து அமைப்பு களிலும் களப்பணியில் உள்ள பெண்தோழர்களிடமும், சில ஆண் தோழர் களிடமும் கருத்துக்களைப் பெற்றோம். தொடர்ந்து அனைத்து அமைப்புகளையும், தலைவர் களையும் சந்திக்க உள்ளோம்.

இது மிகப் பெரிய, மிக நீண்ட பயணம். எல்லா அமைப்புகளுக்கும் ஏராளமான பணிச்சுமைகள் இருக்கும். கூடுதலாக காட்டாறுக் குழுவின் கோரிக்கைகளுக்கும் கொஞ்சம் இடம் ஒதுக்குங்கள். பாலினச்சமத்துவ அடிப்படையிலான எமது நகர்வுகளுக்கு ஆதரவைத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.



இரஞ்சிதா கோபி

# அம்முவின் அம்மா




MAA குறும்படம். இந்தச் சமூகத்தில் இன்றைய சூழ்நிலைக்கு எது தேவை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது. காதல் என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவான உணர்வு. ஆண்களால் கட்டமைக்கப்படும் சமூகத்தில் காதல் என்பது வெறுமனே உடலுறவு கொள்வதற்காக என்பது போல கற்பிக்கப்படுகிறது. காதலாலும், காமத்தாலும் உண்டாகும் நன்மைகள் ஆண்களின் வெற்றியாகவும் அதனால் உண்டாகும் தீமைகள் பெண்களின் குற்றமாகவும் பார்க்கப்படுகிறது.

இக்குறும்படத்தில் படித்த பெற்றோர்கள் அப்பா, கல்லூரிப் பேராசிரியர். அம்மா நூலகப் பொறுப்பாளர். பத்தாம் வகுப்புப் படிக்கும் பெண், கர்ப்பமாக இருப்பதை உணர்ந்து தன் அம்மாவிடம் கூறும்போது, அம்மா நீ தவறு செய்யும் போது அம்மா, அப்பாவைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா? என கேட்பது சாதாரண ஒரு அம்மாவின் நிலைதான்.

தவறு செய்யும் பெண்கள் தற்கொலை தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலை ஆகும். இதை உடைத்து 'மா' குறும்படத்தை இயக்கிய சர்ஜூன் அவர்கள் அம்முவின் அம்மாவைப்போன்ற அம்மாக்கள் தான் சமூகத்தின் தேவை என்பதை உணர்த்தியுள்ளார்.

முதலில் சாதாரண அம்மாவாக உள்ள அம்முவின் அம்மா, கர்ப்பம் உறுதியான பின்பு முற்போக்காக முடிவு எடுப்பது சிறப்பு. பத்தாம் வகுப்பு படிக்கும் பெண்ணிற்குப் பாலியல் கல்வியைக் கற்றுத் தராததுதான் கர்ப்பத்திற்குக் காரணம் என்பதை உணரவில்லை. பாலியல் கல்வியைக் குழந்தைப் பருவத்திலிருந்து கற்றுக் கொடுத்து வளர்த்தியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. பாலியல் கல்வி தேவை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது 'மா'.

ஆண், பெண் வகுப்பறையில் ஒன்றாக அமர அனுமதிக்காத அப்பா, இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தொடாமல் போவீர்களா? என்று கேட்பதும் பாலியல் கல்வியின் தேவையை உணரவில்லை என்பதைக் காட்டுகிறது. அம்மாவைப் பொறுத்தவரையில் பெண்ணை விளையாட்டில் ஆணுக்கு இணையாக அனுமதிப்பதும், ஆடைக் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ப்பதும் தான் முற்போக்கு என்பதாகக் கருதுகிறார். இந்த முற்போக்குகூட ஆண்களின் எதிர்ப்புகளைத் தாண்டி பெறப்பட வேண்டியிருக்கிறது.

காதல் என்பது இறுதியில் உடலுறவில் தான் முடியும் என்ற சமூகப்பார்வையில் இக்குறும் படத்தில் காதலின் உச்சம் உடலுறவு என்பதை அறியாமையாகக் காட்டியுள்ளார் இயக்குனர்.

ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு உடலுறவு வைத்துக் கொண்டால் அதற்கு ஒரு ஆணின் துணை அவசியம் தேவை. அதனால் ஏற்படும் பாதிப்புகள் பெண்களுக்கு மட்டுமே. பத்தாம் வகுப்பு படிக்கும் ஹரி தான் செய்த தவறுக்கு வருந்தினாலும், பின்னாளில் அம்முவின் அப்பாக்களாகவே உருவாகிறார்கள். குற்ற உணர்வு ஹரி மனதில் இருந்தாலும் தான் ஆண் என்ற வகையில் அன்றாட வாழ்வு ஓடிக்கொண்டு இருக்கும்.

ஒரு பெண் எந்த வயதில் தனக்கான துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எந்த வயதில் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எந்த அறிவும், உரிமையையும் பெண்களுக்கு கொடுக்கப் படுவது இல்லை. கிடைப்பதுமில்லை. தோழர் பெரியார் காதலைப் பற்றி ஏராளமாகப் பேசியுள்ளார். குறிப்பாக,

# Kitchen #
DEMOLISH
VEDIC TRADITION'S

“காதல் என்பது மிக மிகச் சாதாரண அற்ப விஷயம். காதலுக்கு அடிமை ஆவது இன்றைய சமுதாய வாழ்க்கை முறைக்குச் சிறிதும் பொருந்தாது.”

*- தோழர் பெரியார், 17.11.1940 ‘குடிஅரசு’*

*என்ற கருத்தையும் இப்படம் விளக்குகிறது. 10 வயதிற்கு மேல் பெண்குழந்தைகள் குழந்தை பெற்றுக் கொள்வதும், அதனால் பெண்கள் மட்டுமே கஷ்டப்படுவதும் இன்றைய சூழலில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை மிகச் சரியாக பதிவு செய்துள்ளார் இயக்குனர்.*

*படிக்காத பெண்களின் பெண் குழந்தைகள் திருமணம் மூலம் கர்ப்பமடைவதும், படித்து வேலைக்குச் செல்லும் பெண்களின் பெண் குழந்தைகள் பாலியல் கல்வி விழிப்புணர்வு இன்றித் தன் வயதொத்த மாணவர்கள் மூலம் கர்ப்ப மடைவதையும் இக்குறும்படம் தெளிவு படுத்துகிறது. சம காலத்தில் பாலியல் கல்வி விழிப்புணர்வு இல்லாததால், பாதிக்கப்படுவது பெண் குழந்தைகளாகவே (பள்ளிக்குழந்தைகள்) உள்ளார்கள்.*

1. பீகார் மாநிலம் கோபால்காஞ்ச் மாவட்டம் அரசுப்பள்ளியில் 13 வயது (7-ஆம் வகுப்பு மாணவி) 6 மாத கர்ப்பமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.
2. சென்னை அசோக்நகர் பள்ளியில் 10-ஆம் வகுப்பு பயிலும் மாணவி 6 வாரம் கர்ப்பமாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.
3. வடமதுரை எரியோடு கிராமத்தில் 10-ஆம் மாணவி 3 மாத கர்ப்பமாக இருந்துள்ளார்.
4. கர்நாடக மாநிலத்தில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளியில் 5-ஆம் வகுப்பு படித்த மலைவாழ் ஆதிவாசி பிரிவைச் சார்ந்த மாணவி குழந்தைப் பெற்றெடுத்துள்ளார்.
5. திருச்சி மாவட்டத்தில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவிகள் 10 பேர் கர்ப்பமாக இருந்தது மருத்துவ ஆய்வின் மூலம் தெரியவந்து அதிர்ச்சிக்கு ஆளானார்கள். இப்பள்ளி 100சதவீதம் தேர்ச்சி பெறும் மிகப் பிரபலமான பள்ளி ஆகும்.

*பாலியல் கல்வி இல்லாத 100 சதவீதம் தேர்ச்சி பெறும் பள்ளிகள் கொடுக்கும் கல்வியும், முற்றுப் பெறாத கல்வியாகவே அமையும் என்பதற்கு மேற்கண்டவைகளைப் போல பல எடுத்துக்காட்டுகளை தினசரிச் செய்தித்தாள்கள் நமக்குக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றன.*

*சிறுவயதில் அம்முவிற்கு ஏற்பட்ட கர்ப்பம், அம்முவின் அம்மாவால் கலைக்கப்பட்டு, அம்முவின் விளையாட்டு பருவம் காக்கப்பட்டது. அறியாமையால் ஏற்பட்ட காயத்திற்கு முற்போக்காக மருந்திட்ட அம்முவின் அம்மாவைப்போல சமூகத்தில் நிறைய பெண்களுக்குக் கிடைத்திருந்தால் பல பெண் குழந்தைகளின் தற்கொலைகள் தடுக்கப்பட்டிருக்கலாம்.*


# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு:
**எரிதழல்**
**பெரியார்செல்வி**
**அ.ப.சிவா**
**பூங்கொடி**
**இளையகுமார்**
**விமல்பிரகாஷ்**
**செந்தில்குமார்**

ஆலோசனைக்குழு:
**பிரபாகரன் அழகர்சாமி**
**கணியூர் தமிழ்ச்செல்வன்**
**மே.கா.கிட்டு**
**செல்லையா முத்துச்சாமி**

பொறுப்பாசிரியர்:
**சி.இராகவன்** 97868 89325

உரிமை -ஆசிரியர் - வெளியீடு:
**சி.விஜயராகவன்** 99762 56821

ஆண்டுச்சந்தா தொடர்பு:
**கிருஷ்ணவேணி** 77084 58086

நன்கொடை, ஆன்லைன் சந்தா:
**குமரேசன்** 99943 65133

சட்ட ஆலோசனை:
வழக்கறிஞர் **அ.கிருஷ்ணக்குமார்**

வடிவமைப்பு: **முகில் மீடியா** 97873 20044

அச்சு: **செந்தூர் ப்ரிண்டர்ஸ்**

தொடர்புக்கு:
kaattaaru2014@gmail.com
www.kaattaaru.com

இந்த இதழின் களஆய்வுக்குழு:
**ஆத்தூர் விஜி, செம்பட்டி தேவகி, பெதப்பம்பட்டி கவிதா,பல்லடம் தீபா, பல்லடம் சுமதி, மதுரை நிர்மலா, திருச்சி கௌசல்யா, திருச்சி சுபா, திருச்சி பிரியங்கா, திருச்சி இந்து ஜோதிகா**

யாழ்மொழி

# ஐஸ்லேண்டின் பாலினச்சமத்துவம்

*144 நாடுகளைக் கணக்கில் கொண்டு, World Economic Forum 2017 இல் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, பாலினச்சமத்துவத்தில் முதலிடம் வகிக்கிறது 'ஐஸ்லேண்ட்'. இது 2017 ஆம் ஆண்டு நிலவரம் மட்டுமல்ல. தொடர்ந்து 9 ஆண்டுகளாக ஐஸ்லேண்டே முதலிடம் வகிக்கிறது. கடந்த 9 ஆண்டுகளாக, பெண்கள் மனிதர்களாக வாழ்வதற்கு மிகச் சிறந்த இடமென்ற பெருமை ஐஸ்லேண்ட் நாட்டிற்குத் தான் உள்ளது!*

*பல்வேறு போராட்டங்கள் மற்றும் சட்டங்கள் மூலம் தான் அந்நாட்டில் இப்படிப்பட்ட நிலை சாத்தியப்பட்டுள்ளது. இன்னும், ஐஸ்லேண்ட் திரையுலகு போன்ற சில துறைகளில் ஆண் பெண் சமநிலை உருவாகவில்லை. எனினும், 87.8% சமத்துவத்தை அந்நாடு அடைந்துள்ளது என்கிறது அந்த அறிக்கை. 144 நாடுகளில் 108 வது இடத்தில் உள்ள இந்தியா போன்ற நாடுகள் ஐஸ்லேண்டிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமாய் உள்ளன.*

*பாலினச் சமத்துவம் பற்றிய வகுப்புகள்; பணியிடங்களில் பெண்களின் நலனுக்கென சட்டங்கள்; ஊடகங்களில் பெண்களைப் பாலியல் பண்டங்களாகச் சித்தரிக்கத் தடை; பாலினப் பாகுபாடுகளை விதைக்கும் விளம்பரங்களுக்குத் தடை; 'ஸ்ட்ரிப் கிளப்' எனப்படும் வக்கிரமான கேளிக்கைக்குத் தடை என பல நடவடிக்கைகள் மூலம் பெண்களை மனிதர்களாக்கியுள்ளது ஐஸ்லேண்ட்!*

*பெண்களின் உரிமைகளுக்கு ஆதரவு தரும் வகையிலும், பாலினப் பாகுபாடுகளுக்குத் தண்டனையை வழங்கும் வகையிலும், ஐஸ்லாந்தில் உள்ள சில முக்கியமான சட்டங்களைப் பற்றிக் காண்போம்.*

### மகளிர் சமத்துவத்தைப் பாதுகாக்கும் சட்டம்

*ஆண்- பெண் சமநிலை மற்றும் சம உரிமைகளுக்கென உள்ள சட்டம் ஐஸ்லேண்டின் பாலினச் சமத்துவத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். 2000 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இச்சட்டமானது, 2008 ஆம் ஆண்டில் சீரமைக்கப்பட்டது. அரசாங்க மும், வணிகங்களும் பின்பற்ற வேண்டிய பாலியல் சமத்துவம் குறித்த தகவலை உள்ளடக்கியது இந்தச் சட்டம். பாலினப் பாகுபாடுகள் நடக்கும் ஒன்பது இடங்கள் இச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. பாலினப் பாகுபாடுகளில், நேரடியான மற்றும் மறைமுகமான பாகுபாடுகளெனப் பிரித்து அடையாளம் காண்கிறது இச்சட்டம். பாடப் புத்தகங்கள் முதல் பணியிடங்கள் வரை பாகுபாடுகள் இல்லாமல் இருக்கும் வகையில் இச்சட்டத்தில் 35 பிரிவுகள் உள்ளன.*

### நிறுவனங்களின் வாரியங்களில் குறைந்தது 40% பெண்கள் இருக்க வேண்டும்

*மேற்கண்ட சட்டத்திலுள்ள 15 ஆம் பிரிவானது, அரசாங்க சபைகளிலும், நிறுவனங்களின் வாரியங்களிலும் குறைந்தது 40 சதவீதம் பெண்களாவது இருக்க வேண்டும் என்கிறது.*



*அதைக் கண்டிப்பான முறையில் பின்பற்றவும் செய்கின்றனர். மேலும், 25 ஊழியர்களுக்கு மேல் பணி புரியும் நிறுவனங்களில் முறையான பாலியல் சமத்துவ நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். இவற்றை மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை அரசாங்கம் கண் காணிக்கிறது.*

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

### பணியில் சம ஊதியம்

சில துறைகளில் பெண்கள் ஆண்களை விட குறைவான ஊதியமே பெற்று வந்தனர். அதற்காக பெண்கள் நூதனப் போராட்டம் நடத்தினர். அதனையொட்டி, ஆண் - பெண் ஊதியப் பாகு பாட்டை சட்டவிரோதமாக்க நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றியது ஐஸ்லேண்ட். 25 பணியாளர்களுக்கு மேல் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் இரு பாலருக்கும் சம ஊதியம் வழங்க வேண்டும் என்று சட்டமும் இயற்றப் பட்டது. இதன் மூலம், சம ஊதியச் சட்டத்தைக் கொண்டு வந்த முதல் நாடு என்ற பெருமை ஐஸ்லாந்திற்குக் கிடைத்தது.

### உலகிலேயே மிகச் சிறந்த Parental leave திட்டம்

ஐஸ்லாந்தில் உலகின் மிகச் சிறந்த மகப்பேறு - தந்தைமை விடுப்புக் கொள்கை உள்ளது. இவ்விடுப்பை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக அதிகரித்து 2006 ஆம் ஆண்டு சட்டத் திருத்தம் செய்தனர். சுயதொழில் செய்பவர்கள் உட்பட அனைத்து பெற்றோர்களும் இந்த விடுப்பை குழந்தை பிறப்பின் போதும், குழந்தையைத் தத்தெடுக்கும் போதும் பயன்படுத்திக் கொள்ளலாம். விடுப்பு காலத்தில் 80% சம்பளம் கொடுக்கப்படும். தாய், தந்தை இருவரின் கவனிப்பும் குழந்தைக்குக் கிடைக்கும் வண்ணம் தாயும் தந்தையும் இவ்விடுப் பைப் பிரித்துக் கொள்வர்.

அதாவது, இவ்விடுப்பானது 3 மாதங்கள் தாய்க்கும், 3 மாதங்கள் தந்தைக்கும், 3 மாதங்கள் இருவருக்கும் எனப் பிரித்து அளிக்கப்படுகிறது.

### பள்ளியிலிருந்து கல்லூரி வரை பாலினச்சமத்துவ வகுப்புகள்

பெற்றோர்கள் இருவரின் சமமான கவனிப் புடன் வளர்க்கப்படும் குழந்தைகளுக்குப் பள்ளியில் சேரும் முதல் எல்லா வகுப்புகளிலும் பாலினச் சமத்துவப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இதனை நாம் முதலில் பார்த்த "ஆண்- பெண் சமநிலை மற்றும் சம உரிமைகள்" சட்டத்தின் 23 ஆம் பிரிவு வலியுறுத்துகிறது.

இலவசமாக வழங்கப்படும் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியிலும், விளையாட்டிலும் பாலினச் சமத்துவத்தைப் பின்பற்றுகிறது ஐஸ்லேண்ட். பாலினப் பாகுபாடுகளை ஒரு புத்தகத்திலும் காண இயலாது.

### லிவிங் டுகெதருக்கு அங்கீகாரம்

18 வயது நிரம்பிய ஆண் - பெண் அல்லது இரு பெண்கள் (lesbian) அல்லது இரு ஆண்கள் (gay), திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழுதல் என்னும் லிவிங் டுகெதர் முறையில் இணைந்து வாழலாம். லிவிங் டுகெதர் இணையர் தங்கள் இணைவைப் பதிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு பதிவு செய்து கொள்பவர்களுக்குச் சில சட்டப்பூர்வமான சலுகை கள் உண்டு. சில மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் திருமணம் செய்து கொள்ள நினைத் தால் திருமணத்தையும் பதிவு செய்து கொள்ளலாம். அதன் பின் அனைத்து சலுகைகளும் அவர்களுக்கு உண்டு.

### ஸ்ட்ரிப் கிளப்களும், செக்ஸிற்காகப் பணம் செலுத்துவதும் சட்ட விரோதமானது

கோல்ப்ரன் என்பவர் "பெண்களை விற்கப்படும் பண்டமாகச் சித்தரிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று கூறி ஸ்ட்ரிப் கிளப்களை எதிர்த்தார். ஏனெனில், அவை பெண்களைப் பாலியல் பண்டமாகவும், காட்சிப் பொருளாகவும் காட்டுகின்றன. 'ஸ்ட்ரிப் கிளப்' என்னும் கேளிக்கை யை, 2009 - ஆம் ஆண்டில் பெண்ணிய நோக்கில் தடை செய்த முதல் நாடு ஐஸ்லேண்ட். பணியாளர் களை (பெண்கள்) நிர்வாணப்படுத்தி எந்தத் தொழிலும் இலாபம் சம்பாதிக்கத் தேவையில்லை என அறிவுறுத்தும் அச்சட்டம் முழு ஆதரவுடன் ஐஸ்லேண்ட் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

2007 ஆம் ஆண்டு வரை விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்கள் தான் தண்டிக்கப்பட்டனர். அவர்கட்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை வழக்கப் பட்டது. ஆனால், 2009 ஆம் ஆண்டு, ஐஸ்லாந்திய நாடாளுமன்றத்தில், செக்ஸிற்காகப் பணம் செலுத்துபவனே தண்டிக்கப்பட வேண்டியவன் என்று ஆலோசித்து சட்டத் திருத்தமும் செய்தனர். இருப்பினும், விபச்சாரத்தைப் போல பெண்கள் குழுக்களாக பாலியல் தொழிலில் ஈடுபட்டால் அவர்களுக்குத் தண்டனை உண்டு.

மேலும், விளம்பரங்களில் பெண்களையோ ஆண்களையோ காட்சிப் பொருளாக்குவதும் அந்நாட்டில் சட்டப்படிக் குற்றமாகும்.

### பாலினச் சமத்துவத்திற்கென தனி அமைச்சரவை

பாலினச் சமத்துவத்தில் தன்னிறைவு பெறுவதற்கென ஒரு தனி அமைச்சரவை ஐஸ்லாந்தில் உண்டு. சமத்துவத்தின் முன்னேற்றப் பாதையைக் கண்காணிக்க சம உரிமை கவுன்சில், புகார் ஆணையம் மற்றும் பாலினச் சமத்துவ மையம் போன்ற அமைப்புகள் உள்ளன. அமைச்சரவை யோடு இணைந்து இவ்வமைப்புகள் பாலினச் சமத்துவத்திற்கென ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண் காணிக்கும். பாலினச் சமத்துவத்திற்குச் சட்டப் பூர்வமாக, கலாச்சார ரீதியாக மற்றும் உளவியல் ரீதியாக வழி வகுக்க வேண்டும் என்பதே இந்த அமைச்சரவை மற்றும் அமைப்புகளின் நோக்க மாகும்.

இவ்வாறு பல சட்டங்கள் மற்றும் நடை முறைகள் மூலம் பாலினச் சமத்துவத்தை அடைந்துள்ளது ஐஸ்லேண்ட். எனவே மன ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், சட்டங்களிலும் மாற்றங்கள் வந்தால் மட்டுமே இந்தியா போன்ற நாடுகளில் பாலினச் சமத்துவம் சாத்தியப்படும்.

https://www.globalcitizen.org
http://www.mcc.is/english/iceland/laws-and-regulations-/
https://www.weforum.org

பொள்ளாச்சி சி.விஜயராகவன்

## தமிழ்நாட்டின் தேசிய விழா

# “இராவண லீலா”

கலகக்காரர் தோழர் பெரியார் திராவிடர் இனநலத்திற்காக, பார்ப்பன சனாதன மதமான இந்துமதத்தின் அடிப்படையைத் தகர்த்து எறியும்படி நடத்திய “இராவண லீலா” எனும் பண்பாட்டுப்புரட்சி நிகழ்வை இளைய தலைமுறை விளக்கமாக அறியவேண்டும்.

பெரியாரின் மறைவுக்குப் பிறகு, இந்திய வரலாற்றில் ஒரு சமுதாய புரட்சி இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, கடுமையான பல எதிர்ப்புகளைக் கடந்து திராவிடர் கழகத்துக்குத் தலைமை ஏற்ற அன்னை மணியம்மையார் போர்க்குணத்தோடு இயக்கத்தை வழி நடத்தினார்.

அந்தக் காலகட்டத்தில், .மத்திய அரசு 26.06.1975 இல் நாட்டில் நெருக்கடி நிலையை அமுலாக்கி செய்தித்தாள்கள் தணிக்கைக்கு உள்ளாகும் என்ற ஜனநாயகப் படுகொலையைத் துவக்கியது. 08.07.1975 இல் நெருக்கடி நிலைக்கு எதிராக விடுதலையில் தலையங்கம் தீட்டினார்.

**மத்திய அரசின் அடக்கு முறைக்கு எதிராக ஊடகத்துறையில் எழுதப்பட்ட முதல் தலையங்கம் இதுவே ஆகும்.**

இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் தசராப்பண்டிகை நாளில் வடபுலத்தார் டில்லி மாநகரிலேயே திராவிடப்பெரு வீரர்கள் இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் உருவங்களுக்குத் தீமூட்டி திருவிழாக் கொண்டாடுகிறார்கள். அதிலே இந்தத் தேசத்தின் உச்சாணிப் பதவியிலே அலங்காரம் செய்து கொண்டிருக்கக் கூடிய ஜனாதிபதி, பிரதமர் போன்றவர்களும் கலந்து கொண்டு மகிழ்கிறார்கள் என்ற செய்தி ஊடகங்கள் மூலம் அன்னை மணியம்மையாரை வந்தடைந்தவுடன், திராவிடர் இனத்தை அவர்கள் எவ்வளவு கேவலமாக எண்ணியிருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று வெகுண்டெழுந்தார்.

திராவிடர்களின் சுயமரியாதை உணர்வைத் தீயிட்டு மகிழும் அந்தக் கூட்டத்திற்கு ஒரு சரியான



பாடம் கற்பிக்க வேண்டும். நமது தன்மான உணர்வின் தலையிலே கால்வைத்து மிதிப் பவர்களின் சந்ததி உள்ளவரை மறக்காமல் இருக்கும்படி ஒரு பாடத்தைப் போதிக்கவேண்டும் என்ற உணர்வு, சுயமரியாதைக் கருவிலே பிறந்து, சுயமரியாதை ஊட்டத்திலே வளர்ந்த திராவிடர் கழகத்திற்கு ஏற்பட்டதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

**இராமன் எரிப்பு நமக்குப் புதிதல்ல**

1956 இல் ஒரு முறையும், 1966 இல் ஒரு முறையும் நாடெங்கும் இராமனையும், இராமாயணத்தையும் எரித்துக்காட்டியவர்கள் தான் நாம்! அப்படியும் அவர்களுக்குப் புத்திவரவில்லை என்றால் அதற்கு அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டியதுதானே நியாயம்! மயிலே மயிலே என்றால் இறகு போடுமா? மாநிலத்தின் மக்களை எல்லாம் ஒன்றுகூட்டி, கருஞ் சட்டைப் பட்டாளத்தை எல்லாம் அணி வகுக்கச் சொல்லி அந்த ஆரிய இராமனாதியர்களை மான பங்கப்படுத்தினால் தான் அவர்களுக்குப் புத்தி வருமா.... அல்லது ஆங்காங்கே துண்டு துண்டாக எதிர்ப்பைக் காட்டினால் புத்திவருமா?

**பிரதமருக்கு பொதுச் செயலாளர் கடிதம் – "இராமலீலா"வைத் தடை செய்க....!**

17.10.1974 அன்று திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்கள் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு ஒரு நீண்ட விளக்கமான கடிதத்தை எழுதினார்.

அக்கடிதத்தில், "இந்திய அரசு இராமலீலா விழாவிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பிரதமர், ஜனாதிபதி போன்ற முக்கியமானவர்கள் அதில் கலந்து கொள்ளக்கூடாது.மீறி நடந்தால் வருந்தத்தக்க நடவடிக்கைகளை நாங்களும் மேற் கொள்ள வேண்டிவரும்"

இராமலீலாவைத் தடை செய்யாவிட்டால் "இராவணலீலா" நடந்தே தீரும். மூலை முடுக்குகளில் எல்லாம் இராமன், சீதை உருவங்கள் கொளுத்தப் படும் என்று முறையான வேண்டுகோளும் எச்சரிக்கையும் உள்ளடக்கி திராவிடர் இனத்தவரின் சுயமரியாதை உணர்வு கூர் தீட்டப்பட்டு பிரத மருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

பிரதமர் அவர்களிடமிருந்து தக்க பதில் வராத நிலையோடு மட்டுமில்லாமல், இராமலீலா நடப்பது உறுதி என்றும், அதில் வழக்கம்போல் ஜனாதிபதியும், பிரதமரும் கலந்து கொண்டு மகிழ இருக்கிறார்கள் என்ற செய்தியும் பத்திரிகைகளின் பத்திகளை அடைந்தன.

உடல் நலமற்று சென்னை பொது மருத்துவமனையில் மருத்துவ உதவி பெற்று வந்த கழகத்தலைவர் அம்மா அவர்கள், அந்த நிலையிலும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் அவசரத்தந்தி ஒன்று கொடுத்தார்கள்.

*"Your Participation in Ramalila. Burning the effigy of the great Dravidian hero Ravana, is Against all cannons of secularism and Highly Provoking and insulting to millions of Dravidians hence Requesting you to desist from this Dastardly ACT otherwise we Dravidians. Would be burning the effigies of Rama and you, on mass level throughout the length and breath of Tamil nadu"*

தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'You' என்ற வார்த்தை ஜனாதிபதியையும் பிரதமரையும் குறிப்பிட்டு அவர்களது உருவத்திற்கும் தீவைக்கப் படும் என்று பொருள்படுவதால், தபால் தந்தித் துறையின் சட்ட விதிகளுக்குப் புறம்பானது என்றுகூறி அச்சொல் மறுக்கப்படவே, அச்சொல் நீக்கப்பட்டு அவசரத்தந்தி கொடுக்கப்பட்டது.

கழகத்தின் முறையீடுகள், வேண்டுகோள் ஆகியவற்றை புறந்தள்ளி திராவிடர் இனத்தின் சுயமரியாதையை நிராகரித்து அவமானப்படுத்தும் வகையில் அன்றைய மத்திய அரசு சர்வாதிகார மனோநிலையில் நடந்துகொண்டதை மறுநாள் செய்தித் தாள்களில் வந்த செய்திகள் கூறின.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல் ஜனாதிபதி, பிரதமர், மத்திய அமைச்சர்கள் சைதன்யங்கள் புடை சூழ "இராமலீலா" வைபவம் ஜாம் ஜாம் என்று நடை பெற்ற செய்தி பத்தி பத்தியாக வந்தன! இராவணா தியர்கள் மட்டுமல்ல - அவர்களோடு கள்ளக்கடத்தல் மன்னர்களின் உருவப் பொம்மைகளும் சேர்த்துக் கொளுத்தப்பட்டிருக்கின்றன.

இதனிடையே இந்தியப் பிரதமர் இந்திரா அவர்களிடமிருந்து 28.10.1974 மற்றும் 04.11.1974 ஆகிய நாட்களில் கழகத்தலைவர் அன்னை மணியம்மை யாருக்கு இரண்டு பதில் கடிதங்கள் அலட்சிய மனோபாவத்தோடு தாமதமாக வந்து சேர்ந்தன. 28.10.1974 பிரதமர் இந்திரா எழுதிய பதில் கடிதத்தில்,

"இந்தியா மட்டுமின்றி ஆசியா முழுவதும் 'தசரா' கொண்டாடப்படுகிறது என்றும், இதில் இனத்துக்கு எதிரானது ஏதுமில்லை என்றும் திராவிடர் கழகத்தை நிறுவிய தலைவர் பெயரிலேயே இராமன் இருக்கிறது என்றும், "இராவணலீலா" நடத்துவதைக் கைவிட்டு நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளில் கவனம் செலுத்துமாறும் அறிவுரை கூறியிருந்தார்.

04.11.1974 இல் மீண்டும் பிரதமர் இந்திராகாந்தி அன்னை மணியம்மையாருக்கு ஒருகடிதம் எழுதினார். அதில் 'இராமலீலா' குறுகிய இனப்பிரச்சனையோ, பிராந்தியப் பிரச்சனையோ இல்லை என்றும், மதச்சார்பின்மைக் கொள்கைக்கு முரணானது இல்லை என்றும் மீண்டும் கூறியிருந்தார். அதே நேரத்தில் கடவுள் மதத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் அவர்களது நம்பிக் கையை வலியுறுத்துவதற்கும் உரிமை உண்டு" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரண்டு கடிதங்களும் கழகத் தலைமைக்கு எந்த விதத்திலும் சமாதானம் கூறாமல் தாங்கள் நடத்திய இராமலீலா சரியானது எனவும் உங்களால் முடிந்ததைப்பார்த்துக்கொள்ளுங்கள் என சொல்லும் வகையிலும், எரியும் நெருப்பில் நெய் ஊற்றியதுபோல திராவிடர்களின் போராட்ட

உணர்வை சீண்டிப் பார்க்கும் வகையிலும் அமைந்திருந்தது. அதன் எதிரொலியாக அடுத்து 30.10.1974 இல் **"அன்போடும் உரிமையோடும்"** என்ற தலைப்பில் அன்னை மணியம்மையார் எரிமலை வெடித்தது போல் கழகத் தோழர்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

### அன்போடும் உரிமையோடும்

"அருமை இயக்கத் தோழர்களே மருத்துவமனையிலே இருந்து கொண்டே இதை நான் எழுதுகிறேன். நமது இலட்சியங்களை இதுநாள் வரை வெறும் அலட்சியத் தாலே கொன்று விடலாம் என்று கருதி வந்த டெல்லி ஆட்சியின் தலைவர்கள் இனி அது முடியாது என்பதை நல்ல வண்ணம் உணர்ந்து கொண்டார்கள் என்பதற்கு அடையாளம் நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு உடன் பதில் வந்திருப்பதே போதுமானது.

பிரதமர் மிகப்பெரிய பதவியில் உள்ளவர், என்றாலும் நமது தெளிவான கேள்விகளுக்கும் பதில் அளிக்கவோ அவருடைய மதச் சனாதன நடவடிக்கைகளை நியாயப் படுத்தவோ அவரால் முடியவில்லை. நமது நாட்டில் உள்ள நாலாந்தரப் பார்ப்பனர் வைதிகர்களின் வாதங் களை உள்ளடக்கியதாகவே அவர் கடிதம் இருக்கிறது. நமது தலைவர் தந்தை பெரியார் அவர்கள் வகுத்த லட்சியங்கள் வெற்றியை நோக்கி நடைபோடத் துவங்கிவிட்டன என்பதற்கு இவைகள் அச்சார அறி குறிகளாகும்.

எனது உடல்நிலை பற்றிக் கூட நான் கவலைப் படவில்லை தலைவர் அருமைத் தந்தையின் நினைவு நாளையொட்டி நமது இயக்கத் தோழர்கள், பகுத்தறிவு வாதிகள் இவர்களை கூட்டி மாபெரும் இன எழுச்சிப் பெருவிழாவாக "இராவணலீலா" நடத்தி அதில் நாம் திட்டமிட்டபடி காரியங்களைச் செய்தே தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம்."

### போராட்டத்துக்கு உ.பி, கோவா அமைப்புகள் ஆதரவு

28.11.1974 அன்று வெளியான அம்மாவின் அறிக்கை அய்யா அவர்களின் நினைவு நாளுக்கு மறுநாளை டிசம்பர் 25ஆம் நாளை "இராவணலீலா" நடக்கும் நாளாக அறிவித்தது. போராட்டம் என்னும் அறிவிப்பு வந்தது.

உ.பி.யிலிருந்து அகில இந்திய பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அமைப்பின் நிறுவனர், அம்மா அவர்களுக்கு ஆதரவு தெரிவித்ததுடன், "இராவணலீலா" நிகழ்ச்சியில் பங்கேற்கத் தோழர்களுடன் வருவதாகக் கடிதம் எழுதினார். கோவாவில் இருந்து "சத்திய சோதக் சமாஜம்" என்னும் அமைப்பு முழு ஆதரவு தெரிவித்தது.

உ.பி.யிலிருந்து அகில இந்திய பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைச் சாதியினர் சம்மேளனத்தின் நிறுவனர் திரு ஜி.எல்.சாகு மற்றும் திருவாளர்கள் நந்தலால்சிங் யாதவ், சாலிக்ராம் குரீல், சந்திரசேகர் ஆகியோர் "இராவணலீலா" வைபவத்திலே கலந்துகொள்ள இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே தமிழகத் தலைநகரம் வந்துவிட்டனர். அவர்களைத் தொடர்ந்து உ.பி.மாநிலம் கான்பூரிலிருந்து இராம் நாராயண்மாலி, டாக்டர் ஜலிஸ்வர் பிரகாஷ் ஆகியோரும் வந்து சேர்ந்தனர்.

நல்ல திருப்பம் ஏற்பட்டுவிட்டது. நாடெங்கும் "இராவணலீலா" பேச்சுதான். சென்னையை நோக்கிப் புறப்படத் தயாராகி விட்டோம்! தனித் தனிப் பேருந்துகள் பேசிவிட்டோம். இந்த இரயில்களில் இத்தனை இத்தனை பேர்கள் வருகிறோம் என்ற செய்திகளைத் தாங்கி வந்த கடிதங்களைப் பிரித்து படித்து மாளவில்லை.

திராவிடர் கழக சார்பில் எழுதிய கடிதங்கள் பிரதமர் எழுதிய கடிதங்கள் ஏடுகளில் வெளிவந்தன. "இராமலீலா"- "இராவணலீலா" பற்றிய விவாதங்கள் பரபரப்பாக பேசப்பட்டன. தமிழக சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் அனந்தநாயகி உள்ளிட்டவர்கள் "இராவண லீலா"வை தடைசெய்யக் கோரினார்கள். முதல்வர் கருணாநிதி "இராவணலீலா" பக்தர்கள் மனதை புண் படுத்தும் என்றால் "இராமலீலா" பகுத்தறிவாளர்கள் மனதை புண்படுத்தாதா? என்றார்.

தினத்தந்தி நாளிதழில் "நீங்கள் இராவணனை எரித்தால் நான் இராமனை எரிப்பேன்" என்ற கருத்துப் படம் அந்நாளில் பரபரப்பாக பேசப் பட்டது.

இராமன், இலட்சுமணன், சீதைக் கும்பல் தீயின் ருசி பார்க்கும் நாட்கள் மிகவும் நெருங்கி விட்டன. நாட்கள் நெருங்க நெருங்க எதிரிகளுக்குத் திகில் பிடித்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டது! கடைசி கட்ட முஸ்திபுகளிலே குதிக்க ஆரம்பித்துவிட்டனர். வாய் திறக்காது கிடந்த காஞ்சிசங்கராச்சாரியார் 'இராவணலீலா' வை எப்படியாவது தடுத்தாகவேண்டும்;இதனால் மதம் போகும் சித்தாந்தம் சாகும் என்றெல்லாம் புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

தமிழக சட்டமன்றத்திலோ 'இராவணலீலா' வைத் தடைசெய்யச் சொல்லி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கிடுகிடுத்தன. வடக்கிலோ பிரேம் சந்த்குப்தா என்பவரின் தலைமையின் கீழ் 'இராவணலீலா' எதிர்ப்புக் கமிட்டி அமைக்கப் பட்டு பிரதமரிடம் தூது சென்றது.

அகில இந்திய சமணர் தலைவரோ "தமிழக அரசே இராவணலீலா-வைத் தடைசெய்!" என்று அவசர அவசரமாக அறிக்கைவிட்டார். அகில இந்திய **'ராம்நாத் சம்பிரதாயா'** என்ற அமைப்பின் தலைவர் மகத்வைஷ்ணவதாஸ் என்பவர் அந்த அமைப்பின் சார்பிலே ஜனாதிபதியைச் சந்தித்து 'இராவணலீலா'வைத்தடை செய்ய ஜனாதிபதியின் செல்வாக்கை - அதிகாரத்தைப் பயன்படுத்தும்படிக் கெஞ்சினார்கள். தமிழக அரசு 'இராவணலீலா' வைத்தடை செய்யாவிட்டால் தமிழக அரசையே 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டுமாம் - அந்தக் கட்டம் வரை போய்விட்டார்கள்.

### முதல்வர் மற்றும் காவல்துறை உயர் அலுவலரின் முயற்சியும், நமது நிலையும்

*நீண்ட அவகாசமும் அளிக்கப்பட்டு இப்போது செயலில் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுக் காரியமாற்ற சில தினங்களே இருக்கும்போது இரு சாராருக்கும் அறிவுரை கூறினார் தமிழ்நாட்டு முதல்வர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் கீழே கண்ட பதிலை பதிவு செய்தார் கழகத் தலைவர் மணியம்மையார்.*

> "நமது மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய முதல்வருக்கு நாம் அன்புடன் தெரிவித்துக்கொள்வது, இராவணலீலா நடத்துவதை நாம் நிறுத்த வேண்டும் என்று விரும்பினால் இனி 'இராமலீலா' நடத்துவதில்லை; பிரதமரோ, ஜனாதிபதியோ இராமலீலாவில் கலந்துகொள்வதில்லை என்று எங்களுக்கு கூட அல்ல, தங்களிடத்தில் வாக்குறுதி ஒன்றினைத் தருவார்கள் என்றால் நாம் "இராவணலீலா" நடத்தி இராமனை எரிப்பதை நிறுத்துவது பொருள் உள்ளதாக இருக்கும்."

*இந்த உரையாடலை அன்றைய நாளில் இன்டியன் எக்ஸ்பிரஸில் நாளிதழில் எழுதி இருக்கிறார்கள். எப்படித் திரித்து எழுதினார்கள் தெரியுமா?*

*மணியம்மையார் இந்த 'இராவணலீலா'வை நிறுத்தவேண்டும் என்றால் மத்திய அரசாங்கத்தில் இருந்து உத்தரவு வந்தால்தான் கேட்பார்களாம். நாங்கள் சொல்வதை (தமிழக அரசு) ஏற்றுக் கொள்ளவில்லை என்று மாநில அரசுக்கும், திராவிடர் கழகத்திற்கும் மோதலை உருவாக்கும் வண்ணம் எழுதியிருந்தார்கள்.*

### காவல்துறைக்கு கழகத் தலைவரின் பதில் உரை

*இராவணலீலா நடைபெறுவதற்கு முதல் நாள் போராட்டத்தை எப்படியும் நிறுத்திவிட மய்ய அரசு கலைஞர் அரசுக்கு அழுத்தம் கொடுத்தது. எனவே காவல்துறை சென்னை மாநகர ஆணையராக இருந்த கே.ஆர்.ஷெனாய் அவர்களும், துணை ஆணையர் துரை அவர்களும் அம்மாவை வந்து சந்தித்தனர். சுமார் 1 மணிநேரம் அம்மாவிடம் பேசிப் போராட்டத்தைக் கைவிடுமாறு தங்கள் பகுதி வாதங்களை எடுத்து வைத்தனர். எதற்கும் மணியம்மையார் பணியவில்லை. காவல்துறை ஆணையர் அவர்கள் சொன்னார்கள்,*

> "நான் இதுவரை தந்தை பெரியார் அவர்களிடத்தில் பலமுறை வந்து வெற்றி பெற்றே இருக்கின்றேன். உங்களிடத்தில்தான் முடியவில்லை. இவ்வளவு பிடிவாதமாக நீங்கள் இருப்பது எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. அய்யா அவர்கள் இருந்தால் இவ்வளவு நேரம் எங்களை பேசக்கூட வைத்திருக்க மாட்டார்கள். ஏதாவது ஒப்புதல் கொடுத்து அனுப்பி இருப்பார்கள்"

*என்றார். அதற்கு பதில் உரையாக நாங்கள் எங்கள் கடமையைச் செய்கிறோம். நீங்கள் உங்கள் கடமை எதுவோ அதைச் செய்யுங்கள் என்று அமைதியாக எடுத்துரைத்தார்கள்.*

### போராட்டக்களம்

*24.12.1974 சென்னை பெரியார் திடல் கருஞ்சட்டைத் தோழர்களால் நிரம்பியது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இயக்கத் தோழர்களும் அய்யா நினைவு நாளிலே வீழ்ந்த இனம் மீண்டும் வீறுபெற சுயமரியாதை சங்கநாதம் செய்தனர். இறுதியாக கழகத்தலைவர் அன்னை மணியம்மையார் உரையாற்றும் போது, "ஆத்தூர் மாநாட்டுத் தீர்மானத் தைச் சுட்டிக்காட்டி சட்டத்திற்குட்பட்ட கத்தியைக் கழகத்தவர் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். அன்னையாரின் ஆணை உடல் சிலிர்க்க வைத்தது.*

### பொதுச் செயலாளர் கைது

*முதல்நாள் நிகழ்ச்சியின் முடிவாகக் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்கள் "நடக்கப்போகும் இராவணலீலா நிகழ்ச்சிக்கு முன்பே தாம் கைது செய்யப்பட்டாலும் படலாம் எந்த விலை கொடுக்கவும் நாம் தயாராக இருக்கிறோம்" என்றார். அவர் உரையாற்றியதைப் போலவே, பேசி முடித்ததும், வெளியே வந்தபோது பொதுச் செயலாளர் திரு.கி.வீரமணி அவர்களுடன் தோழர்கள் திருவாரூர் தங்கராசு, தோலி.ஆர் சுப்ரமணியன், தஞ்சை க.மா.குப்புசாமி, பொத்தனூர் சண்முகம், திருப்பத்தூர் ஏ.டி.கோபால், திருச்சி என்.செல்வேந்திரன், கோவை இராமக்கிருட்டிணன் ஆகியோர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு, "இராவணலீலா" நிகழ்ச்சி முடிந்த பிறகு 25.12.1974 இரவு 9.30 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.*

*அரசியலில் தி.மு.க. முகாம்களில் இருந்தாலும், சமுதாய இழிவைத் துடைக்கும் போரில் தொண்டராகத் தங்களை ஒப்படைத்துக்கொள்ள என்றும் தயார் என்று திரு.ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு.இராசகோபால் அவர்களும் எடுத்துரைத்தார்கள்.*

*இறுதியாகக் கழகத்தலைவர் அன்னையார் அவர்கள், "நாம் காலக்கெடு கொடுத்த நேரம் நெருங்கிவிட்டது. இதுவரை 'இராமலீலா' கூட்டத்தாரிடமிருந்து எந்த வித பதிலும் இல்லை. இனி 'இராமலீலா' நடத்துவதில்லை என்று இப்போது வாக்குறுதி கிடைத்தால் கூட 'இராவணலீலா' நடத்துவதை நிறுத்திவிடத் தயாராக இருக்கிறோம்" என்று எடுத்துரைத்தார்கள்.*

*திராவிடர் கழகம் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடும் கவலையோடும் எந்தப்பிரச்சனையையும் அணுகுகிறது என்பதற்கு அன்னையார் அவர்களின் இந்த பேச்சு ஒன்று போதுமே!*

### எரிந்தான் இராமன்!

*25.12.1974 அன்று பெரியார் திடலில், நடிகவேள் எம்.ஆர்.இராதா அரங்க மேடையில் கம்பீரமான தோற்றம் கொண்ட கழகத்தோழர்கள் அணைக்கரை டேப் தங்கராசு இராவணனாகவும், மேல்காவனூர் கே.பி.சாமிநாதன் கும்பகர்ணனாகவும், தஞ்சை சாமிநாதன் மேகநாதனாகவும்*

வேடமணிந்து வந்து நின்றபோது விண்ணைப் பிளக்கும் முழக்கங்கள்.உணர்ச்சி ஆரவாரங்களுக் கிடையே, அதுவரை தோழர்களால் இரகசியமான இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 அடி உயர இராமன், 17 அடி உயர இலட்சுமணன், 16 அடி உயர சீதை உருவ பொம்மைகள் இழுத்து வரப்பட்டன.

அன்னை மணியம்மையார் முதல் நெருப்பை வைக்க தோழர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு கொளுத்த **"தமிழ்நாடு தமிழருக்கே"** என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன; ஆம்! அன்னையார் தீ மூட்டிவிட்டார்! ஆரியக்கும்பல் இராமன், சீதை, இலட்சுமணன் கும்பல் எரிந்தது - எரிந்தது எரிந்து கொண்டே இருந்தது. எரிமலை வெடித்தோ - பூகம்பம் நிகழ்ந்ததோ - கடல் வெள்ளம் வந்ததோ! அப்பப்பா எத்தகைய முழக்கங்கள் எழுச்சிச் சங்கநாதங்கள்! "தந்தை பெரியார் வாழ்க! "அன்னையார் வாழ்க" தந்தை பணியை முடித்தோம்- முடித்தோம்!" என்ற எழுச்சி முழக்கங்கள் எங்கும் முழங்கின. உலக வரலாற்றி லே கூட இதற்கு ஈடான எழுச்சி நிகழ்ச்சிகளை விரல் விட்டு எண்ணுவது கூடக் கடினம்.



ஆயிரம் ஆயிரம் தாய் மார்கள்,தோழர்கள் எல்லாம் ஆளுக்கொரு "இராமன் சீதை - இலட்சுமணன்" படங் களைக் கையில் பிடித்துக் கொளுத்தித் தீர்த்தனர். பெரியார் திடல் மக்கள் கடலாய் விரிந்து பரந்து எழுச்சி அலைகள் புயலாய்க் கிளம்பிக் கிடந்தன. மத்திய அரசுத்துறையோ இதைத் தொலைக்காட்சிப் படம் எடுத்தது.

**அன்னையார் கைது**

காவல் துறையினர் வந்தார்கள் கழகத்தலைவர் அன்னையாரைக் கைது செய்கிறோம் என்றார்கள். நமது அன்னையார் 'மிக்க மகிழ்ச்சி' என்றார். சிறைப் பறவையான தந்தையின் வாரிசு அல்லவா? அதனால்தான் மகிழ்ச்சி என்றார்கள். அவ்வளவு தான் பெருமழையோடு புயலும் சேர்ந்தால் எவ்வளவு கிடுகிடுக்குமோ அவ்வளவு பெரியார் முழக்கப் பேரலைகள்! அன்னையார் வாழ்க! அன்னையார் வாழ்க!! என்ற இடிமுழக்கங்கள் அமளி துமளி செய்தன. கட்டுப்பாட்டின் கரைகள் உடையுமோ என்ற அச்சம் இருந்தாலும் கட்டு உடையவில்லை;தந்தை தந்து சென்ற பயிற்சியும், அன்னையார் அவர்கள் வலியுறுத்திய சொல்லும் அவர்களைச் சமன்படுத்தின.

அன்னையார் அவர்களோடு நீடாமங்கலம் அ.ஆறுமுகம், தஞ்சை இராஜகோபால், குடந்தை ஆர்.பி.ஸ்டாலின், சேலம் சித்தையன், பெண்ணா கரம் பி.கே.இராமமூர்த்தி, வழக்கறிஞர். எஸ்.துரை சாமி, கரூர் வீரண்ணன், கரூர் கே.கே.பொன்னப்பா, திருச்சி து.மா.பெரியசாமி, திருவண்ணாமலை எஸ்.கண்ணன், வில்லிவாக்கம் ஏ.தியாகராஜன், பெரியகுளம் ச.வே.அழகிரி, மற்றும் அரூர் வி.ஆர்.வேங்கன் உட்பட பதின் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

**பஞ்சாப் அம்பேத்கரிய அமைப்பின் ஆதரவு**

உத்திரப் பிரதேசத்திலிருந்து வந்த இராவணலீலா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சாகு அவர்கள் ஆற்றிய உரையில், "அடுத்த ஆண்டு 'இராவணலீலா' நாங்கள் நடத்துவோம். நீங்களும் வாருங்கள்" என்ற சூளுரையோடு வட நாட்டிலிருந்து வந்தவர்கள் சென்றனர்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் நகர் டாக்டர் அம்பேத்கர் இளைஞர் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் பி.டி.ஷந்தத் அவர்கள் கழகத்தலைவர் அன்னையார் அவர்கட்கு எழுதியுள்ள கடிதம் இது.

> "தாழ்த்தப்பட்ட சம்பூகன் தவம் செய்தான் என்பதற்காக அவனை வெட்டிய, இராமனின் உருவத்தைத் தீயிட்டுக் கொளுத்திய நிகழ்ச்சிக்கு எங்களுடைய கழகத்தின் சார்பாகப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சரியான முறையில், சரியாகச் செய்யப்பட்ட காரியமிது. உங்களுடைய கழகம் காட்டியுள்ள இச்சீரிய உதாரணத்தைப் பஞ்சாப் இளைஞர்களும் பின்பற்றத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தங்களுக்கு உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள், ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பிவிட்ட ஓர் புரட்சி நாளாக, வரலாற்றில் மறக்க முடியாத நாளாக என்றென்றும் நிலைத்திருக்கும். நம்முடைய மரியாதைக்குரிய தலைவர்களான தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் ஆகியவர்களின் இலட்சியங்கள் இவை. இந்தத் துணிவு மிக்க செயலுக்கு எங்களுடைய உளமார்ந்த பாராட்டுக்களை அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்."

இப்படி "இராவணலீலா" நிகழ்ச்சி இந்தியா வெங்கும் எதிரொலித்தது. அய்யா அவர்களுக்குப் பின்பு அன்னை மணியம்மையார் அவர்கள் தலைமையில் இந்த இயக்கம் எவ்வளவு சிறப்போடும், விழிப்போடும், கட்டுப்பாட்டோடும் வீறுகொண்டு எழுந்திருக்கிறது என்பதற்கு "இராவணலீலா" சிறந்ததோர் எடுத்துக்காட்டு!

**தொகுப்புக்கு உதவிய நூல்களுக்கு நன்றி:**


1. விடுதலை –
தந்தை பெரியார் 97ஆவது பிறந்தநாள் மலர்.
2. இராவணலீலா ஏன்? – தோழர் கி.வீரமணி
3.தொண்டில் உயர்ந்த தூயவர் அன்னை. ஈ.வெ.ரா. மணியம்மையார் – ந.க.மங்கள முருகேசன்.
4.'இராவணலீலா' தமிழ்நாட்டின் தேசிய விழா – ஈ.வெ.ரா.மணியம்மையார்



#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S



தாராபுரம் பூங்கொடி

# அடிமைகளைத் தேடும் 'ஆர்யா'க்கள்

காதலர் தினக் கொண்டாட்டம் களை கட்டுகிற பிப்ரவரி மாதத்தில் களம் கண்டிருக்கிறது "கலர்ஸ் தமிழ்" என்ற தொலைக் காட்சி. ஏற்கனவே சீரியல்களால் சிந்தை இழந்து கொண்டிருக்கும் தமிழக மக்களின் பொழுதுபோக்குச் சேனல்களின் எண்ணிக்கையில் ஒன்று கூடியிருக்கிறது. அவ்வளவு தானே என்று அதை கடந்து போயிட்டேன்.

இந்தச் சமயத்தில் தான் இணையதளத்தில் ஒரு விளம்பரம் வைரலாகப் பரவியது. பிரபல நடிகர் ஆர்யா திருமணம் முடிக்க விரும்புவதாகவும், பெற்றோர் பார்த்த பெண்ணை மணம் முடிக்க விரும்பவில்லை என்றும் தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தொலைபேசி எண்ணுடன் வெளியிட்டிருந்த விளம்பரம் தான் அது.

முன்ன, பின்ன அறிமுகமில்லாத ஆண், பெண் இருவரும் டீ குடிக்கிற கேப்பில் பார்த்துட்டு ஓக்கேன்னு சொல்றதைவிட இந்த அணுகுமுறை எவ்வளவோ பரவாயில்லைன்னு அறிவிப்பை பார்த்து நினைத்தேன். ஆனால் ஆர்யாவோ விண்ணப்பிக்கும் பெண்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து, தான் திருமணம் செய்யப் போகும் நிகழ்வானது கலர் தொலைக்காட்சியில் (நவீன சுயம்வரம்?). "எங்க வீட்டு மாப்பிள்ளை" என்ற பெயரில் ஒளிபரப்பாகும் என்றும் அறிவித்த போது மைல்டா ஒரு டவுட்டு வந்துருச்சுங்க. என் சந்தேகத்தைக் கிளியர் பண்ற மாதிரியே இந்த மனுசன் காசுக்கு சோடை போயிட்டேன்னு நினைத்து விடாதீர்கள், வாழ்க்கைத்துணையைத் தேடுவதற்காக மட்டுமே இந்த ஏற்பாடு என்று சுயவாக்குமூலம் வேறு கொடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ளக் கிட்டத்தட்ட 17,000 பெண்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும், 8000 பேர் அதிகாரப்பூர்வ இணையதள முகவரியில் விண்ணப்பித்ததாகவும், இதிலிருந்து 16 பெண்களை (எந்த அடிப்படையில்) தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய நடிகையும் ஆர்யாவின் தோழியுமான சங்கீதா தெரிவித்தார்.

என்னால் நம்பவே முடியவில்லை. நிழல் உலகில் வலம் வரும் 37 வயதான நடிகர் ஆர்யாவைத் திருமணம் செய்து கொள்ள நிஜமாகவே 17,000 பெண்கள் (19 வயது பெண் உட்பட) பலர் முன் வந்திருக்கிறார்களா? ஏன் கேட்கிறேன் என்றால் அரசு உத்தியோகத்தில் இருக்கும் எங்க குடும்ப நண்பருக்கு தமிழ்நாட்டில் ஒத்த புள்ளைகூட கிடைக்காம கேரளா கட்டி பொண்ணுப் பார்க்க போன காட்சி கண் முன்னாடி நினைவுக்கு வந்துச்சுங்க. அதான்.

பத்தாததுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர் மாடலிங் துறையைச் சேர்ந்தவர்களாக இருப்பது வேறு கூடுதல் சந்தேகத்தைத் தருகிறது. பாலிவுட்டில் நடிகை மல்லிகா ஷரோவத் பங்கு பெற்ற *'The Bachelorette India'* நிகழ்ச்சியில் மல்லிகாவுக்குத் துணையாக தேர்ந்தெடுக்கப்பட்ட 'விஜய்சிங்' கை அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. (ஒரு வருடத்துக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது அந்நிகழ்ச்சியின் ஒப்பந்தம்.) ஒருவேளை இதைப் போல் 'நவீன சுயம்வரம்' 'கலர்ஸ் தமிழ்' தொலைக் காட்சியை ப்ரோமோட் பண்ணுவதற்கான நிகழ்ச்சியா அல்லது ஆர்யா மெய்யாலுமே பெண் துளாவுகிறாரா?

இந்த நிகழ்ச்சிக்காக, இராஜஸ்தானில் பிரமாண்டமாக ஒரு அரண்மனையைப் பிடித்துப் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. ஆர்யா தனக்கு வரப்போகும் மனைவியை ராணி போல் வைத்துக்கொள்வேன் என்பதற்கான குறியீடுதான் இந்த அரண்மனை என்றுதான் நிகழ்ச்சியைத் தொடங்கினார். ஆனால் ஆர்யாவுக்கு மனைவியாகிறவர் ஒரு சராசரிப் பொண்ணாகக்கூட வாழ முடியாது என்பதைத் தான் அரங்கேறிய அத்தனை நிகழ்வுகளும் நமக்கு உணர்த்துகிறது.



#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

இந்த 16 பெண்களும் அனுதினம் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஆர்யாவை இம்ப்ரஸ் பண்ண வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறார்கள். பாட்டு பாடுவது, நடனம் ஆடுவது, சமையல் செய்து பரிமாறுவது, காதல் கவிதைகள் எழுதுவது, ஆர்யாவுக்குப் பிடித்த பொருளைத் தேடி எடுப்பது, ரசனையாக உடை உடுத்தி 'ராம்ப் வாக்' போவது எனப் பட்டியல் நீள்கிறது.

இது மட்டுமல்ல தற்காப்புக் கலைகள் கற்றுக்கொள்வது முதல் தனித்திறமைகள் வெளிப் படுத்துவது வரை, வகைவகையான விஷயங்கள் வரிசையாக அணிவகுக்கின்றன. எனக்கு என்னமோ இதைப் பார்த்தா கல்யாணத்துக்குப் பொண்ணு பார்க்கிற மாதிரி தெரியலை...அடுத்த படத்துல நடிக்க ஹீரோயின் துளாவுகிற மாதிரியே இருக்கு.

பழைய ஸ்டீரியோ டைப் விஷயங்களான பெண்களை ஆடச்சொல்றது, பாடச் சொல்றது, Flames போட்டுப் பார்ப்பது என அசட்டுத்தனம் பண்ணிட்டு இருக்கிறாரே? கோட்டு சூட்டு போட்டு, நுனி நாக்கு ஆங்கிலம் பேசி, கோடிகள் சம்பாதித்து என்ன பிரயோஜனம் மனுசன் இப்பத்த டிரெண்டுக்கு வரவே இல்லையே, அந்த காலத்துலயே இருக்காறே! முதல்ல ஆர்யாவுக்குப் பொண்டாட்டியா ஆகப் போகிறேன்னு கிளம்பினாங்களே...அவங்களச் சொல்லணும். இப்பெண்களுக்கு சுயமரியாதை என்பது எள்ளின் முனையளவு கூட இல்லை. 'கலர்ஸ்தமிழ்' தொலைக்காட்சியின் சுலோகன் என்னவோ "இது நம்ம ஊரு கலரு" (The Colors Of Our Land) தான். ஆனால் எனக்கு மட்டும் ஏனோ அது காவிக்கலராகவே தெரிகிறது.

தினசரி நடைபெறும் நிகழ்ச்சிகளில் அன்று தன் மனம் கவர்ந்த ஒருவரையோ அல்லது இரண்டு, மூன்று பேரையோ "டோக்கன் ஆஃப் லவ்" என்று பரிசு கொடுத்து டேட்டிங் கூட்டிப் போகிறார். ஆர்யா தனிப்பட்ட முறையில் ஒரு பெண் அல்ல ஓராயிரம் பெண்களுடன் டேட்டிங் போவது பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால், தன்னுடைய தனிப்பட்ட விஷயத்தை ஊடகத்தின் வாயிலாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிற போது அந்நிகழ்ச்சிக்கு அவர் தான் தார்மீகப் பொறுப்பு என்பதை அவர் உணரத் தவறிவிட்டார்.

இதில் இருதரப்பினரின் ரசனைகள் பற்றியும், முதல் காதல் பற்றியும், ப்ரேக் அப் பற்றியும், இதற்கு முன் எத்தனை ரிலேசன்சிப்பில் ஆர்யா இருந்தார் தொடங்கி, எத்தனை குழந்தை பெற்றுகொள்வது வரை அனைத்தையும் வெளிப்படையாகப் பேசு கிறார்கள். (இதில உனக்கென்னம்மா பிரச்சினை என்கிற உங்கள் மைண்ட் வாய்ஸ் எனக்குக் கேட்கிறது) ஆர்யா மீது அதீதக் காதலில் இருப்பதாக அநேகப் பெண்கள் குறிப்பிடுகிறார்கள். சிலர் தன் காதலுக்காகவும்,ஆர்யாவுக்காவும் என்ன வேண்டு மானால் செய்வேன் என்றும் தீவிரமாகக் கூறுகிறார்கள். ஒரு சில பெண்களே கம்முன்னு இருந்தாலும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் சங்கீதா ஆர்யாவை இம்ப்ரஸ் பண்ணுங்கள் என்று அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

காதலுக்காகவோ, திருமணத்திற்காகவோ பெண் தன்னுடைய சுயத்தை இழந்து, ஆணுக் காகத் தன்னை மாற்றிக்கொள்வதென்பது தேவை யில்லாத ஒன்று. ஏனென்றால் காதலும் சரி, திருமணமும் சரி ஒருவர் மட்டுமே முடிவு எடுக்கும் விசயம் இல்லை. பெண் மட்டுமே ஆணை அனுசரிக்க வேண்டியதும், ஆண் தன் போக்கில் நடந்து கொள்வதும் தான் பல நூற்றாண்டுகளாக இங்கு நடந்து வருகிறது. இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து, விட்டுக் கொடுத்து, அனுசரித்துப் போனால் தான் உறவு நீடிக்கும்.

அதை விடுத்து ஆர்யாவுக்காகத் தன்னை மாற்றிக் கொள்கிறேன் என்று கூறும் இப்பெண்கள் ஆணின் (ஆர்யா) நுகர்வுக்கான ஒரு பண்டமாகத் தான் மாறுகிறோம் என்பதைக் கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆர்யாவை மணம் முடிக்கக் கிளம்பியவர்களை விட்டுவிடுவோம். அவர்களையும் அந்த நிகழ்ச்சியையும் பார்த்து இந்தச் சமுதாயம் மீண்டும் மீண்டும் சீரழிவுப் பாதையிலேயே செல்லும் என்பது தான் எனது கவலை.

இந்த நிகழ்ச்சியிலிருந்து எலிமினேட் ஆகும் பெண்கள் உணர்ச்சி வசப்படாமல் இதை இலகுவாக எடுத்துக்கொள்வார்களா? அப்படி எளிதில் இவ் விசயத்தை எளிதில் கடந்து போகும் வல்லமை இல்லாத பெண்களுக்கு ஆர்யாவாகட்டும், கலர்ஸ் தமிழ் தொலைக்காட்சி ஆகட்டும் என்ன வழிமுறை வைத்திருக்கிறார்கள்? அவர்களின் மனவலிகள் காட்சிப்படுத்தப்படுமா? எவருடைய மனவலி யையும் விற்றுப் பிழைக்கக்கூடாது என விட்டு விடுவார்களா? அல்லது இழப்பைத் தாங்க இயலாமல் வாடுவது போல காட்டப்பட்டு டி.ஆர்.பி. கள் உயர்த்தப்படுமா? இப்படிப் பல கேள்விகள் உள்ளன.

ஒரு ஆணுக்காக, ஒரு ஆணுடன் வாழப் போகும் வாழ்க்கைக்காக, ஒரு பெண் அவள் பிறந்த நாளில் இருந்து அடக்கப் படுகிறாள். வரப்போறவனுக்குப் பிடிச்ச மாதிரி வாழணும். அவனுக்கேத்த மாதிரித் தன்னை மாத்திக்கணும். இதைத்தான் பல ஆயிரம் வருடமாக இந்து மதமும், சம்பிரதாயங்களும் நமக்குச் சொல்லிச் சொல்லித் தந்திருக்கின்றன.

ஆணுக்காகவே நாம் பிறந்தோம். ஆண் இல்லாவிட்டால் வாழ முடியாது. வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டுமானால் ஆணை நாம் இம்ப்ரஸ் பண்ணியே ஆகவேண்டும் என்ற இழிவான, அடிமை மனநிலையை இந்தக்காலத்துப் பெண்கள் மனதிலும் திணிப்பதைத் தான் இந் நிகழ்ச்சி செய்கிறது.

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S



வேணி

# மனசுக்கும் உடலுக்கும் இடையே நடக்கும் போராட்டம்

## தன்பால் இணையர் தீபா - வெண்ணிலா நேர்காணல்

காட்டாறு ஏடு, ஜாதி, மதம், சடங்குகள் கடந்த காதலர்கள் - கணவன் சம்மதத்தோடு அல்லது மனைவி சம்மதத்தோடு நடந்த மறுமணங்கள் - தனித்து வாழும் வீரமுள்ள பெண்கள் - குழந்தை பிறப்பை மறுத்த பெண்கள் - தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் தாங்களே முடிவெடுத்து வாழும் பெண்கள் என ஏராளமான முன்னோடிகளை அறிமுகம் செய்திருக் கிறது. முதன் முறையாக, இரண்டு பெண்களுக்கிடையே உள்ள காதலை அறிமுகம் செய்கிறோம்.

ஜாதியையோ, மதத்தையோ, சடங்குகளையோ கடந்து இணைந்து வாழ்பவர்களுக்குக்கூட சமுதாயத்தில் ஏதோ ஒரு பிரிவினர் மரியாதையையும், பாதுகாப்பையும் வழங்குகின்றனர். அவர்களுக்கு ஒரு சமூக அந்தஸ்து கிடைக்கிறது. ஆனால் தன்பால் இணையர்களுக்கு சமுதாயம் மிகப்பெரிய அவமானத்தையும், அச்சத்தையும் கொடுக்கிறது. அதற்கு இணையாக, முற்போக்காளர்களின் புறக்கணிப்பும் அத்தகைய இணையர்களுக்கு எதிராக இருக்கிறது. முற்போக்கு அமைப்புகளில் உள்ளவர்கள் முதலில், தன்பால் இணையர்களைப் பாராட்டி விழா எடுப்பதையும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதையும் கூடுதல் கடமையாகக் கொள்ளவேண்டும். ஊடகங்களில் பணியாற்றும் நமது தோழர்கள், காதலர்நாட்களில், தன்பால் இணையர்களின் காதலுக்கும் கொஞ்சம் மரியாதை கொடுக்க முயற்சி எடுக்கவேண்டும்.

தன்பால் தேர்வு, தன்பால் இணையரைக் குறிப்பதற் காகக் கூறப்படும் ‘ஓரினச்சேர்க்கை’ என்ற சொல் கூட இவர்களைக் கொச்சைப்படுத்துவதாக உள்ளது. ‘உடல் சேர்க்கை’க்கு மட்டுமேதான் இவர்கள் இணைந் துள்ளார்கள் என்று புரிந்துகொள்ள வைப்பதே இந்தச் சொல்லின் பயன்பாடு. மாற்றுப் பாலினத்தைத் தேர்வு செய்பவர்களுக்கு எந்த ஊடகமும், சமுதாயமும் ‘மாற்றினச் சேர்க்கையாளர்’ என்ற அடையாளத்தைக் கூறாத நிலையில் எதற்காக இவர்களுக்கு மட்டும் ‘ஓரினச்சேர்க்கையாளர்’ என்ற பட்டம்? இனியாவது, ஓரினச்சேர்க்கை என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், அந்த நிலையைக் கொச்சைப்படுத்தாத ஏதோ ஒரு சொல்லைப் பயன்படுத்துங்கள். மிகவும் துணிச்சலுடன் தங்களது காதலை வெளிப்படுத்தியுள்ள தோழர்களுக்கு எதிர்காலத் தலைமுறையின் சார்பில் மனங்கனிந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவிக்கிறோம்.

**தோழர் வெண்ணிலா**

நான் திருச்சி மாவட்டம். பி.சி.ஏ. படித்துள்ளேன். அம்மா, அப்பா, அண்ணன், இரண்டு தம்பிகள் என நான்குபேர் என்னுடன் பிறந்தவர்கள். அப்பா சரியாக வேலைக்குப் போக மாட்டார், குடிகாரர். அம்மாதான் வேலைக்குப் போய் கஷ்டப்பட்டு அனைவரையும் படிக்க வைத்தார். நான் கல்லூரி மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் போதே எனக்குத் திருமணம் ஆகிவிட்டது.

**தன்பால் இணைவில் ஆண், பெண் மனநிலை இருக்கும்? அதில் நீங்கள் யார்?**

எனக்கு ஆண்மனநிலை.

**தோழர் தீபா:** நானும் திருச்சி மாவட்டம். அம்மா, அப்பா மற்றும் அண்ணன், அக்காள் நான் என மூன்றுபேர். பி.எஸ்.சி. படித்துக்கொண்டிருந்தேன். அண்ணன் ஐ.டி.ஐ. பாதியிலே நின்றுவிட்டான். அக்கா நர்ஸிங் முடித்து இருக்கிறாள். அக்காவிற்குத் திருமணம் ஆகிவிட்டது.

**உங்கள் இருவரிடையே நட்பு எப்போது எப்படி ஏற்பட்டது?**

**தீபா:** ஒரே காலேஜ்ல நான் முதலாம் ஆண்டும், வெண்ணிலா மூன்றாம் ஆண்டும் படித்துக் கொண்டிருந்தோம். வெண்ணிலாவை நான்தான் முதலில் பார்த்தேன். வெண்ணிலா அவுங்க



Kitchen DEMOLISH VEDIC TRADITION'S

தோழிகளிடமும் சரி, தெரிஞ்சவங்க, தெரியாதவங்க எல்லோரிடமும் ஜாலியாகப் பேசுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனாலேயே வெண்ணிலா விடம் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதிலிருந்து எங்கள் நட்பு ஆரம்பித்தது.

**வெண்ணிலா உங்களின் முதல் திருமண வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்கள்?**

**வெண்ணிலா:** *அம்மாவோட சித்தப்பா பையனுடன் என் திருமணம் நடந்தது. ஏழு வருடமாக அம்மாவுடன் தாத்தாவும், அவுங்க தம்பியும் பேசாமல் இருந்தாங்க, இந்தத் திருமணத்தின் மூலமாகத்தான் பேச ஆரம்பித்தனர். திருமணம் ஒரே மாதத்தில் ஏற்பாடாகி விட்டது. நானும் தீபாவும் பழக ஆரம்பித்ததை எப்படி வீட்டில் சொல்வ தென்று தெரியவில்லை. வீட்டில் திருமண ஏற்பாட்டிற்கு எதிராக எதுவும் சொல்ல முடிய வில்லை. இப்போது இருக்கும் தெளிவு அப்போது என்னிடம் இல்லை. நானும் விளையாட்டுத் தனமாகத் திருமணத்திற்குச் 'சரி' என்று சொல்லி விட்டேன்.*

*ஆனால், அந்தத் திருமண வாழ்க்கையில் என்னால் நீடிக்க முடியவில்லை. காரணம் என்னதான் அவர் சொந்த மாமாவாக இருந்தாலும் இன்னொருவருடன் பழகிய பிறகு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அனைத்து விஷயங்களிலும் பிடிக்க வில்லை. நான் எனது கணவரிடம் தேர்வு முடியும் வரை நமக்குள் ஒரு இடைவெளி இருக்கட்டும் என்று கூறினேன். அவரும் சரி என்றார். ஆனால் அவர் அதைப்பற்றி வெளிப்படையாக அனைவரிடமும் பேச ஆரம்பித்தார். முதலில் பொறுமையாகப் பேசிய அவர், போகப்போக கடுமையாக நடந்துகொள்ள ஆரம்பித்தார். ஒவ்வொரு இரவும் ஒரே அறையில் இருந்துகொண்டு மேலே கை வைக்காத அளவிற்கு பார்த்துக்கொள்வது ரொம்ப கஷ்டம். மூன்று மாதம் தொட விடவில்லை.*

*ஒருநாள், எனது அண்ணனுக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி என் ஊருக்கு தாத்தாவும், அவரும் சென்றனர். இந்தச் சமயத்தில் நானும் இங்கே இருப்பவர்களிடம் ஊருக்குப் போவதாகச் சொல்லி விட்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன்.*

**தீபாவுடன் கொண்ட காதல் வீட்டிற்குத் தெரிந்தபின் என்ன நடந்தது?**

**வெண்ணிலா:** *வீட்டை விட்டு வெளியில் வந்தவுடன் தீபாவிடம் மட்டும் சொல்லிவிட்டு, திருச்சி சென்ட்ரல் பஸ்ஸ்டாப்பிற்குச் சென்று விட்டேன். நேரமாகியதால் வீட்டிலிருந்து போன் வந்து கொண்டே இருந்தது. வீட்டில் பயப்படுவார்கள் என்று நினைத்து, வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன் என்று கூறினேன். ஆனால், மணி 6 ஆகிவிட்டது. அதன் பிறகு எங்கே போவதென்று தெரியவில்லை. பயமாக இருந்தது. தீபாவிடம் போன் பண்ணிக்கேட்டேன். அவள் என் பெரியம்மா வீட்டிற்குப் போ என்று சொன்னாள். அங்கே போகவும் பயமாக இருந்தது.*

*உடனே ஹோட்டல்ல ரூம் எடுக்கலாம் என்று அருகில் உள்ள ஹோட்டலில் கேட்டபோது நான் தனியாக இருந்ததால் முதலில் ரூம் தரமுடியாது என்று கூறிவிட்டார்கள். பின்பு என் கழுத்தில் தாலி இருந்ததால் அவர்களே கூப்பிட்டு என் ஐ.டி கார்டை கேட்டு அதைப் பார்த்தபின் தனி அறை கொடுத்தனர். இரவு முழுக்க என் வீட்டிலிருந்து போன் வந்து கொண்டே இருந்தது. அதனால் சிம்கார்டை மாற்றி தீபா என்னிடம் கொடுத்த சிம்கார்டை போட்டு அவளிடம் இரவு முழுவதும் பேசினேன். இரவு எங்கள் வீட்டில் போலிஸ் ஸ்டேஷன்ல என்னைக் காணவில்லை என்று புகார் கொடுத்தனர்.*

*தீபாவும் கிளம்பி வந்துவிட்டாள். இரண்டு பேரும் சேர்ந்தே மதுரைக்குச் சென்றோம். அங்கே ஒரு ஆட்டோக்கார அண்ணன் மூலமாக அவர்களின் பெரியம்மா வீட்டில் வாடகைக்கு வீடு ஏற்பாடு செய்து கொடுத்தார். ஒரு வாரம் கழித்து வேலைக்குச் செல்வதற்கு ரெஸ்யும் ரெடி பண்ணீட்டோம். அந்த நேரத்தில்தான் எங்களைத் தேடி காவல்துறையினர் வந்துவிட்டார்கள். சிம்கார்டை வைத்து கண்டுபிடித்திருக்க வேண்டும். ஸ்டேஷனில் இருவரையும் அவரவர் வீட்டுக்கு அனுப்பினார்கள். ஸ்டேஷன்ல எஸ்.ஐ.மேடம், நான் எழுதிய டைரியை படித்துப் பார்த்தார். பின் "உன் கணவர் ஏற்றுக்கொள்ளத் தயார் அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு சேர்ந்து வாழு" என்று சொல்லி என் கன்னத்தில் அறைந்தார்கள். அவர்கள் சொன்ன பிறகுதான் 'லெஸ்பியன்' என்ற வார்த்தையே எனக்குத் தெரியும். ஸ்டேஷன்ல சொன்ன பிறகுதான் நெட்ல தேடினேன். எங்களைப் போல் நிறையப் பேர் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். எங்கள் வீட்டில் யாருக்கும் இதைப் பற்றித் தெரியாது.*

*அதன் பிறகு வீட்டில் மிகவும் கண்டிப்புடன் நடந்துகொண்டனர். என் செல்போனையும் பிடுங்கிக் கொண்டனர். எனக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தது. வீட்டிற்குத் திரும்பி வரக்கூடாது என்று நினைத்தேன். ஆனால், கூட்டி வந்துவிட்டார்கள். சொந்த ஊரிலும், திருமணமான ஊரிலும் தெரிந்து அசிங்கமாகிவிட்டது. பிறகு தீபாவுடன் பேசமுடியவில்லை. அவளது வீட்டிலும் போனை வாங்கி வைத்துக்கொண்டனர்.*

*சில நாட்களுக்குப் பிறகு, தீபாவுடைய தோழி ஒருவர் என்னுடைய கணவர் போனுக்கு போன் பண்ணினார். அவள் மூலமாகத் தீபாவிடம் பேச வாய்ப்பு கிடைத்தது. தீபா வீட்டில் தன் பெண்ணிற்குக் கெட்ட பெயர் வராத அளவிற்கு கடத்திச் செல்லப்பட்டதாக ஊரில் சொல்லி வைத்துவிட்டனர். திரும்பவும் அவளைக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். தோழிகள் மூலமாக நான் திரும்பவும் தீபாவிடம் பேச ஆரம்பித்தேன்.*

*அந்த நேரத்தில், எங்கள் ஊரில் என் பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று வரச் சொன்னார்கள். நான் பாட்டியைப் பார்க்க*



Kitchen DEMOLISH VEDIC TRADITION'S

ஊருக்குக் கிளம்பினேன். ஊருக்குச் சென்ற பின் சித்தி வீட்டுக்கு என்னை கூப்பிட்டாங்க, நான் வரமுடியாது என்று கூறினேன். ஏனென்றால் நான் வீட்டை விட்டுப்போனது எல்லோருக்கும் தெரியும். எனவே, உறவினர் வீட்டிற்கு வரமாட்டேன் என்றேன். அவர் மட்டும் சென்றுவிட்டு அப்படியே அவரது ஊருக்குச் சென்றுவிட்டார். அது நல்லது என்று நினைத்துக் கொண்டு நான் அம்மா வீட்டிலேயே இருந்துகொண்டேன். திரும்பவும் அவரது வீட்டிலிருந்து என்னைக் கூப்பிட்டாங்க, நான் போகவில்லை.

எங்கள் வீட்டிலும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். என்மேல் பாசமா இருந்த அண்ணன் கூட வீட்டை விட்டுப் போகச் சொல்லி அடித்தான். என் அண்ணன் என் அம்மாவிடம் இவள் திருந்த மாட்டாள், சாப்பாட்டில் விஷம் வைத்துக்கூட சாகடித்துவிடு என்று சொல்லிவிட்டு சென்னை சென்றுவிட்டான். கணவர் ஊரிலிருந்து ஒரு பத்துப்பேர் வந்தாங்க. எங்களின் சொந்தம்தான். என்னைப் பேசி அழைத்துச் செல்ல வந்திருந்தார்கள். என் அம்மா எதுவும் பிரச்சனை ஆகிவிடும் என்று பயந்து என் காலிலெல்லாம் விழுந்து அழுதாங்க. அவங்க கூட போய்விடு என்று கெஞ்சினார்கள். போனால்... ஒவ்வொரு நாள் நைட்டும் எப்படி இருக்கும் என்று நினைத்தாலே பயமாக இருந்தது. அதனால் நான் வரமுடியாது எனச் சொல்லி விட்டேன்.

வீட்டிலேயே இருக்கவும் பிடிக்கவில்லை. பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தது. அதன் பிறகு தீபாவின் பெரியப்பா உதவியோடு வீட்டை விட்டு வெளியில் வந்து, பெரியார் தொண்டர் பிச்சை அய்யா வீட்டில் தங்கினேன். அப்பொழுது அய்யா அங்கு இல்லை. வெளியூர் சென்றிருந்தார். அந்தச் சமயத்தில்தான் தீபாவோட பெரியப்பா என்னை மிஸ்யூஸ் செய்ய நினைத்திருக்கிறார் எனத் தெரிந்தது. பிறகு அவரிடம் மிகவும் கவனமாக இருந்தேன்.

**பெரியாரியல்வாதியான பிச்சை அய்யா உங்கள் நிலையை எவ்வாறு கையாண்டார்?**

வெளியூரிலிருந்து திரும்பி வந்த பெரியார் தொண்டர் தமிழ்ச்சுடர் (எ) பிச்சை அய்யா அவர்கள், "உனக்கு என்ன பிரச்சனை என்று கேட்டார், பொறுமையாக. நான் ஒரு பெண் பொதுவாக ஆணைக் காதலிப்பாள், ஆனால் நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று மட்டும்தான் கூறினேன். அதைப் புரிந்துகொண்ட அய்யா, "அவ்வளவு தானே, நீங்கள் உங்கள் விருப்பப்படி வாழ்வதால் யாருக்கு என்ன நஷ்டம். காதல் என்பது பொதுவானது, அது ஆண்மேல் வந்தால் என்ன, பெண்மேல் வந்தால் என்ன! வாழ்க்கை என்பது மகிழ்ச்சியும் திருப்தியும் தான். அது யாருடன் வாழ்ந்தால் கிடைக்கும் என்று மனம் சொல்கிறதோ, அவருடன் வாழ்வதில் எந்த தவறுமில்லை என்றும், உனது வாழ்க்கை முறையிலும் எந்த தவறில்லை" என்றும் கூறினார்.

அவர் பேசிய அனைத்து வார்த்தைகளும் எனக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. பிறகு அய்யா வீட்டின் மாடியிலே என்னைத் தங்க வைத்து, அவரது மகளைவிட மேலாக என்னைப் பார்த்துக் கொண்டார். நிறைய புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்வார். அதில் பலமுறை படிக்கச் சொல்வது "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற புத்தகம். அய்யா வீட்டிலிருந்தே வேலைக்குச் சென்று கொண்டிருந்தேன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் என்னைப் பல பொது கூட்டங் களுக்கு அழைத்துச் செல்வார். கார் ஓட்டக் கற்றுக் கொடுப்பார். நான் உயிருடன் இருப்பதற்குக் காரணமே அய்யா தான். அவர் இல்லையென்றால் நான் உயிருடன் இருந்திருப்பேனா என்பதே கேள்விக்குறிதான்.

**மீண்டும் தீபாவைத் தொடர்பு கொண்டீர்களா?**

என் நினைவிலேயே தீபா இருந்ததால் அவளது படிப்பு பாதியிலேயே நின்றது. என்னுடன் வந்ததால் நிறுத்திவிட்டார்கள். நான் அய்யாவிடம் சொல்லி அவர்கள் வீட்டில் பேசி படிக்க ஏற்பாடு செய்யச் சொன்னேன். தீபா நீயும் வா என்றாள். உன்னைப் பார்த்து நாளாகிவிட்டது என்றாள். எனக்குப் போகப் பயமாக இருந்தது. ஏற்கனவே நிறையப் பிரச்சனை. இருந்தாலும் நானும் சென்றுவிட்டேன். அங்கே தீபாவின் அத்தை சத்தம் போட்டு எல்லோரையும் வரச் சொல்லிவிட்டார்கள். அய்யாவால் சமாளிக்க முடியவில்லை. அங்கிருந்த வர்கள் நாங்கள் என்ன நோக்கத்திற்காக வந்துள்ளோம் எனத் தெரிந்து கொள்ளாமல் எங்கள் இருவரையும் திட்டினார்கள்.

**தீபா**

எங்கள் ஊர்த் தலைவர் வந்து எங்கள் இருவரையும் அடித்துத் திட்டினார்கள். நான் ரூமில் போய் கதவைப் பூட்டிக்கொண்டு அவர்களை அடித்தால் எதாவது செய்து கொள்வேன் என்று மிரட்டினேன். ஊர்த் தலைவரம்மா மட்டும் என்னிடம் பேசினார்கள். நான் சொன்னவுடன் என்னை அடித்து இது அசிங்கமா இல்லையா எனத் திட்டினார்கள். என்னை எதாவது சொல்லு என்றார்கள். நான் அமைதியாக இருந்தேன். நான் எதுவும் பேசாததால் எங்களை ஸ்டேஷன் வரச்சொல்லி பேசி எழுதிக் கேட்டாங்க. நான் பார்க்க மாட்டேன், பேச மாட்டேன் என்று எழுதித் தரச் சொன்னார்கள்.

**வெண்ணிலா**

நாங்க ஸ்டேஷன்ல இருக்கும்போது எங்க அம்மா, அப்பாவுக்குப் போன் பண்ணிச் சொல்லி அவுங்களும் வந்துட்டாங்க. என்னை வீட்டுக்குக் கூப்பிட்டாங்க. நான் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அய்யா நீ வேலைக்குப் போ, மைண்ட ரிலாக்ஸ் பண்ணு. இனி தீபாவை வீட்டில் பார்க்க முயற்சி செய்யாதே என்றார். புத்தகங்கள் படிக்கச் சொன்னார். கொஞ்ச நாள் பொறுமையாக



#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

இருங்கள் என்று சொன்னார். நாங்கள் இருவரும் போனில் வீட்டிற்குத் தெரியாமல் பேசிக் கொண்டோம். அவர்கள் வீட்டில் தெரியும்போது தீபாவை அடித்தார்கள். போனைப் பிடுங்கி வைத்துக் கொண்டார்கள். நான் மீண்டும் போன் வாங்கிக் கொடுத்தேன். தீபாவின் தோழி மூலமாக அடிக்கடி பேச முடியாவிட்டாலும், எப்போதாவது பேசிக் கொள்வோம்.

**உங்கள் கணவர் வீட்டில் ஏதாவது பிரச்சனை செய்தார்களா?**

சிறிது நாள் சென்றது. ஒரு நாள் திடீரென என் கணவர் வீட்டில் மீண்டும் பேசுவதற்காக என்னை வரச் சொன்னார்கள். எங்க அம்மாவும் வரச் சொன்னாங்க. என் கணவர் நீ வந்து பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டுப் போ. எனக்கும் உன்னுடன் வாழ விருப்பமில்லை. நீயே என்னை ஏற்றுக் கொண்டாலும், நான் உன்னை ஏற்கமுடியாது என்று சொன்னார். அவர் பேச்சை நம்பி அங்கு சென்றேன். அந்த சமயத்தில் அய்யா ஊரில் இல்லை. போனில் நான் அவரிடம் பேசினேன். போக வேண்டாம் என்றார். நான் தான் பிரச்சனையை முடிக்கலாம் என்று நினைத்து ஊருக்குப் போனேன்.

ஊர்த்தலைவர் இன்னும் நிறையப் பேர் இருந்தாங்க. என் கணவர் என்னிடம் பேசியதை அனைவரிடமும் அப்படியே மாற்றிப் பேசினார். அவர்கள் என்னை மிரட்டினார்கள். ஊர்க்காரர்கள் இரண்டரை லட்சம் கொடுத்துவிட்டுப் பிரிந்து போ என்றார்கள். நான் எனது பிரச்சனையை எப்படி எல்லோரிடமும் சொல்வது எனத் தெரியாமல், எனது உடம்பில் பிரச்சனை உள்ளது என்னைப் பிரித்து விடுங்கள். நானே கையெழுத்துப் போட்டுத் தருகிறேன் என்றேன். அதற்கு, ஊர்த்தலைவர் எத்தனை லட்சம் செலவானாலும் உன் உடல் நிலையை சரி செய்கிறேன். ஆனால், உன் கணவ னோடு சேர்ந்து வாழ வேண்டுமென கட்டாயப் படுத்தினார். பிரச்சனை என்னவென்று என் கணவருக்குத் தெரியும், ஆகையால் யாரும் கட்டாயப்படுத்தாதீர்கள் எனக் கூறினேன்.

பிரிந்து போவதென்றால் இரண்டரை லட்சம் தரவேண்டும் இல்லையேல் இந்த இடத்தைவிட்டு நகர முடியாது என்று மிரட்டினார்கள். நான் முடியாது என்று கூறினேன். என் அம்மா அப்பாவிடம் பேசி அம்மாவை அனைவர் முன்பும் மண்டியிட்டு விழ வைத்து (அழுகிறார்) ஒன்னரை லட்சம் தர சம்மதிக்க வைத்தார்கள். நீண்ட நேரம் கழித்து என்னைப் போகச் சொல்லிவிட்டார்கள்.

பின்பு அடுத்த நாள் என் கணவர் எனக்குப் போன் செய்து நேற்று உனக்கு நடந்ததற்கு நான் மன்னிப்புக் கேட்கிறேன் என்று கூறினார். நான் மிகுந்த கோபத்துடன் பேசி, உனக்குப் பணம் தானே வேண்டும், அதற்கு தானே இவ்வளவு நாடகம். அதற்கு என்னால் முடிந்த வரை ஏற்பாடு செய்கிறேன் என்னிடம் பேச வேண்டாம் என போனை வைத்துவிட்டேன்.

பிறகு ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையில் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். என் கணவர் வீட்டிலிருந்தும், ஊர்த் தலைவரும் எனக்கு போன் பண்ணிக்கொண்டே இருந்தார்கள். அப்போது பொதுவாக இப்போதெல்லாம் பஞ்சாயத்தே வைக்கக்கூடாது. நீங்கள் பேசிய அனைத்து வார்த்தைகளையும் நான் கோர்ட்டுக்குப் போனால் சொல்ல நேரிடும். ஆகையால் என்னை விடுதலைப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க சொல்லாதீர், நீங்கள் தான் உள்ளே போகணும் என்று தைரியமாகப் பேசினேன். இதனால் ஏதும் பிரச்சனைகள் வருமோ என்று ஊர்த்தலைவரும், என் கணவரும் பின் வாங்கினார்கள். அதன்பிறகு என்னை இதுவரை தொடர்பு கொள்ளவில்லை. அப்படியே மீண்டும் பிரச்சனைகள் வந்தாலும் என்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**உங்களில் யார் முதலில் காதலை வெளிப்படுத்தியது?**

தீபாவிடம் நான் தான் முதலில் காதலை வெளிப்படுத்தினேன். எனக்குத் தெரியாமல் என்னை வாட்ச் பண்ணியிருக்கா. ஒருநாள் என்னைத் தனியாகக் கூப்பிட்டு நம்பர் கேட்டாள். போன் நம்பர் கொடுத்ததற்குப் பிறகு எஸ்.எம்.எஸ். அனுப்ப ஆரம்பித்தேன். நான் பொதுவாக எல்லா பிரண்ட்ஸ்க்கும் எஸ்.எம்.எஸ். பண்ணுவேன், பேசுவேன். தீபாவிடம் பேச ஆரம்பித்த பிறகு நூறு எஸ்.எம்.எஸ். பத்தவில்லை. நிறைய பிரண்ட்ஸ் களிடம் பேசுவதையே அவாய்ட் பண்ணீட்டேன். பொதுவாக தீபா யாரிடமும் பேசாமல் அமைதியாக இருப்பாள். அதனால் எனக்குப் பிடித்தது. எல்லா விஷயத்திலும் வித்தியாசமாக முடிவெடுப்பேன். இதிலும் அப்படி ஆகிவிட்டது. நிறைய ஆண்கள் என்னிடம் பேசியிருக்கிறார்கள். அவர்களும் என்னிடம் பிரப்போஸ் பண்ணியிருக்காங்க. எனக்கு எந்த உணர்வும் வந்ததில்லை.

**சிலர் கணவரோடு வாழும் காலத்தில், தன்பாலினத்தோடும் வாழ்கிறார்களே? நீங்கள் அப்படி முடிவெடுத்திருந்தால் சிக்கல்கள் குறைந்திருக்குமா?**

ஒரே நேரத்தில் இருவருடனும் தொடர்பில் இருப்பவர்களும் இருக்கிறார்கள். என்னிடம் ஒரு வழக்கறிஞர் சொன்னார். கணவனுடனும் சேர்ந்து வாழ்ந்து கொள்ளுங்கள். அதே சமயம் அந்தப் பெண்ணுடனும் வாழ்ந்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

நிறையப்பேர் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். அவருடன் இருப்பது என்றால் நான் அவருடனே வாழ்ந்திருப்பேன். ஆனால், ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் மட்டு மல்லாமல் திருமணமான ஆணோ, பெண்ணோ கணவனாகவும், மனைவியாகவும் வாழ்ந்து கொண்டு தன்பால் இணையராகவும் வாழ்கிறார்கள். இதில் எனக்கு விருப்பம் இல்லை. எனவே நான் இப்படியே இறுதிவரை தீபாவுடனே இருக்கலாம் என முடிவு செய்துவிட்டேன். எனக்கு கவுன்சிலிங் கொடுக்கும் போதுகூட மருத்துவரைப் பேச விடாமல் நானே பேசினேன். என்னைப் பொறுத்தவரை நான் சரியான

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S



முடிவுதான் எடுத்துள்ளேன் என முடிவு செய்து விட்டேன். ஆகையால், வேற யார் சொல்வதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**திருநங்கைகளுக்குப் பிறப்பிலே சில வேறுபாடுகள் இருக்கிறது. அதுபோல் தன்பால் தேர்வாளர்களுக்கும் வேறுபாடு இருக்கிறதா?**

**தீபா:** எனக்குத் தெரியாது. யு.டியூப்ல பார்த்தேன். அரவானிகளுக்கு எப்படி ஹார்மோன் மாற்றம் இருக்கும் என்று சொன்னார்கள். தன்பால் தேர்வு பற்றி நிறையபேர் தவறாகப் புரிந்துள்ளனர். அந்தக் கருத்தை மாற்ற வேண்டும். நிறைய விவாதிக்க வேண்டும். ஒரு ஆண் ஆணோடும், ஒரு பெண் பெண்ணோடும் சேர்ந்து வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இந்தியச் சட்டப்படி தவறு என்று சொல்கிறார்கள். கைது செய்யலாம் என்றும்கூட சொல்கிறார்கள். ஆனால் இதுவரை யார் மீதும் எப்.ஐ.ஆர் போட்டதில்லை. நிறையப் பேர் இப்படி இருக்கிறார்கள். ஒரு விஷயம் அனை வராலும் பேசப்படும்போது அது சாதாரணமாகி விடுகிறது. இது அனைவராலும் பேசப்படாததால் மிகைப்படுத்தித் தெரிகிறது.

ஆணும் ஆணும் - ஒரு பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது இயற்கைக்கு முரணாகத் தெரிகிறது. ஆணும் ஆணும் - பெண்ணும்பெண்ணும் சேர்ந்து வாழ்வது தவறு என்று எல்லோர் மூளையிலும் பதிந்துவிட்டது. இதில் புரிந்து கொள்பவர்கள் ஒரு சிலர் மட்டும்தான். எங்களைப்போல் இருப்பவர்கள் எல்லாம் வேணும்னே இப்படிப் பண்றதில்லை. இது பிறப்பிலேயே ஏற்படுவதுதான். பெண் ஹார்மோன் தன்மையை மிஞ்சி ஆண் ஹார்மோன் எங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இவை மனசுக்கும் உடலுக்கும் இடையே நடக்கும் போராட்டம். இதைச் சமூகமும், குடும்பத்தினரும் புரிந்து கொள்வதேயில்லை.

**உங்களைப்போல் உள்ள தன்பால் இணையர்களைச் சந்திக்க - தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

கண்டிப்பாக. நாங்கள் பேட்டிக்கு ஒத்துக் கொள்ளும்போதே எங்களைப்போல் உள்ளவர்கள் எங்களை மாதிரிதான் உள்ளனரா? அல்லது அவர்கள் பழக்கம் வேறாக உள்ளதா? எனத் தெரிந்துகொள்ள வேண்டும் என ஆசைப்பட்டோம். யாருக்கும் தெரியாமல் ஏன் வாழவேண்டும். எங்களைப்போல் உள்ளவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். இந்தப் பேட்டி மூலமாக நிறையப்பேர் வெளியே வரவேண்டும். வீட்டில் சொல்வதற்காவது தைரியம் வரவேண்டும். காட்டாறு வாசகர்கள் மூலம் எங்கள் செய்தி நிறையப் பேருக்குப் போகும் என்பதால் எங்களைப் பற்றிக் கூறியிருக்கிறோம். இதன்மூலம் எங்களைப் போல் இருப்பவர்களைத் தொடர்பு கொள்ள நினைக்கிறோம்.

**உங்களுக்குக் குழந்தை வேண்டும் என்ற எண்ணம் உள்ளதா?**

இரண்டு பேருக்குமே ஆசை இருக்கிறது. குழந்தை என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால் ஒரு ஆணுடன் வாழ்ந்தால்தான் முடியும் என்பது இல்லை. எங்களுக்குக் குழந்தை வேண்டு மென்றால் தத்து எடுத்துக்கொள்வோம். இப்பொழுது வேண்டாம். நாங்கள் நல்ல நிலைக்கு வந்தபிறகு தத்தெடுத்தால், படிக்க வைக்க, நன்றாக வளர்க்க வாய்ப்பாக இருக்கும்.

இவ்வுலகில் நிறைய கணவன் மனைவிக்குள் இல்லாத ஒன்று, புரிதல்தான். அது எனக்கு ஒரு பெண்ணிடம் கிடைத்துள்ளது. எங்களுக்குள் இருக்கும் புரிதல் தான் இன்று எங்களை ஒன்று சேர்ந்தது. இந்தப் புரிதல் கடைசி வரையிலும் இருக்கும். பலர் எங்களைப் புரிந்து கொள்ளா விட்டாலும்கூட..... வாழ்க்கை வாழ்வதற்கே!



Kitchen DEMOLISH VEDIC TRADITION'S

மதுரை வாசுகி

# தந்தையையும் - இனத்தையும் காத்த போராளி



உலகிலேயே ஒரு நாத்திக இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்திய ஒரே பெண்மணி அன்னை மணியம்மையாரே! உலக மகளிர் நாள் கொண்டாடப்படுகிற மார்ச் மாதத்தில் அவரை நினைவு கூர வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

அம்மா அவர்கள் 1920 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் நாள் திரு.கனகசபை மற்றும் பத்மாவதி ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காந்திமதி. பள்ளி இறுதி வகுப்பு வரை(SSLC) படித்த அம்மா அவர்கள் தேர்வு நேரத்தில் உடல்நலக் குறைவால் தேர்வு எழுதவில்லை. வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் செல்வக் குடும்பத்தில் பிறந்த அவரைப் பெரியாரின் தன்மான இயக்கம் மாணவப் பருவத்திலேயே ஈர்த்தது. அவரது தந்தையார் திரு.கனகசபை அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் அணுக்கத் தொண்டர். அய்யா வேலூருக்கு வந்தால் அவர்களது இல்லத்தில் தான் தங்குவார். அய்யாவின் கொள்கை ஈர்ப்பினால் அய்யாவுக்குத் தொண்டு செய்து அதன் மூலம் இயக்கப் பணியும் செய்ய விரும்பினார்.

எனவே, அவரது தந்தையார் 15.05.1943-இல் மறைந்த பின், அதே ஆண்டில் செப்டம்பர் 11-ஆம் நாள் அய்யாவிடம் தொண்டராக வந்து சேர்கிறார். அய்யா அவர் கல்வி கற்று அறிவுத் தேர்ச்சி பெறட்டும் என்று குலசேகரப்பட்டினம் தமிழ்க் கல்லூரியில் தமிழ் வித்வான் படிப்பு படிக்க வைத்தார். உடல்நலக் குறைவால் அந்தத் தேர்வையும் அவரால் எழுத முடியவில்லை. அதோடு அவரது கல்வி வாழ்க்கை முடிந்துவிட்டது.

### அம்மாவின் தொண்டு

1945ஆம் ஆண்டிலிருந்து பெரியார் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிப் பேரவதிப்பட்டார். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அயராது தொண்டாற்றிய பெரியாரை அவரது உடலைக் கெடுப்பவை உணவு பழக்கங்கள் தான் என்று கண்டு, மருத்துவரின் அறிவுரைப்படி அவற்றை அய்யா சாப்பிடாதவாறு கண்டிப்பாகத் தடுத்து வந்தார் அம்மா.

குழந்தையைப் போல் கழகத் தோழர்கள் அன்போடு கொடுப்பதை மறுக்காமல் சாப்பிட்டு வயிற்று வலியால் அவதிப்படும் பெரியாரைத் தீவிரமாகக் கண்காணித்துப் பேணினார். சரியான உணவு எது? உடலுக்கு நன்மை செய்யும் உணவு எது? என்று பார்த்து பார்த்து ஒரு வருடம், இரண்டு வருடம் அல்ல முப்பது ஆண்டுகள் அய்யாவுக்கு செவிலியராகவும், கொள்கைக்காரராகவும் வாழ்ந்த தியாக வாழ்வு அவருடையது.

அம்மாவின் தொண்டினால் கூடுதலாக முப்பது ஆண்டுகள் அய்யா வாழ்ந்து மக்கள் சாதி, ஏற்றத்தாழ்வின்றி சமத்துவத்துடன் வாழவும், அதிலும் குறிப்பாக பெண்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு, ஆணுக்குச் சமமாக வாழவும், தொடர்ந்து பிரச்சாரம் செய்ய முடிந்தது. அம்மா பற்றி அய்யா விடுதலையில், 15.10.1962 அன்று,

> “மணியம்மையார் இயக்கத் தொண்டுக்கென்றே என்னிடம் வந்த இந்த 20 ஆண்டில் எனது வீட்டு வசதிக்கான பல காரியங்களுக்குத் தேவைக்கு உதவி செய்து வந்ததன் காரணமாக என் உடல்நிலை எப்படியோ என் தொண்டுக்குத் தடையாய் இல்லாமல் நல்ல அளவுக்கு உதவி வந்ததால் என் உடல் பாதுகாப்பு, வீட்டு நிர்வாகம் ஆகியவற்றில் எனக்குத் தொல்லையில்லாமல் இருக்கும் வாய்ப்பை அடைந்தேன்”

என்று எழுதுகிறார். அது மட்டுமல்ல அய்யாவின் திருமணத்தைக் காரணம் காட்டிப் பிரிந்து தனிக் கழகம் கண்ட அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகு ஒரு நாள் ஆசிரியர் வீரமணி அவர்களிடம், “அய்யா அவர்களுக்கு ஒரு வயிற்று வலி தொடர்ந்து இருந்தது. மணியம்மையாரின் பத்திய உணவுப் பாதுகாப்பு தான் அய்யாவை அதிலிருந்து விடுவித்தது. அது மட்டுமல்ல, அய்யா அவர்கள் இவ்வளவு நாள் நம்மோடு வாழவும் வைத்திருக்கிறது” என்று கூறுகிறார். இவ்வாறு அண்ணா அவர்களே மனம் திறந்து கூறுகிறார் என்றால் அம்மாவின் தொண்டுக்கு வேறு சான்று தேவையில்லை.

அய்யாவைக் கவனித்துக் கொள்வது மட்டுமே தனது தொண்டாக அம்மா நினைக்கவில்லை. தாயற்ற சேய்களுக்குத் தாயாக விளங்கினார். அனாதைகள் என்று யாரும் இருக்கக் கூடாது என்ற உணர்வுடன் மருத்துவமனையில் கைவிடப்பட்ட குழந்தைகளைக் கூட எடுத்து வளர்த்து ஆளாக் கினார்.

**போராளி மணியம்மையார்**

அய்யாவின் உடல்நிலையைக் கவனித்துக் கொண்டு அதோடு தனது பணி முடிந்தது என்று அம்மா நினைக்கவில்லை. இயக்கப் பணிகளில் அய்யாவிற்கு உறுதுணையாக இருந்தார். அதில் சட்ட எரிப்புப் போராட்டத்தின் போது, அம்மா தலைமையில் நடந்த கிளர்ச்சி மற்றும் அம்மா தலைமையில் நடைபெற்ற இராவண லீலா ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

சாதி ஒழிப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக தந்தை பெரியாரின் கட்டளையை ஏற்று கழகத் தொண்டர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளைக் கொளுத்திச் சிறை சென்றனர். சட்ட நகல்களைக் கொளுத்திய தற்காக ஆறு மாதம் முதல் மூன்று ஆண்டுகள் வரை திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் என மூவாயிரம் பேர் வரை சிறை சென்றனர். அய்யாவும் கைதாகி சிறையிலிருந்தார். மணியம்மையார் அவர்களே வெளியிலிருந்து கழகத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுவார்கள் என அய்யா அறிவித்தார்.

அப்போது சட்ட எரிப்புப் போராட்டத்தில் கைதான தோழர்கள் பட்டுக்கோட்டை இராமசாமி மற்றும் மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகியோர் சிறை அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளாகி திருச்சி சிறையில் மாண்டனர். அவர்களில் வெள்ளைச்சாமி யின் சடலத்தைத் தர சம்மதித்த சிறை அதிகாரிகள் இராமசாமியின் சடலத்தைத் தர மறுத்தனர். சிறை அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டும் சடலத்தைத் தர மறுத்தனர்.

அந்த நேரத்தில் மணியம்மையார் சென்னை சென்று முதலமைச்சர் காமராசர் அவர்களைச் சந்தித்துத் தேவையான கட்டளைகளைச் சிறை அதிகாரிகளுக்குப் பிறப்பிக்குமாறு செய்த பிறகே உடல்களைப் பெற முடிந்தது. தோழர்களின் உடல் திருச்சி பெரியார் மாளிகையில் மக்கள் மரியாதை செலுத்தும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டது. மக்கள் மாளிகை முன் அலை அலையாகச் சேர்ந்தனர். கூட்டம் கட்டுக்கடங்காமல் போய் விடுமோ என்று அஞ்சி, அருகிலுள்ள இடுகாட்டி லேயே அடக்கம் செய்யுமாறு காவல் துறையினர் வற்புறுத்தினர்.

ஆனால், அம்மா சென்னையிலிருந்து வந்த பிறகு, அவர் தலைமையில் ஊர்வலம் பெரிய கடை வீதி வழியாகச் செல்ல முயன்ற போது காவல் துறை அலுவலர் தடுத்தார். அம்மாவோ ஊர்வலத்தில் அனைவரும் அப்படியே உட்காருங்கள் என்றார். அதைக் கண்டு அஞ்சி ஊர்வலம் தடையில்லாமல் செல்ல காவல் துறையினர் அனுமதித்தனர். இவ்வாறு சட்ட எரிப்புப் போரில் சிறை சென்று மரணம் அடைந்த வீரர்களுக்கு அம்மா மரியாதை செய்தார். இது ஒரு மனித உரிமைப் போராட்டம் ஆகும். இது மணியம்மையாரின் தலைமைப் பண்பையும் இக்கட்டான நிலையைச் சமாளிப்பதால் அவர் எப்படிப்பட்ட வீராங்கனை என்பதையும் உலகறியக் கூடிய வாய்ப்பை வழங்கியது.

**இராவணலீலா**

தந்தை பெரியார் அவர்கள் 24.12.73 அன்று மறைந்த பிறகு 6.1.74 அன்று திராவிடர் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார் அம்மா. தலைமையேற்ற ஓர் ஆண்டிலேயே அய்யாவின் செயல் திட்டங்களில் ஒன்றான இராவண லீலா நிகழ்ச்சியை மய்ய அரசின் முழு எதிர்ப்பையையும் மீறிச் சிறப்பாக நடத்தி முடித்தார்.

**அஞ்சலகம் முன் மறியல்**

அய்யா அறிவித்த கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னோடி யாக 1976, ஏப்ரல் 3 ஆம் நாள் அஞ்சலகம் முன் சாதி இழிவு ஒழிப்புக் கிளர்ச்சியும் அதைத் தொடர்ந்து கருப்புக் கொடி காட்டுதலும் ஒரு மாத காலம் நடைபெற்றது. 3.5.1974 முதல் 2.7.1974 வரை தமிழகத்தில் எந்த ஊருக்காவது மய்ய அரசைச் சேர்ந்த அமைச்சர்கள் வருவதாக இருந்தால் அவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் என்று அம்மா அறிவித்தார். அதன்படி, 26.5.1974 அன்று சென்னை வந்த அமைச்சர் ஒய்.பி.சவான் அவர்கட்கு அம்மா கருப்புக் கொடி காட்டினார்கள்.


**வெள்ளி வாள் பரிசு**

8.5.1977 இல் கடலூரில் நடைபெற்ற தந்தை பெரியாரின் 98 வது பிறந்தநாள் விழா திராவிடர் கழக வரலாற்றில் மறக்க முடியாத விழாவாகும். இவ்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அன்னையாரைப் பாராட்டி வெள்ளி வீர வாள் ஒன்றினைப் பரிசாக அளித்தார்.


இவ்வாறு சாதாரணத் தொண்டராக அய்யாவிடம் வந்து சேர்ந்த அன்னையார் அவர்கள், அய்யாவின் உடல்நலத்தைப் பேணிக் காத்தது மட்டுமல்லாமல் கழகத்தின் செயல்பாடுகளில் அய்யாவுக்கு உறுதுணையாக இருந்து, அய்யாவின் மறைவுக்குப் பின் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொய்வின்றி நடத்திப் பெருமை சேர்த்தவர். மணியம்மையாரை முன்மாதிரியாகக் கொண்டு, பொது வாழ்வில் பங்கெடுக்க வேண்டும் என்று பெண்கள் எண்ண வேண்டும்.

## கருத்துக்கணிப்பு முடிவுகள்


பள்ளி - கல்லூரிகளில் ஆண் - பெண்
இருபாலரும் கலந்து அமரும் முறையை
அகர வரிசைப்படி ( Alphabetical order)
நடைமுறைப்படுத்து!





JNU, AIIMS போன்ற உயர்கல்வி நிறுவனங்களில்
உள்ள 'இருபால் பொதுவிடுதி' முறையை
(Co - Hostels or Unisex Hostels)
பள்ளி - கல்லூரிகளில் நடைமுறைப்படுத்து!





பள்ளி - கல்லூரி வளாகங்களில் ஆண் - பெண்
மாணவர்கள் பேசிக் கொள்வதையும், பழகுவதையும்
தண்டிக்கும் காட்டுமிராண்டிகள் நடத்தும் பள்ளி,
கல்லூரிகளை இழுத்துமூடு.
அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்!





பள்ளிக்கல்வியிலிருந்தே
பாலியலையும் ஒரு பாடமாகக் கற்பி!





பெண்களை அலங்காரப் பொம்மைகளாக உருவாக்கும்
காது குத்து விழாக்களைத் தடைசெய்!





பெண்களை இழிவுபடுத்தும் பூப்புனித நீராட்டு
விழாக்களைத் தடைசெய்!




திருமணங்களில் பெண்களின் சம்மதத்தையும், பெண்கள் சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கு! இவற்றை உறுதிப்படுத்திச் சான்று வழங்க, காவல்துறை - வழக்கறிஞர்கள் கொண்ட தனி ஆணையத்தை உருவாக்கு!





பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு, கடவுளையே மாற்றிக்கொள்ளவேண்டிய கட்டாயத்தை உருவாக்கும் ‘குலதெய்வ வழிபாடு’ களைத் தடைசெய்!





சிவப்புத் தோலே முக்கியம் என்ற எண்ணத்தை உருவாக்கும் சிவப்பழகுக் க்ரீம் வணிகத்தைத் தடைசெய்!





அலங்காரப் பண்பாட்டைத் தூண்டும் நகை வணிகம், பட்டு வணிகம், மலர் வணிகங்களைத் தடைசெய்! பட்டு நூல் உற்பத்திக்கான மல்பெரி விவசாயம், மலர் விவசாயத்தைத் தடைசெய்!





‘திருமணம் தேவையில்லை’ என்றும், ‘குடும்ப அமைப்பே வேண்டாம்’ என்றும் முடிவெடுத்துத் தனித்து வாழத் துணிந்த பெண்களுக்கு, மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்கு!





திருமணங்கள் உறுதிசெய்யப்படும் போதே, அந்த மணமக்களுக்குத் ‘தனிக் குடித்தனம்’ என்பதைக் கட்டாயமாக்கு!




திருமணத்திற்கு முன்பே கருத்தடைச் சிகிச்சை செய்பவர்களுக்கும் - பிள்ளை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் அரசின், கல்வி - வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கு!





இல்லப்பராமரிப்பிலும், சமையல் உள்ளிட்ட அனைத்து வீட்டு வேலைகளிலும், குழந்தை வளர்ப்பிலும் சமஉழைப்புக் கொடுக்காத ஆண்களுக்குக் கடும் தண்டனைகள் வழங்கு!





திருமணத்தின் பெயரால் - கணவன் என்ற உரிமையால் நடக்கும் (Marital Rape) பாலியல் வன்முறைகளைக் கடும் குற்றமாக்கு!





அனைத்துக் குடும்பங்களிலும் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த அதிகாரம் படைத்த தனி ஆணையம் உருவாக்கு! சொத்துரிமை வழங்காத ஆண்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து பெண்களுக்குப் பகிர்ந்தளி!




திருமணக் காலத்தில் பெற்றோரிடம், பிள்ளைகள் நகை, பணம், பொருட்கள் கேட்பதைக் கடும் குற்றமாக்கு!




கல்லூரி - பல்கலைக்கழகங்களில் உள்ள Anti Sexual Harassment Cell களில் நிர்வாகம் தவிர, மனநல ஆலோசகர்கள் - காவல்துறை - மகளிர் அமைப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கு!




#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

**தோழர் மதிவதனி**
மாநிலக்கூட்டுச்செயலாளர், திராவிடர் மாணவர் கழகம்



# பெரியார் கண்ட புரட்சிப் பெண்களே வேண்டும்

பெருங்கல்விப் பண்டிதனே! உனக்கோர் கேள்வி:
பெண்களுக்குச் சுதந்தரந்தான் உண்டோ?என்றாள்.
தரும்போது கொள்வதுதான் தருமம் என்றான்.
தராவிடில் மேற்கொண்டால் என்னவென்றாள்.

ஆயிரம் அர்த்தங்களை அலையெனத் தரும் ‘பாவேந்தனின்’ இப்பாடல் வரிகள். இதைத்தான் எம் பாட்டன் பகுத்தறிவுப் பேராசான் தந்தை பெரியாரும் எடுத்துரைத்தார். உரிமை என்பது யாரிடமோ கேட்டுப் பெற வேண்டிய சலுகை அல்ல, நாமாக எடுத்துக்கொள்ள வேண்டியது. அவ்வகையில் பார்த்தால் களத்தில் நிற்கும் அனைத்துப் பெண் தோழர்களுக்கும் இது பொருந்தும். ஆனால்,சாமானிய பெண்களின் நிலை?

பார்ப்பன வீட்டுப் பெண்கள் ஆரம்பித்து, பஞ்சமர் வீட்டுப் பெண்கள் வரை அவர்கள் ஏற்றுக் கொண்ட மதத்தின்படி அவர்கள் தலித்துகள்தான் (ஒடுக்கப்பட்டவர்கள்). இந்நிலையை உடைத் தெறியத் தேவைப்படும் கருவிகள்தான் நம் காட்டாறு குழுவின் வாயிலாக தரப்பட்ட 15 ஆழமான கோரிக்கைகள். இக்கோரிக்கைகள் அதிகம் சென்றடைந்து சேர வேண்டியது ‘பெண்களைத்தான்’. இன்றும் ‘அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு’ என்று கூண்டுக் கிளியாக அவர்களை அவர்களே அடக்கிக் கொண்டு வாழும் பெண்களிடத்தில் போய்ச் சேரவேண்டும்.

அச்சம்-பயம்; மடம்-அறிவிலி; நாணம்-வெட்கம்; பயிர்ப்பு-அசிங்கமாக இருப்பது, அருவருக்கத்தக்க; இப்படியாகப் பெண்ணின் குணாதிசயங்கள் சொல்லப்படுகிறது. இந்த நிலையை உடைத்தெறிய கையில் எடுக்க வேண்டிய முக்கிய ஆயுதம் ‘பெரியாரியலும்’ பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகளும்’. அச்சிந்தனை களுக்கு வலு சேர்ப்பதுதான் மேற்கண்ட 15 கோரிக்கைகள்.

“சமையலறை உடைப்புப் போராட்டம்”. சில பெண்களே தயங்கும் போராட்டம். ஏன் பெண்களே தயங்கும் நிலை? அங்குதான் பெண்ணின் பிற் போக்குத்தனம் பிறக்கிறது. மனதளவில், உளவியல் ரீதியாக அவளுக்கே உரித்தான இடமாக, அவளின் பங்கு சமையலறையில்தான் பிரதானமாக இருக்கிறது என்ற எண்ணம்தான் அந்தத் தயக்கத்திற்குக் காரணம். இந்தத் தயக்கம்தான் பெண்களை இன்னும் களப்போராளியாக மாற்ற விடாமல் தடுக்கிறது.

ஏதோ “சமையலறை உடைக்கும் போராட்டம்” என்றால் சமையல் அறைகள் இல்லாமல் செய்வதல்ல நோக்கம். ஆழ்ந்த கருத்துக்களை அது உள்ளடக்கியுள்ளது. இன்றளவிலும் முதுநிலைப் பட்டம் பெற்ற பெண்கள்கூட (கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களிலும்கூட) கணவன் வேலைக்குச் செல்வதால் வீட்டு வேலை செய்ய, சமையலறையில் வேலை செய்ய ஆள் இல்லை என்ற காரணத்தை மேற்கோளிட்டு படித்த படிப்பை வீணாக்கி வீட்டிலே ஒரே அறையிலே, (சமையலறையிலே) அவர்களின் அறிவை முடக்கி கொண்டிருக் கிறார்கள்.

‘சமத்துவம்’ என்று பேசுகின்ற நிலையில் ஒருபடி மேலே சென்று சிந்தித்தால், ‘சமையல றையிலும் சமத்துவம்’ என்ற நிலை பிறக்கும். அந்நிலை பிறந்தால் ஆண்-பெண் இருபாலரும் சமைக்கும் நிலை, வேலைகளைப் பகிர்ந்து செய்வதன் மூலம் சமூகக் களத்தில் பெண்கள் வந்து நிற்கத் தடைகள் குறையும்.




மிக முக்கியமாக, ஒரு ஆண் உருவாகக் காரணமாய் இருக்கும் ‘மாதவிடாய்’ (மதத்தின் பார்வையில் தீட்டு) நேரத்தில், உள்ளமும், உடலும் சோர்வுற்றுக் கிடக்கும் நேரத்தில் உதிரப் போக்கைத் தாங்கிக் கொண்டு, பெண் சமையலறையில் தனியே வேலை பார்க்கிறாள். அந்த நேரத்திலும் அவளைச் சமைக்கவிட்டு, உணவை ருசித்து அதிலும் குறை காணும் ஆணாதிக்கச் சிந்தனை உடைய ஆண்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும்.

சாதியத்தைச் சாகடிக்க நாம் போராடும் நிலையில் சாதியப் பிணியைப் பிஞ்சு வயதிலேயே தோன்றச் செய்து, அதற்கென்று தனியே விழா நடத்தாமல் ‘காதணி விழா’ என்று நடத்தும் பிற்போக்குத் தனங்கள் ஒழிய வேண்டும். எவ்வளவோ அறிவியல் வளர்ந்துவிட்ட நிலையில் நமக்கு நாமே தேவைப்பட்டால் இரண்டு ஓட்டையினை காதில் குத்திக்கொண்டு (அதை மறைக்க ஒரு கம்மலை மாட்டிக் கொள்வது இன்னும் வேடிக்கை (நான் உட்பட) அவ்விழாவைத் தடுக்கலாம்.

இதோடு முடியவில்லை. அப்பெண்ணைக் கேலிக்கூத்தாக மாற்ற, சமூகமும் அவர் பெற்றோரும் காத்துக் கிடப்பார்கள். எப்போது அவள் பிறப்புறுப்பில் உதிரம் வரும், ‘பூப்பு நன்னீராட்டு விழா’ நடத்தலாம் என்று. ஏனோ தெரியவில்லை, ‘பெண் வயதிற்கு வருகிறாள், பச்சிளம் குழந்தையாக 8 வயதிலேயே அவளின் விளையாட்டு முடக்கப் பட்டு, ஆண் நட்புகள் துண்டிக்கப்பட்டு, அதுவரை வகுப்பறையில் டேய் ரமேஷ்! என்று கூப்பிட்ட எதார்த்தக் குரல் ஒடுங்கி, அய்யோ அவன் அருகில் நின்று பேசினால் அம்மா அதட்டுவாளோ என்ற மனமாற்றம் ஒரே நாளில்!

சிவப்பழகு தான் வேண்டும் என்ற குறுகிய வட்டத்துக்குள், சின்ன முகப்பரு வந்தால் கூட அழகு போய்விட்டது என்று சமூகத்திற்கு முகத்தைக் காட்டத் தயங்கும் பிற்போக்கு எண்ணத்தை பெண்கள் கைவிட வேண்டும். மிக முக்கியமாக அந்த எண்ணத்தை ஏற்படுத்தும் ‘விளம்பரங்களும், முகப்பூச்சுகளுக்கும்’ தடை விதிக்க வேண்டும்.

‘திருமணம்’ மனம் ஒத்த ஏற்பாடே தவிர உடலுக்கானது அல்ல என்ற நிலையை பெண்கள் உணரவேண்டும். தேவைப்பட்டால் கர்ப்பத்தடை செய்ய பெண்கள் முன்வரவேண்டும். ‘ஆண்-பெண்’ பேதம் உடலில் சில உறுப்புகளில் மட்டும்தானே தவிர, உளவியலில், அறிவில், திறமையில் அல்ல என்ற மனத்திடத்தை ஏற்படுத்த மிக அவசியம் - அவசரமாகப் பள்ளிக் கல்லூரிகளில் ‘பாலியல் கல்வி’யையும், இருபாலரையும் அருகருகே அமர்த்துவதையும் நடைமுறைப்படுத்த வேண்டும். “புதுமைப் பெண்கள் வேண்டாம் - இனி, பெரியார் கண்ட புரட்சிப் பெண்களே வேண்டும்”.




## எதிரொலி

ஒவ்வொரு காரியத்திற்கும் நல்ல நேரம் , பஞ்சாங்கம் பார்த்து செய்யவேண்டும் என்று கூறி தங்களது சுய சம்பாத்தியத்திற்கு வழி தேடிக்கொள் கிறார்கள் பார்ப்பனர்கள் என்பது உண்மையே. எல்லா நேரமும் நல்ல நேரமே. 20 முதல் 25 வயது வரை வரும் காதல் என்பது வாழ்க்கைச்சூழ்நிலை, பொருளாதார நிலை என சுயமாக சிந்தித்து அமைவதாகும். இந்த காதல் தோற்பதில்லை என்ற இறையரசி அவர்களின் கருத்து மிகச்சரியானது.

சந்தையூர் - தீண்டாமைச்சுவர் போன்று இன்னும் பல இடங்களில் இந்த அவலம் இருந்து கொண்டுதான் உள்ளது. இடம் கண்டு இடித்து தள்ள வேண்டும். சாதி ஒழிய ஒரே வழி பிள்ளைகளை பள்ளிகளில் சேர்க்கும்போதே நீக்கவேண்டும்.

“பாட்டு மட்டும் பாடிக்கொண்டிருக்கும் ஆண்டாள்களல்ல நாங்கள். பகுத்தறிவும் பெற்றுள்ளோம்” - அரசூர் அ. ப. சிவா அவர்களின் கருத்து அற்புதம். “தமிழை ஆண்டாள்” சொற் பொழிவுக்கு இடையில் வேறோரு ஆய்வாளரின் கருத்தை கூறியதை தக்க சமயம் பார்த்து பார்ப்பனர் களும், அரசியல்வாதிகளும் ஊதிப்பெரிதாக்கி, தீ மூட்டிக் குளிர் போக்கிக்கொண்டனர்.

பெரியார், அறிஞர் அண்ணா இவர்களுக் கிடையில் கொள்கைரீதியில் முரண்பாடே தவிர மற்றபடி உயிருக்குள் உயிராக இருந்தனர் என்ற செய்தி ஆச்சரியம்தான். இன்றைய அரசியல் வாதிகள் இது தெரிந்து அரசியல் நாகரீகம் கற்றுக் கொள்ளவேண்டும். மோடி அரசின் மத்திய பட்ஜெட் என்பது கார்ப்பரேட் நிறுவனங்களுக் கானது என்ற தெளிவான விளக்கத்திற்கும் நன்றி.

**பி. ரவி,** சிவலிங்கபுரம், ஈரோடு மாவட்டம்.
செல் : 97500 40172

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S

**தோழர் மணிமேகலை**
திராவிடர் விடுதலைக் கழகம்

# நீ... சுடரல்ல; சூரியன்!



பெண். மனித உயிர்களை உற்பத்தி செய்கிறவள். வீட்டை, குடும்பத்தை நிர்வகித்துப் பேணுகிறவள். அடிமையாக, தேவதாசியாக, பொட்டுக்கட்டி விடப்படுபவளாக.... விற்கிற பண்டமாக... கணவன் இறந்த பின், அவன் சிதைக்குள்ளேயே வீசியெறியப்படும் ஓர் அவசியமற்றவளாக... குரலற்றவள் என்கிற பிம்பம் ஏறக்குறையக் குறைந்து, இன்று...

ஆணுக்கு நிகராக, சமூகத் தளத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சிந்தனை என்று இயக்கம் கொண்டவளாக பெரும் வீச்சாக மாற்றம் கொண்டுவிட்டாள் என்றவொரு மாயத்தோற்றம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையா?

இருநூறு விழுக்காடு இல்லை என்பதே உண்மை! ஆணாதிக்கப் பரிணாமத்தை அடியொட்டியே இன்றைய பெண்களின் கல்வி, உடை, பணிபுரியும் நிலை என மாற்றம் பெற்றிருக்கிறது. காலமாற்றத்தின் தன்மைக்கேற்ப, மாறிவிட்ட வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள், வலியத் திணிக்கப்பட்டது என்பதைக்கூட அறியாது, பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தக நிர்ப்பந்தத்திற்குப் பலியாக ஏற்றுக்கொண்ட நுகர்வுக் கலாச்சார முறைக்குப் பெண்ணின் உழைப்பும், வருமானமும், பங்கும் அவசியமாகிறது. அதையொட்டித்தான் பெண்ணினத்தின் கால்களில் பூட்டியுள்ள சங்கிலியின் நீளம் கொஞ்சம் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவே!

அதற்கும் மேலாக, மதங்களும், அதன் அடக்குமுறைகளும் உள்ளீடாக வாழ்வோட்டத்தில் கலந்து தம்மை நவீனப்படுத்திக்கொண்டு பெண்ணடிமைத்தனத்திற்கு அடிநாதமாக இருந்து இயங்கி வருகிறது. இன்றையப் பெண்கள் ஆணைப் போன்று உடைதரித்து நாகரீக யுவதியாக நடமாட அனுமதிக்கப் பட்டாலும்.. அவள் அலங்காரத்திலும், உறுப்புகளில் நவீன மோஸ்தரில் மினுக்கும் அணிகலன்களிலும்... மதமும்,ஆணாதிக்கமும், மூடப் பழக்கத்தின் கூறுகளும் அவளுள் ஊடுருவி கள்ளச் சிரிப்போடு பெண்ணை இயக்கிக் கொண்டிருக்கிறது இன்னமும்.

மருத்துவமும், பொறியியலும், அறிவியலும் படித்து உயர்ந்தப் பதவியில் அமர்ந்த பெண்களின் அலுவலகச் சுவர்களை அலங்கரிப்பது சித்தாந்தவாதிகள், அறிவியலாளர்கள், விஞ்ஞானிகள் போன்றவர்களின் படங்கள் அல்ல; அறிவுக்குப் புறம்பான கற்பனைச் சித்தரிப்பான கடவுளர்கள் மற்றும் மதகுருமார்களின் படங்கள் தான்!

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S

தான் எப்படி அடிமைப்படுத்தப்பட்டோம்? அங்ஙனம் சார்ந்து வாழ்கிற உரிமைகள் மறுக்கப் பட்டு அடிபணிந்து ஏவல் செய்யும் இனமாக மாற்றப்பட்டதின் வேர் எது? என்பதை அறியாமல், மதப் பண்டிகைகளிலும், சடங்கு சம்பிரதாயங்க ளிலும், முழுக்க ஒப்புக்கொடுத்து கேள்வியற்ற இனமாகப் பெண்கள் வாழ்கிறார்கள். மத, ஜாதிப் பிடிப்போடும், அது சுட்டி நீட்டும் பக்தியோடும் தன்னை ஆட்படுத்தி வாழ்வதே ஆகச் சிறந்த வாழ்வென பகுத்தறிவற்ற நபர்களாக இருக்கிறார்கள்.

**பெண்களால் படைக்கப்படும் இலக்கியங்கள்**

புணர்ச்சி நிலைகளை, உணர்வுகளை வெளிப் படையாகப் படைப்பில் பேசுவதும், கட்டுப்பாடற்ற புணர்ச்சிக்கான அழைப்புகளை, தேவைகளை பகிங்கிரப்படுத்துதல் ஒன்றே ஆணுக்கு நிகரான உரிமைகள் பெறத் தேவையான ஆயுதம் என்றும் - செயல்பாடென்றும், புரட்சியென்றும் இயங்கு கின்றனர். அல்லது நம்புகின்றனர்.

இந்த மனோநிலை நகைப்புக்கும், மேலும் தன்னை நசுக்குகிறத் தடைகளுக்கும் வலு சேர்ப்ப தாகவே அமையும். உடல் மீதான பிரக்ஞையும், திரும்பத் திரும்ப வலியுறுத்தும் பாலுணர்வுசார் படைப்புகளும், ஆக்கங்களும் ஓர் வறட்டுப் பெண்ணியப் பார்வையை மட்டுமே நிர்மாணிக்க இயலும். அன்றி, பரந்துபட்டப் பார்வையோடு பல்வேறு தளங்களில் பயணப்பட்டு அறிவுசார்ந்த, விடுதலை நோக்குள்ள ஓர் புதுவெளியை உண்டாக்கு வதற்கான முயற்சிக்கு, இது பெருந்தடையாகவே அமையும்.

பெண் படைப்பாளிகளும், கலைஞர்களும் இதை உணர்ந்து இயங்க வேண்டும். இன்று பெண்கள் மாறியிருப்பது தோற்ற அளவில் மட்டுமே! கருத்தியலிலும், முற்போக்குச் சிந்தனை சார்ந்து தன்னை நகர்த்துபவர்கள் எண்ணிக்கை வெகுக் குறைவு. பெரியாரியல், இடதுசாரி, தலித் இயக்கத் தொடர்பு தவிர்த்து பெண்ணியம் சார்ந்து தடம் பதிக்கும் பெண்கள் அரிதாகவே உள்ளனர்.

இப்புவி யாவருக்குமானது இங்கு தோன்றும் அனைத்து உயிர்களும் சமமாய், சுயமாய், வாழத் தேவையான உரிமையிருக்கிறது. இங்குத் தோன்றிய உயிர்களின் சிந்தனையும், மொழியும், கேள்வியும், விஞ்ஞானமும் என்று பெரும் பாய்ச்சலாக வளர்ந் திருப்பது மனித இனம் மட்டுமே! அவ்வினத்தில் ஒன்றான பெண்ணை மட்டும் அடிமைப்படுத்தி வைத்திருப்பதின் தேவையென்ன? என்று உணர வேண்டும். ஒவ்வொரு உயிரும் போராடியே தமக்கான இருப்பை, சுயத்தை தக்கவைத்திருக்கிறது என்பதை பெண்கள் அறியவேண்டும்.

கல்வி, வசிக்கிற சூழல், மனித உறவுகள்.அவை ஏற்படுத்தி வைத்திருக்கிற விழுமியங்கள் யாவையும் தகர்த்தாலொழிய அவளுக்கான விடுதலையும், சமத்துவமும், சுயமரியாதையும் கிட்டாது. தன் மீது படிந்து கெட்டிதட்டிப்போன, கலாச்சார ,மத, ஒழுக்கக் கசடுதனை உடைத்து வெளிவரவேண்டும். தான் புறக்கணிக்கப்படுகிற, தன் இருப்பு மறுக்கப் படுகிற புள்ளியில் தொடங்கி பெரும் போரொன்றை அவள் நிகழ்த்தியாக வேண்டும்.

குடும்பத்தலைவி எனும் சமையல் தொழிலாளி யாக, பாலுணர்வைத் தணிக்கும் தாசியாக என்று தன்னை வரையறை செய்திருக்கும் கட்டுமானங் களைத் தகர்க்க வேண்டும். பதிவிரதை, பக்தி, சொரூபி, கற்புடையோள், அழகி, சிருங்காரி, நளினமானவள், மிருது கொண்டவள் என்கிற படு முட்டாள்தனமான, கேவலமான சித்தரிப்புகளை வெடி வைத்துத் துளாக்க வேண்டும்.

சித்தாந்தங்கள், வரலாறு, உலகத்தின் தொன்மம் பற்றிய அறிவு உடையவளாக, வாசிப் புடையவளாக, அது சார்ந்து கேள்வி எழுப்புவளாக, யாவற்றையும் சந்தேகித்துத் தெளிபவளாகத் தம்மைச் செதுக்கிக் கொள்ளவேண்டும்.

உலகம் தோன்றிய - மனித நாகரீகம் வளர்ச்சியுற யத்தனித்தக் காலகட்டத்தில் இருந்த தாய்வழிச் சமூக வாழ்வு முறைக்குத் தன் இனத்தை நகர்த்த வேண்டும். உணவு, கல்வி, உடை, தோற்றம், பாலியல் தேவை போன்றவற்றில் சுயமாய் முடிவெடுப்பவளாக, தேர்பவளாக மாறாத வரை, பெண்சுதந்திரம் கேள்வியே!

அலங்கரித்தலும், பிறரைக் கவர்தலும், அக, புற இயக்கத்தில் வசீகரிக்கிற மனுசியாகவே உருவாக்கிக் கொள்ளுதலும், தெளிவான தத்துவங்களோ, அறிவோ அற்று பெண்ணியத்தை அணுகுதலும், நுகர்வுத் தேவைக்காக மட்டும் கிளர்ந்தெழுவது மட்டும் புரட்சியாகாது. அது ஒரு வகையான கயமைத்தனமே!

தம் இனத்தின் மொத்த சாரத்தையும் வலுக் கட்டாயமாய் சமையல் கூடத்திலும், படுக்கை அறை யிலும், வழிபாட்டு அறையிலும் திணித்த கொடுமையை உடைத்து மீளாதவரை விடுதலை என்பது சாத்தியமற்ற ஒன்றே!

பெண் வர்க்கத்தின் மொத்த ஒழுக்கத்தையும், அவள் யோனிக்குள்ளே வைத்துப் பேணும் ஆணாதிக்கத்தின் கயமைத்தனத்தை, திமிரை முறித்துப் போட்டாலொழிய சுதந்திரக் காற்றை நீ சுவாசிக்க முடியாது.

அதை நோக்கி நட! அதை ஒன்றையே சிந்தி!
நீ விதைகளல்ல! பயனற்று மட்கிப் போக!
உயிர்க்கச் செய்யும் நிலம்.
உனைச் சுடரென்று
சொல்லும் ஆண்வர்க்கம்!
நீ
சூரியன் என்பதை
வசதியாய் மறைத்து! அதை உணர்!
கைகோர்ப்போம்! களம் காண்போம் வா!

தோழர் குடந்தை தமிழினி
மாநிலச் செயலாளர், இளஞ்சிறுத்தைகள் எழுச்சிப்பாசறை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி



# ஆணையங்களல்ல; பெண்களின் விழிப்புணர்வே முக்கியம்

மாணவப்பருவம் என்பது எதையும் எளிதாக ஏற்றுக்கொள்ளும் பருவம். இப்பருவத்தில் பாலின வேறுபாட்டைத்தான் இச்சமூகம் மாணவர்கள் மனதில் பதிய வைக்கிறது. பாலினச் சமத்துவத்தைக் கற்பிக்க வேண்டிய பள்ளிகள் பாலின வேறுபாட்டை கற்பிக்கின்றன. பெரும் பாலான பள்ளி கல்லூரிகளில் மாணவனுக்கும் மாணவிக்கும் தனித்தனி வகுப்பறைகள். ஒரே வகுப்பறையாக இருந்தாலும் தனித்தனி இருக்கைகள்.

பள்ளி மற்றும் கல்லூரி வளாகத்தில் மாணவர்களும் மாணவிகளும் பேசிக்கொள்ளக் கூடாது. இதனைப் பின்பற்றாத மாணவ மாணவிகள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப் படுகிறார்கள். ஒழுக்கமற்றவர்களாகச் சித்தரித்துக் கல்வியைத் தொடர முடியாமல் நிர்வாகத்தால் வெளியேற்றப் படுகிறார்கள். பள்ளி கல்லூரிகளில் ஆண்-பெண் சமத்துவத்தைப் போதிக்கும் முதல்படியாக கே.ஜி முதல் பல்கலைக்கழக வகுப்புகள் வரை மாணவர்கள் அகர வரிசைப்படி *(Alphabetical Order)* அமர வைக்கப்படவேண்டும். வலுவான ஆரோக்கியமான ஆண்-பெண் நட்பு இதன் மூலம் தொடங்கும்.

இரு பாலர் பயிலும் பள்ளியில், படித்து வரும் குழந்தைகளைவிட, ஒரு பால் பள்ளியில் படித்து விட்டு வரும் குழந்தைகளுக்கு எதிர்பாலினத்தை அணுகுவதில் சிக்கல்கள் உள்ளன. குழந்தைகள் எதிர்பாலினத்தோடு பழகுவதை ஊக்குவிக்கும் போது, இச்சிக்கலைத் தவிர்க்கலாம்.

குாந்தைகளிடம் செக்ஸ் பற்றி பேசலாமா என்பது மக்களின் கேள்வியாக இருக்கிறது. ஒவ்வொரு முறையும் பாலியல் குற்றங்கள் நிகழும் போதெல்லாம் பாலியல் கல்வி அவசியம் என்ற குரல் ஓங்கி ஒலிப்பதைக் கேட்டிருக்கிறோம். பாலியல் கல்வி என்பது வெறும் பாலுறவு சார்ந்த கல்வி மட்டும் அல்ல. பாலினம் குறித்தான புரிதலை உருவாக்கும் கல்வி. அந்தந்த வயதுக்குத் தகுந்தாற் போல பால் உணர்வு சார்ந்த புரிதலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பாலியல் கல்வி மூலம் பாலினச் சமத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். பாலியல் கல்வி என்ற சொல்லாடலே தவறான ஒன்றாகும். .பாலினக்கல்வி என்பதே சரி. பாலினம் சார்ந்த புரிதலை ஏற்படுத்த வேண்டும் என்றால் அதனை நாம் பாலினக் கல்வி என்று அழைப்பதே சரியாகப்படுகிறது..

பெற்றோர்கள், கல்வியாளர்கள் ஆசிரியர்கள் என ஒரு குழு அமைத்து பாலினக்கல்விக்கான ஒரு பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும். வயதிற் கேற்றவாறு பாலினக்கல்விப் பாடத்தைப் பாடத் திட்டத்தில் இணைக்க வேண்டும்.. முதலில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் தயார்படுத்த வேண்டும். .பாலினக் கல்வி மூலம் எதிர்காலத்தில் பாலியல் வன்முறையைத் தவிர்க்கலாம். பாலினக் கல்வி வழங்கப்படுகிற பல நாடுகளில் பாலியல் குற்றங்கள் குறைந்தபாடில்லை என்பதும் பலரின் கருத்தாக அறிய முடிகிறது.

பாலினம் பற்றிய எந்தப் புரிதலையும் ஏற்படுத்தாமல் ஆண்-பெண் மாணவர்கள் பேசிக் கொள்வதையும் பழகுவதையும் கண்டித்து மாணவர் களைத் தண்டிப்பதும், நீக்கம் செய்வதும் காட்டுமிராண்டித்தனமானது. கண்டிக்கத்தக்கது. இத்தகைய பள்ளி- கல்லூரிகளை இழுத்து மூடுவ தோடு அங்கீகாரத்தையும் ரத்து செய்ய வேண்டும்.

*JNU, AIIMS* உயர்கல்வி நிறுவனங்களில் உள்ளது போல, பள்ளி, கல்லூரி விடுதிகளில் ஆண்-பெண் இருபாலாருக்கும் தனித்தனி விடுதிகளை புறக்கணித்துவிட்டு, பொதுவிடுதி முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. முறையான பாலினக்கல்வியை மாணவர்களுக்கு வழங்கிய பின்னரே இது போன்ற பொது விடுதி முறையைக் கொண்டுவரலாம்.

சாதியக் கட்டமைப்புகள் வலிமையாக உள்ள தமிழ் சமூகத்தில் காது குத்து விழாக்கள் சாதி, சமய முறைகளுக்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. பெரும் பாலும் தங்களுக்குச் சொந்தமான குலதெய்வக்

கோயில்களில் வைத்து ஆண், பெண் இருவருக்குமே காதுகுத்து விழாக்கள் நடத்தப்படுகிறது. குழந்தைகளை இறைவனுக்குக் காணிக்கையாக அளிப்பதே காதணி விழாவாகப் பார்க்கப்படுகிறது. பெண்களுக்குக் காதணி விழாக்கள் நடைபெறும் சமயத்தில் பெண்கள் ஒரு அலங்கார பொம்மையாகப் பார்க்கப்படுகிறாள். எனவே காது குத்தும் நிகழ்ச்சிக்கு அறிவியல் பூர்வமாக சில காரணங்கள் கூறப்பட்டாலும் அது நிருபிக்கப் படவில்லை. எனவே காது குத்து விழாக்கள் தடை செய்யப்பட வேண்டும்.

மேலும் இயற்கையின் விதிப்படி பெண் குறிப்பிட்ட வயதில் உடல் ரீதியானமாற்றங்களை அடைகிறாள். இதனைப் பெண் பூப்பெய்தி விட்டதாக அறிவித்து பூப்புனித நீராட்டு விழாக்கள் நடத்தப்படுகிறது. பூப்புனித நீராட்டு விழா என்பது வயதிற்கு வந்த பெண்ணை புனிதமாக்கும் நீராட்டு விழா என பொருள்படுகிறது. பூப்பெய்ததாகக் கருதப்படும் அந்த நேரத்தை வைத்து ஜாதகம், மாங்கல்ய பாக்கியம், சந்தான விருத்தி, தோஷவிருத்தி போன்றவை கணிக்கப்படுவது இந்துக்களின் ஐதீகம். இது பெண்களை அடிமைப்படுத்தும் இழிவுபடுத்தும் இந்துத் துவத்தை ஊக்குவிப்பதாக உள்ளது. எனவே பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடை செய்ய வேண்டும்.

ஒரு மனிதனின் இயற்கையான நிறத்தை மாற்றும் கிரீம்கள் உலகில் இல்லை. ஆனால் மக்கள் குறிப்பாகப் பெண்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் சிகப்பழகு விளம்பரத் தந்திரத்திற்கு அடிமையாகி விட்டனர். தங்கள் விளம்பரப் பொருள்களைத் திரும்பத் திரும்ப மக்கள் மனதில் திணித்து உளவியல் ரீதியாக அவர்களை அழகுக்கு அடிமையாக மாற்றி விட்டனர். சிகப்பாக இருப்பது தான் அழகு என்னும் தவறான கருத்தை விதைத்து விட்டனர். தன் நிறம் குறித்த தாழ்வு மனப் பான்மையை ஏற்படுத்துகின்றனர். சிவப்புத் தோலே முக்கியம், அழகு என்ற எண்ணத்தை உருவாக்கும் சிகப்பழகு வணிக கிரீம்களைத் தடை செய்வது மிக அவசர தேவை. இதுவும் பெண்ணை அலங்கார பொம்மைகளாகக் காட்ட முயற்சிக்கும். வணிகப் பொருளாக காட்ட முயற்சிக்கும். பெண் அடிமைத் தனத்தின் ஒரு வெளிப்பாடு.

பெண்கள் நகைகள் போட்டுக்கொள்வதை தான் நாகரீகம் என கருதிவருகிறார்கள். நகைகள் மீதான ஆசையும், அலங்காரத்தின் மீதான அக்கறையும் பெண்களைப் போகப் பொருளாக்குகின்றன என்று வேதனையடைந்தார் தந்தை பெரியார். பெண்கள் தங்களை ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக நினைத்து வாழ்வது தான் நாகரீகம் என்பதை உணரும் மனமாற்றம் ஏற்படவேண்டும். சுயமரியாதையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவையல்லாமல், அலங்காரப் பண்பாட்டைத் தூண்டும் நகை வணிகம், பட்டுவணிகம், மலர் வணிகங்களைத் தடை செய்வதால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திட இயலாது.

திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை வாழ விரும்பாமல் தனியாக வாழத்துணிந்த பெண்கள் நன்றாகக் கல்வி பயின்று உயர் பதவிகளை அடைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அல்லது தமது சுய தேவைகளுக்கு யாரையும் எதிர்பார்க்காமல், ஏதாவது ஒரு தொழில் செய்து அதன் மூலம் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். தங்களது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும். அரசும் தனித்து வாழும் பெண்களுக்கு மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்கித்தர வேண்டும்.

திருமணத்திற்கு முன்பே கருத்தடை செய்து கொண்டவர்களுக்கும், பிள்ளை பெற்றுக் கொள்ளாதவர்களும் கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும்.

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பிற்குள் வராமல் பெண்ணின் உழைப்பு குடும்பத்துக்குள் புதைந்து போய் கிடக்கிறது. இதனால்தான் பலபொதுவுடமை இயக்கத் தலைவர்கள் குடும்பத்திற்குள் உழைப்புப்பகிர்வு தான் தீர்வு என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். வீட்டு வேலை பெண்வேலை என்ற சிந்தனை மாறாமல் இதற்குத் தீர்வு காண முடியாது. இதனால் தான் தந்தை பெரியார், வீட்டுக்கொரு அடுப்படி என்ற முறையை ஒழிக்கவேண்டும் என்றார். இல்லங்களில் சம உழைப்பை அளிக்காத ஆண்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் திருமணம் என்பது சட்டப்படியான செக்ஸ்க்காக போடப்பட்ட ஒரு ஒப்பந்தமாகவே உள்ளது. (Contract for Legalized Sex). இங்கு திருமணமான ஒருபெண் அவளின் விருப்பம் இல்லாமல் கணவனால் துன்புறுத்தப்படுவதை ஒரு குற்றமாகப் பார்க்கப்படுவதில்லை. அதற்கான தகுந்த சட்டப்பிரிவுகள் இல்லை .

இந்தியாவில் காணப்படும் படிப்பறிவின்மை, வறுமை, அளவுக்கதிகமான இந்துத்துவ அடிப்படையிலான மூட நம்பிக்கைகள் தான் இந்தியாவில் Marital Rape க்கு எதிரான சட்டங்களை இயற்ற இயலாத சூழலை ஏற்படுத்தியுள்ளன. பெண் ஆணின் சுக துக்கங்களுக்காவே படைக்கப் பட்டவள் என்ற முட்டாள்தனமான சிந்தனையே இதற்கு அடிப் படை.

திருமணம் முடிந்தவுடன் பெண் தன் பெற்றோரை, குடும்பத்தை, இடத்தை விட்டுக் கணவன் வீட்டுக்குச் சென்று வாழ வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் இந்தியாவில் உள்ளது. தனிக்குடித்தனம் செல்வதால் இன்று குழந்தைகள் பராமரிப்பில் பிரச்சனைகள் எழுவதாகவும், கலாச்சாரச் சீரழிவுகள் நடைபெறக் காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. வயதான தாய்

தந்தையரைக் கவனிக்காமல் விட்டு வருவது தான் பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. வயதான பெற்றோரைப் பாதுகாக்காமல், பராமரிக்காமல் தனியாக விட்டு வருவதும், முதியோர் இல்லங்களில் பெற்றோரைச் சேர்ப்பதும் மனவேதனை தரக் கூடியவை தான். அதில் மாற்றுக்கருத்து இல்லை.

பெற்றோரைப் பாதுகாப்பது பிள்ளைகளின் கடமையே ஆகும். அதே நேரத்தில் இங்கு பெண் திருமணத்திற்குப் பின்னர் தமது பெற்றோரைப் பிரிந்து வரக்கூடிய நிலை தான் இங்கு பிரச்சனை. அதுவும் பெண்ணடிமைத்தனத்தின் ஒரு வெளிப் பாடு. எனவே தான் திருமண வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சமம் என்பதை வலியுறுத்துவதற்காக திருமணத்திற்கு முன்பே தனிக்குடித்தனம் உறுதி செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் உறுதி செய்யப்பட வேண்டும்.

திருமணத்தின் போது சீர் அல்லது செய்முறை என்ற வகையில் பெண் வீட்டாரிடம் இருந்து பணம், நகை கட்டாயப்படுத்தி வரதட்சணை யாகவோ அல்லது மனவிருப்பத்தின் அடிப்படை யிலோ பெற்றுக் கொள்கின்றனர். பல நேரங்களில் பெண்களே பெண்களை வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள். சில நேரங்களில் மாப்பிள்ளை வீட்டாரே வரதட்சணையைத் தவிர்த்தாலும் மணமகள் பெற்றோரை வற்புறுத்தி நகை பணம் சொத்து என பலவற்றை பிடுங்கிக்கொள்கிறாள். இதனால் பெற்றோர்கள் வயதான காலத்தில் பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்படுகிறார்கள். எனவே திருமணகாலத்தில் பிள்ளைகள் பெற்றோரிடம் நகை, பணம் கேட்பதைக் குற்றமாகக் கருத வேண்டும்.

தொழில் நுட்பம் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில்கூட பெண்களுக்குச் சொத்தில் எவ்வளவு உரிமை இருக்கிறது? என்னென்ன வழிகளில் இருக்கிறது? என்ற புரிதல், விழிப்புணர்வு இன்னும் ஏற்படவில்லை. சொத்தில் பெண்களுக்கும் சம பங்குண்டு என, 1956 இல் இயற்றப்பட்ட சட்டம் பற்றி இன்னும் பெண்கள் தெளிவாக அறிந்திருக்கவில்லை. அப்படியே சட்டம் தெரிந்திருந்தாலும் சொத்தைப் பெறுவதற்கான சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான துணிச்சல் இல்லை. இன்னும் பல பெண்கள் தாமாகவே முன் வந்து சொத்தில் தமக்குள்ள உரிமையைப் பெண் என்ற அடிப்படையில் விட்டுத்தருகின்றனர். ஆதலால் போதிய வருமானம் இன்றி அடிமை வாழ்வுக்கு தள்ளப்படுகின்றனர். எனவே, பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு பெண்களுக்குச் சொத்துரிமை பற்றிய சட்ட விழிப்புணர்வு அரசு, அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் ஏற்படுத்த வேண்டும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப் பட்டுள்ளதா என்பதைக் கண்காணிக்க ஆணையம் அமைக்கப்படலாம். சொத்தில் பங்கு வழங்காத ஆண்களின் சொத்தை பறிமுதல் செய்யலாம். ஆணையம் அமைப்பது என்பதை விட பெண்களை விழிப்புணர்வு பெற்றவர்களாக மாற்றுவதே பயனளிக்கும்.

இந்தியாவில் அனைத்துக் கல்வித் தளங்களிலும் பெண் குழந்தைகள், சில சமயங்களில் ஆண் குழந்தைகளும் ஆண், பெண் மாணவர்கள், ஆசிரியர்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். மழலையர் கல்வி முதல் உயர் கல்வி வகுப்புகள் வரை இத்தகைய பாலியல் கொடுமைகள் காணப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்காக அரசு அனைத்து பள்ளி, கல்லூரிகளிலும் ஒரு விசாரணைக்கமிட்டி - Anti - Sexual Harassment Cell அமைக்க ஆணை பிறப்பித்தது. அக்கமிட்டியில் நிறுவனங்களின் மேலதிகாரிகளும், கட்டாயமாக ஒரு பெண் மற்றும் தன்னார்வ அமைப்பைச் சார்ந்த ஒருவரும் இடம் பெற வேண்டும் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது.

ஆனால், நாமறிந்த வகையில் பெரும்பாலான கல்வி நிறுவனங்களில் இந்த விசாரணைக் கமிட்டி என்ற ஒன்றே உருவாக்கப்படவில்லை. எனவே விசாரணைக் கமிட்டி அமைப்பதுடன் கமிட்டியில் நிர்வாகம் தவிர மனநல ஆலோசகர், காவல் துறையைச் சார்ந்த ஒருவர், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதி ஒருவரையும் இணைத்து இந்த விசாரணைக் கமிட்டி ஒழுங்காகப் பணியாற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதனைச் செய்யத்தவறும் கல்வி நிறுவனங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும்.

நம் நாட்டில் பெண்ணுக்குத் திருமண வயது வந்தவுடன் பெற்றோர்கள், பெண்ணை யாராவது ஒருவர் கையில் பிடித்து கொடுத்துத் தமது கடமையை நிறைவேற்ற விரும்புகிறார்கள். எனவே பெரும்பாலும் பெண்ணின் சம்மதமின்றி பெண்ணைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து வைக்க முற்படுகின்றனர். பெண்களும் பெற்றோரை எதிர்த்துப் பேச முடியாமல் விருப்பமில்லாமல் சம்மதிக்கின்றனர். விளைவு? திருமண வாழ்க்கையில் சிக்கல்கள். மணமுறிவு போன்றவற்றைச் சந்திக்க வேண்டியதாகிறது.

இதுவும் பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடேயாகும். தமக்கு விருப்பமானவர் களுடன் வாழ்வது, மணமுடிப்பது பெண்ணின் அடிப்படை உரிமை. இதனைக் கண்காணிக்கத் தனிஆணையம் என்பதெல்லாம் எதிர் பார்த்த அளவில் வெற்றிதராது. பெண்கள் முன் வந்து தனக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கான வழியைத் துணிச்சலாக எதிர்கொள்ள வேண்டும். மகளிர் ஆணையம் போன்ற எத்தனையோ ஆணையங்கள் பெயரளவில் அமைக்கப் பட்டுள்ளதே தவிர ஆணையங்களால் ஆணைகளை நிறைவேற்ற இயலவில்லை.



Kitchen DEMOLISH VEDIC TRADITION'S

# ‘தஷ்வந்த்’களை உருவாக்கியது நாம்தான்!

**தோழர் தமிழ்வாணன்**
பெரியாரியப் பெண் விடுதலை இயக்கம்

ஒரு பெரிய இயக்கத்தை வைத்துக் கொண்டு ஆணித்தரமான ரேடிக்கல் பெண்ணியத்தைப் பேசிய பெரியாரை அவருக்குப் பின் எந்த ஒரு திராவிட இயக்கமும் பெறவில்லை என்பது நம் கவலை தான். பெரியார் அளவுக்கு பெண் விடுதலையில் அதிக Frequency இல் இயங்கும் ஓர் தலைமையை இந்தத் தலைமுறை காணாததன் விளைவாகத்தான், சில கம்யூனிஸ்ட்கள் பெண்ணியத்திற்குள் வர்க்கப் பார்வையைப் புகுத்தி அதன் Frequency ஐ குறைத்துவிட்டனர்.

அதனாலே, ‘காட்டாறு’ வெளியிட்டிருக்கும் இக்கோரிக்கைகளைப் பார்த்தால் பலருக்கு சிரிப்பு வரலாம். ஏன் இயக்கப் பணிகளில் இருப்பவர்களே கூட இவைகளைப் பார்த்து நகைக்கலாம். ஆனால் இதையெல்லாம் அந்த ஈரோட்டு கிழவன் 50 வருடங்களுக்கு முன்பாகவே தீவிரமாகப் பேசி அறிவுறுத்திய கோரிக்கைகள் தான்.

பிள்ளைகளை இருபாலர் கல்வி நிலையங்களில் படிக்க வைக்க வேண்டும் என்கிற நிலைமை இப்போது சகஜமாகி விட்டது. ஒரு காலத்தில், இது ஒழுக்கக் குற்றமெனக் கருதப்பட்டது. இன்று ஒன்றாய்த்தான் படிக்கட்டுமே என்கிற நிலைமைக்கு முன்னேறியுள்ளது. ஆனால் பல கல்வி நிலையங்களில், குறிப்பாகக் கல்லூரிகளில் ஆண் மாணவர்கள், பெண் மாணவர்களுடன் பேசக் கூடாது, பழகக்கூடாது, எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்கிற கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. இதனால் என்ன ஆகிவிடப் போகிறது??

**‘தஷ்வந்த்’களை உருவாக்கும் கல்வி நிலையங்களை இழுத்து மூடுவோம்!**

ஏன் ஆண் மாணவர்கள், பெண் மாணவர்களுடன் பழகக்கூடாது ? இன்று வன்புணர்வு செய்யும் விஷமிகள் எல்லாம் யாரால் உருவாக்கப் பட்டவர்கள்? அட 8 வயதுக் குழந்தையை வன்புணர்ந்து எரித்த தஷ்வந்துக்கு தூக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. அதனால் இனி ஒரு தஷ்வந்தும் உருவாக மாட்டானா என்ன ? தஷ்வந்த்கள் உருவாக காரணம் யார்? ரொம்ப யோசிக்க வேண்டாம். தஷ்வந்தை வளர்க்கும் பெற்றோர்களும், ஆண் - பெண் நட்பு அனுமதிக்காத கல்வி நிலையங்களும் தான்.

மொத்தமாக ஆணாதிக்க ஊட்டச்சத்தை ஊட்டி வளர்க்கும் பெற்றோர்கள், ஆண் குழந்தைகளைப் பருவம் எட்டியவுடன் பெண் குழந்தைகளுடன் பழக அனுமதிப்பதில்லை. பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் இன்னும் மோசம். இருபாலர்களும் சேர்ந்து பழகிவிடவே கூடாது. அப்படிப் பழகிவிட்டால் கலாச்சாரம் கெட்டுப் போகிவிடும் என கூறி கூறியே .... காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து தஷ்வந்த் காலம் வரை “வன்புணர்வுக் கலாச்சாரத்தை” பாதுகாத்து வளர்த்து வருகிறோம்.

எதிர் பாலினத்துடன் சகஜமாய் நட்புடன் பழகாத எந்தப் பிள்ளையும், எதிர்பாலினத்தின் மீது புரிதலற்ற அறிவை தான் கொண்டிருக்கும். ஊரிலிருந்து நகரத்திற்கு படிக்க, வேலை பார்க்க வந்த பல ஆண்களுக்கு பெண்களிடம் பேசவே தெரிவதில்லை. அவர்களின் மூளையில், பெண்



பற்றிய என்னமெல்லாம், அதிகமாக காமம் பற்றியதாய் மட்டுமே இருக்கும். அது மட்டுமின்றி பெண்கள் மீதான அவர்களின் பார்வையும் ஆதிக்கம் கொண்டவையாய் தான் இருக்கும்.

படிக்கும் போதே பெண் பிள்ளைகளுடன் பழகிய ஆணுக்கு அவர்களுடன் சகஜமாய் பழக வேண்டும், நட்பாய் இருக்க வேண்டும், ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்கிற குணாதிசியங்கள் தானாய் அவனுடன் வளர்ந்து வரும்.

இதையெல்லாம் வளர விடாமல், அவனைக் கட்டிப்போட்டு வளர்க்கும்போது தான், பெண்ணின் மீதான அவனின் சிந்தனையெல்லாம் காமம் என்பதாய் மட்டும் இருக்கிறது. ஆக, தஷ்வந்த்களை உருவாக்குவது “பெண் பற்றிய புரிதல் கொடுக்காமல்” வளர்க்கும் பெற்றோர்களும், கல்வி நிலையங்களும் தான் என ஏற்றுக்கொள்வோம்.

அதுமட்டுமல்ல. பிள்ளைகளை Alphabetical order இல் உட்கார வைக்க வேண்டும். ஏன்? நம் கல்வி நிலையங்களில் ஆண்களெல்லாம் ஒரு பக்கமும், பெண்கள் ஒரு பக்கமும் உட்கார்வார்கள். ஏன் எனக் கேட்டால், ஆணையும் பெண்ணையும் ஒன்றாய் உட்கார வைத்தால் அவர்களுக்குள் காம எண்ணங்கள் தான் வரும் என்பார்கள்.

அட முட்டாள்களே. . . இல்லையென்றால் மட்டும் வராதா என்ன? அப்படி இருவருக்குள் ஈர்ப்பு இருந்தால் நீங்கள் எத்தனை சுவர் கட்டினாலும், தடுக்க முடியாது.

**சரி அப்படி உட்கார வைத்தால் என்ன நடக்கும் ??**

ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் பாலின பேதமற்று சகஜமாய் பக்கத்தில் இருப்பவருடன் நட்பு பாராட்ட இது உதவும். சொல்லப்போனால், ஆண்-பெண் என தான் உட்கார வேண்டும் என்கிற விதிமுறையைப் பின்பற்றுவதும் மிக சிறப்பானது.

எனக்குத் தெரிந்து எங்கள் பகுதியில் ஒரு தனியார் பள்ளியில் இது தான் விதிமுறை. அங்கு படித்த என் நண்பர்கள் எல்லாம். பெண்ணியம் பேசும் என்னைவிட நன்றாகவே பெண்களுடன் பழகுகிறார்கள். ஆணுடன் பழகுவதற்கும், பெண்ணுடன் பழகுவதற்கும் அவர்களிடமிருந்து வித்தியாசமே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறார்கள். மேலும் பெண்ணைச் சமமாய் மதிக்க வேண்டும் என்பது பள்ளிப் பருவத்திலிருந்தே அவர்களிடம் வளர்ந்துவிட்டது என்றே கூற வேண்டும். அந்த பள்ளியில் படித்த ஒருத்தனும் தஷ்வந்த் போல் ஆக மாட்டான் எனக் கொஞ்சம் பலமாய் என்னால் கூற முடியும்.

**ஆண்களுடன் பழகாத பெண் குழந்தைகள் எப்படி இருப்பார்கள்?**

எப்படி ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகள் மீது புரிதலற்று காமம் பற்றிய சிந்தனை மட்டுமே வைத்திருப்பார்களோ, அப்படியே தான் பெண் பிள்ளைகளும் இருப்பார்கள். ஆனால் ஆண்கள் ஆதிக்க நிலையிலும், பெண்கள் அடிபணிதல் நிலையிலும் இருப்பார்கள். ஆண்களுடன் பழகாத பெண்கள், ஆண்கள் மீது அச்ச உணர்வுடன் இருப்பார்கள். மேலும் ஆணின் அத்தனை அசைவுகளிலும் காமத்துடன் இருப்பதாய் எண்ணுவார்கள். இப்படி எதிர்பாலின புரிதலற்ற, பாலின பேதம் கொண்ட சமூகத்தைத் தான் கலாச்சாரம் என்கிற பெயரில் வளர்த்துக்கொண்டு வருகிறோம்.

மேற்கத்திய நாடுகளிலும், JNU, AIIMS போன்ற நிறுவனங்களிலும் ஆண், பெண் இருபாலரும் ஒன்றாய்த் தங்கி படிக்க கூடிய விடுதிகள் உள்ளன. அப்படிப்பட்ட விடுதிகள் நாடு முழுவதும் வரவேண்டும். அப்போது தான் பாலியல் புரிதலுடைய, வன்புணர்வுகளற்ற சமூகம் உருவாகும். பூட்டிப் பூட்டி வைக்கப்பட்ட காமம் தான் குற்றமாய் மாறுகிறதே ஒழிய, காமம் என்பது எளிதில் கிடைக்கப்பெறுபவையாய் இருக்கும்போது, ஒருவரின் விருப்பமின்றி அவரைப் புணரும் எண்ணம் ஏற்படாது.

இதற்கு, குழந்தைப் பருவத்திலிருந்தே பாலியல் கல்வியைக் கொடுப்பதும் அவசியம். குறிப்பாக பெற்றோர்கள் இதைப்பற்றிப் பிள்ளைகளிடம் பேச வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சமூகமே அறிவளவிலும், குணமளவிலும், பாலியல் புரிதலுடைய முன்னேறிய சமூகமாய் இருக்க முடியும்.

பாலியல் புரிதலுடன், பாலினச் சமத்துவத்தையும் கற்றுத்தர வேண்டும். அதை செய்முறையிலிருந்தே பெற்றோர்கள் வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ஆண் பிள்ளைகளையும் வீடு பெருக்க, குப்பை அல்ல, சமையல் செய்ய, உடை அலச வற்புறுத்த வேண்டும். குறிப்பிட்ட வயதிற்கு மேல். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, கட்டாயமாக இவ்வேலைகளை வீட்டில் செய்ய வேண்டும். அப்படி இருக்கும்போது தான் இல்வாழ்வில் ஆணும் பெண்ணும் சம உரிமையோடு, சுயமரியாதையோடு இருப்பார்கள். அப்படி இல்லையேல், வீட்டில் சமையலறையை வைக்கக் கூடாது. இருவரும் வெளியில் உண்ணலாம்.

**சமையலறை அற்ற வீடு கட்டுங்கள்**

பெண்களே சமையல் செய்ய வேண்டும் என்கிற நிலை ஒழிய, பெரியார் அன்றே சொன்னார், “சமையலறை அற்ற வீடு கட்டுங்கள்”

என! அப்போது உணவு எப்படிக் கிடைக்கும் எனும் கேள்வியை வைப்பவர்கள், ஆணுக்கு எப்படிக் கிடைக்கிறதோ அப்படியே பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும் என்கிற நியாயத்தையும் ஏற்றுக் கொள்ளட்டும்! சமையலறைகள் இல்லா வீடுகள் உண்டானால் தான், தரமான உணவுகள் செய்யும் உணவகங்கள் உருவாகும். அதிக அளவில் உருவாகும். அன்று பெண்களுக்குச் சமையலில் இருந்து விடுதலை கிடைக்கும்.

மேலும், பெண்களைத் திருமணம் என்கிற ஒற்றை நோக்குக்காக வளர்ப்பதைப் பெற்றோர்கள் நிறுத்த வேண்டும். ஆணை போல் சுயமரியாதையுடைய, சுய சம்பாத்தியம் உடைய பிறவிகளாக பெண்களை யோக்கியமான பெற்றோர்கள் உருவாக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கை இணையை அவர்களாகவே தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் பார்த்து எடுத்துக்கொடுக்கும் பச்சை சுடிதாரை விட, அவள் ஆசைப்பட்டு எடுத்த சிகப்பு டாப்பை தான் அவள் விரும்பி அணிவாள். ஆனந்தமாய் ரசிப்பாள்.

அப்படிப்பட்ட ஆனந்தத்தைப் பார்க்கும் பெற்றோர்களாய் பெண்களை அவர்களின் வாழ்க்கை இணையை அவளுக்கு ஏற்றவாறு அவள் தேர்ந்தெடுக்க விட வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வாழ உதவ வேண்டுமே ஒழிய, பிள்ளைகளின் வாழ்க்கையையும் அவர்களே வாழ்ந்து விட கூடாது. பிள்ளைகள் சந்தோஷம் தான் முக்கியம், கலாச்சார கோட்பாடுகள் முக்கியமல்ல என நினைக்கும் பெற்றோர்களால் மட்டும் தான் இந்தச் சமூக அமைப்பை மாற்ற முடியும் என்பதை உணர்வோம்!

தோழர் திண்டுக்கல் விஜி-புதியகுரல்

# வீடுகளில் கிடைக்கும் சுகபோகங்களைத் துறக்க வேண்டும்

தந்தை பெரியாரின் கருத்துக்களை உள்வாங்கி, பெண்ணியச் சிந்தனைகளுடனும் சுயமரியாதையுடனும் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட அத்தனை பெண்களுக்கும் எனது எழுத்துக்களை சமர்ப்பிக்கிறேன்.

பெண் இயல்பிலேயே வலிமை வாய்ந்தவள் என்பது கடந்த காலங்களைத் திரும்பி பார்த்தால் நிரூபணமாகிறது. மனிதன் நாடோடிகளாக வாழ்ந்ததிலிருந்து பெண்கள் தான் அந்த குழுக்களின் தலைமை வகித்து வந்துள்ளார்கள். குழந்தைகளுக்குத் தாய் மட்டும் தான் அடையாளப்படுத்தப் பட்டுள்ளார்கள். தாய்வழிச்சமூகமாக இருந்ததற்கு அவர்களின் வாழ்க்கை முறையும் காரணமாக அமைந்தது. காலப் போக்கில் குழுக்களாக வாழ்ந்த மனிதர்கள் மண்ணைக் காக்கவும், தாங்கள் வாழ்ந்த பகுதிகளை ஆதிக்கம் செலுத்தவும் ஆசைப்பட்டுக் கூட்டுக் குடும்பங்களாக வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்.

மெல்ல மெல்ல, 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நிலை உருவாகி, பெண்கள் வீடுகளில் குடும்பத்தைப் பராமரிப்பவர்களாக மாற்றம் பெற்றார்கள். வீடுகளுக்குள்ளேயே முடங்கிப் போனதால் அவர்களின் திறன் முடங்கிப் போனது. விளைவு... 'வலிமையற்றவள்' என்ற முத்திரை குத்தப்பட்டது. மேலும் வீடுகளில் கிடைக்கும் சுக போகங்கள் வீட்டை விட்டு வெளியே போக மனதும் அனுமதிக்கவில்லை. வீட்டைப் பராமரிப்பதும் குழந்தை பெற்று அதனை வளர்ப்பதும் மட்டுமே அவளுக்கானதாக மாறிப்போனது. இதனால் பெண்ணின் மீதுள்ள அடக்குமுறைகளுக்குப் பெண்ணே காரணமாகி விட நேருகிறது.

எங்கெல்லாம் அடக்குமுறைகள் சமூகத்தால் ஏற்படுத்தப்படுகிறது என்று பார்த்தோமானால்... முதலில், பள்ளிக்கூடங்களில்... ஆணும், பெண்ணும் சேர்ந்து படிக்கும் கல்விக் கூடங்களில் இயல்பாக இருபாலரும் பேசுவது கட்டுப்படுத்தப்படுகிறது. விளைவு..சிறுவயதிலேயே பாலின ஈர்ப்புகளுக்குத் தள்ளப்படுகிறார்கள். ஈவ் டீசிங் போன்ற குற்றங்கள் நடக்க ஏதுவாகிறது. சமூக சிந்தனையற்ற மாணவர்களைத் தான் இன்றைய பள்ளிக்கூடங்கள் உருவாக்குகின்றன. சக மனிதனிடம் பேசக்கூடாது என்பது உரிமை மீறலாகும்

பள்ளிகளில் பாலியல் கல்வி கற்றுத் தருவதால் பாலினப் பாகுபாடுகளைக் களைய வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மாணவர்கள் எதிர்ப் பாலின ஈர்ப்புகளை எதிர்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். காதலுக்காகப் பெண்களைக் கொலை செய்யும் அவலங்கள் குறையும். ஆண்-பெண் உடல் மாற்றங்களைத் தெரிந்து கொள்வது பாலியல் - பாலினக் கல்வியால் மட்டும் தான் தெரிந்து கொள்ள முடியும். எனவே, பள்ளிக்கூடங்களில் பாலியல் கல்வியைப் பாடமா[illegible]டும்.

JNU, AIIMS போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் இரு பாலர் தங்கும் விடுதிகள் தனித்தனியே இல்லாமல் சேர்ந்து தங்குவதாக இருப்பது போல், சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு பழக்கப் படுத்தினால் இயல்பான தன்மைக்கு மாற வாய்ப்புகள் அதிகம். குடும்பங்களில் ஆணும் பெண்ணும் சகஜமாக இருப்பது போன்று மாற்றங்கள் ஏற்படலாம்.

பூப்புனித நீராட்டு, பெண்களுக்குச் செய்து வைப்பது அடிமைத் தனமானது. ஆண் வயதுக்கு வருவது சிதம்பர ரகசியமாக கட்டிக்காக்கப்படும் போது, பெண் வயதுக்கு வருவது ஊருக்குத் தம்பட்டம் அடிப்பதாகவே தான் உள்ளது. பெண்ணின் படிப்பு இதனால் தடையானது. கிராமங்களில் இந்தப் பழக்கம் அதிகமாக உள்ளது. நகரங்களில் இவ்விழா சற்று குறைந்துள்ளது. பெண் வயதுக்கு வருவது, பிள்ளைபெறத் தகுதியாகி விட்டாள் என்பதைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் இந்த விழாக்கள் தடை செய்யப்பட வேண்டும்.

திருமணத்திற்கு ஆண்கள் சரியான வேலை கிடைத்த பின்பே தயாராகிறார்கள். ஆனால் பெண்கள் பதினெட்டு வயது ஆனவுடனே திருமணம் செய்து வைக்கப்படுவதால் பெண்ணின் படிப்பும் வேலை பார்த்து பொருள் ஈட்டும் தன்மையும் அவளுக்கு மறுக்கப்படுகிறது. வீட்டைப் பராமரிக்கும் உணர்வற்ற மனுசியாக மாறிப் போகிறார்கள். ஆணும், பெண்ணும் சரியான கல்வி, வேலை வாய்ப்பு பெற்றுத் திருமண வாழ்க்கைக்குள் செல்வதே மிகவும் சிறப்பாகும்.

சிவப்பழகு கிரீம்கள் பெண்களுக்காகத் தான் தனிச்சந்தையில் விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்படுகிறது. இது சமூகத்தின் மிகவும் அபத்தமான செயல். பெண்கள் சிவப்பாக இருந்தால் தான், திருமணச் சந்தையில் விலை போகிறாள். அவளுடைய அறிவு, கல்வி ஆளுமைகள் எல்லாம் சிவப்பழகால் முடக்கப்படுகின்றன. பெண்ணின் மீது நிகழ்த்தப்படும் சிவப்பு ஆதிக்கம் தடைசெய்யப்பட வேண்டும். அதைத் தூண்டும் இந்தக் கிரீம்களும், விளம்பரங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S

**தோழர் அபிநயா** மனிதி அமைப்பு

# குடும்பச் சங்கிலிகள் தெறிக்க வேண்டும்



ஒவ்வொரு முறையும் சமையல் செய்யும் போதெல்லாம் பல கேள்விகளுட னேயே உள்ளே நுழைவதாய்ப் பல தோழர்கள் என்னிடம் பகிர்ந்ததுண்டு. நானும் அப்படியே. ஒருமுறை அம்மா சொன்னார், யாராவது செய்து கொடுத்து அதை ருசித்துச் சாப்பிட வேண்டும் என எனக்குமே அப்படித் தோன்றி இருக்கிறது. எந்தக் காலம் ஆயினும் பெண்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத் துடனேயே தன் வாழ்க்கையை நகர்த்த வேண்டி இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட அத்தனை கோரிக்கைகளும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையது. சமையல் செய்து கொண்டே வீட்டைப் பராமரிப்பது, குழந்தை களைக் கவனிப்பது என பலதும் செய்ய வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு. அதே நேரத்தில் பெண்கள் தினத்திற்காக அவளை பெருமைப்படுத்துகிறேன் என்கிற பெயரில் பெண் என்பவள் மல்டி டேலண்ட் என்கிற ஒரு எலும்புத் துண்டு வார்த்தை வேறு...

இந்தக் குடும்பம், குழந்தை, அழகுசார் கட்டமைப்பு, பாகுபாடு என எல்லாமும் அவளை ஒடுக்குவதை அறியாமல் இருக்கவே அல்லது அதை உணராமல் இருக்கவே இது போன்ற வார்த்தைகள் ஆண்களிடம் இருந்து வருகிறது எனத் தோன்றும்.

*தோசை அம்மா தோசை...*
*அம்மா சுட்ட தோசை...*
*அப்பாக்கு 4...*
*தம்பிக்கு 3...*
*தங்கைக்கு 2...*
*அம்மாக்கு 1...*

என்கிற ரீதியில் தான் பெண்கள் எந்தக் கதாபாத்திரத்தில் இருந்தாலும் அவளுக்கு உணவு கூடக் குறைவாய்க் கொடுக்க வேண்டும் என்பதைக் குழந்தைகளின் பாடப்புத்தகங்களில் கூட விதைக் கின்றனர். பெண்கள் அளவாக உண்ண வேண்டும், சத்தமாய்ச் சிரிக்கக் கூடாது, குடும்பத்தின் கவுரவ மையமாய் இருக்க வேண்டும், போன்றவை எழுதப்படாத விதி இல்லை; எழுதப்பட்ட விதி தான்.

அம்மா சமையல் செய்கிறார், அப்பா பேப்பர் படிக்கிறார். தம்பியோ, அண்ணனோ அவர் விளையாடுகிறார். அக்கா வீட்டைப் பெருக்குகிறார். பெண் என்பவள் வேலை செய்பவள். ஆண் விளையாடப் பிறந்தவன். விளையாட்டு அதுவும் வெளி விளையாட்டுக்கள் பெண்களுக்கு அனுமதி இல்லை. அவர்களுக்காகவே சோட்டாங்கல்,

Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S

ஆடுபுலி ஆட்டம் (அதில் கூட ஆடும் புலியும் தான்) நொண்டி எனப் பெண்களுக்காகவே இவை ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் பெண் குழந்தைகளுடன் ஆண் குழந்தைகள் போய் நொண்டி விளையாடினால் பொட்ட மாதிரி விளையாடுர என பெண்களே கடிந்து கொள்வதை நாம் பார்த்து இருக்கிறோம். ஆக நாம் மேற் குறிப்பிட்ட அனைத்தும் பெண்ணின் வரலாற்றை மீட்டெடுக்க, சமூகத்தில் சரி நிகராய் சுயமரியாதை யுடன் இயங்க வழிவகுக்கும்.

**கருப்பு இராஜகுமாரி**

தமிழ்த் திரை உலகின் முதல் கனவு கன்னி என்று அழைக்கப்பட்ட டி.ஆர்.ராஜகுமாரியை தனது படத்தின் கதாநாயகி என பி.கே. சுப்பிர மணியம் அறிவிக்கும் போது அனைவரும் கேலி செய்தார்களாம். காரணம் டி.ஆர்.ராஜகுமாரி கருப்பாய் இருப்பதால். ஒப்பனைக் கலைஞர் அவருக்கு ஒப்பனை செய்ய மறுத்து விட்டார். பின்னாளில் அவரின் நடிப்புத் திறமையை நாம் அனைவரும் அறிவோம். இந்தச் சிவப்பு அழகு கிரீம் இந்த வார்த்தையே அவ்வளவு வக்கிரமானதாய் இருக்கிறது. இந்த வெள்ளை மோகத்தால் தாழ்வு மனப்பான்மையில் தற்கொலை செய்து கொண்ட பெண்களின் விவரம் கூட வெளியில் தெரிவது இல்லை.

அழகு என்பது நிறம் தொடர்புடையது என்கிற கற்பிதம் வீட்டில் இருந்தே தொடங்குகிறது. உறவுக்காரப் பெண் ஒருத்தி கர்ப்பமாய் இருந்தால் அவளின் அம்மா அவளிடம் எந்நேரமும் பெண் குழந்தை வேண்டாம்; ஆண் குழந்தை வேண்டும். அப்படியே பெண் குழந்தை பிறந்தால் வெள்ளையாக இருக்க வேண்டும் என்பார். இப்போது குழந்தை பிறந்து விட்டது. பெண் குழந்தை, அதுவும் கருப்பாய் அவர்கள் வருத்தப் படுகிறார்கள். அவர்கள் கோபப்படுகிறார்கள், அவர்கள் அடுத்த முறை வெள்ளையான பெண் குழந்தைக்கோ ஆண் குழந்தைக்கோ காத்திருக் கிறார்கள். யார் அவர்கள்?

அவர்கள் தான் வரதட்சணை
கேட்டுக் கொளுத்தப்பட்டபோது
தீப்பெட்டி எடுத்துக்
கொடுத்தவர்கள். சமூக, குடும்ப
அழுத்தத்தால் தற்கொலை
செய்தவளின் தூக்கிக் கயிற்றை
மாட்டி விட்டவர்கள்.

**குடும்பச்சங்கிலி**

இன்னொரு கதையையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு திருமணம் நடக்கிறது. அது மதம் மறுத்த திருமணம். நமக்குத்தான் அது மறுப்பு. அவர்களைப் பொருத்தவரை காதல் திருமணம் கருப்பு, நீல, சிகப்பு வாடை இல்லாத சராசரி இணையர்கள் திருமணத்திற்கு நான் சென்று இருந்தேன். மணமகன் இந்து, மணமகள் மலையாளக் கிறித்தவர். திருமணமோ இந்து முறைப்படி நடந்தது. திருமணம் ஆன 3 ஆவது மாதத்தில் இருந்தே குழந்தை பெற்றுக் கொள்ளச் சொல்லித் தொந்தரவு. அந்தப் பெண்ணிற்குத் தற்போதைக்கு விருப்பம் இல்லை. காதல் இணையும் தனக்குச் சாதகமாய் இல்லை. உளவியல் ரீதியில் மோசமாய்த் தொந்தரவு செய்ததால் பெற்றுக் கொள்கிறார்.

குழந்தை பிறந்ததும் இந்துப் பெயர் வைக்கச் சொல்லி டார்ச்சர். குலதெய்வ வழிபாட்டைப் பின்பற்றச் சொல்லி வற்புறுத்தியதோடு, குழந்தைக்குக் கோவிலில் காது குத்தச் சொல்லிப் பிரச்சினை. பெண்ணோ கிறித்துவர். திண்டாடிக் கொண்டு இருக்கிறார். அவர் தனிக்குடித்தனம் செல்ல அனுமதி மறுப்பு. ஒரு எல்லைக்கு மேல் பொறுக்க முடியாமல் தனிக் குடித்தனம் வருகிறார். அதன் பிறகு இன்னும் அதிகமான வன்முறையை எதிர் கொள்கிறார் வார்த்தைகளால். மேலும் அவர் திருமணமாகி வந்த நாளில் இருந்து அடுப்பறையில் தான் அவர் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார். அங்கேயே சமைத்து அங்கேயே சாப்பிட்டு, வேலைக்குச் சென்று கொண்டிருந்தார். இப்போது அதுவும் இல்லை. அவர் விருப்பப்படி உடை உடுத்தினார் இப்போது அதுவும் இல்லை.

இந்தக் கதை இப்போது நடந்து கொண்டிருக்கும் உண்மைச் சம்பவம். நம் கோரிக்கைகள் எவ்வளவு முக்கியத்துவமானவை, அவசியமானவை பெண்களுக்கு என்பதை இந்த ஒரு பெண்ணின் வாழ்க்கையே சொல்லிவிடும். இதில் எல்லாமுமே அடங்கி இருக்கிறது. சமையல், குலதெய்வ வழிபாடு, குழந்தை பெற்றுக் கொள்ள அல்லது மறுக்க உரிமை இல்லாமை, பொருளாதாரச் தற்சார்பு இன்மை மற்றும், தான் திருமணம் செய்த இணையின் குடும்பம் என்ன நம்பிக்கை, என்ன பண்பாட்டுக் கட்டமைப்பை நம்பி இருக்கிறார்களோ அதையே தான் பெண்ணும் தொடர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப் படுகிறாள்.

எந்த நம்பிக்கையின் வழிப் பயணப்பட்டாலும் அது திருமணம் என்கிற ஒற்றை முடிவால் பல பெண்களின் அடிப்படை சுயம் கூட கேள்விக்கு உள்ளாக்கப்படுவதோடு, வாழ்வதற்கான குறைந்த பட்ச வழிகளையும் அடைத்துவிடுவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளும் இந்தச் சமூகத்தில், குடும்பத்தில், திருமணத்தில் உள்ளது. போராட்டத்தின் ஊடே தான் பெண்ணின் இருப்பு இருந்தாலும் அடிப்படை உரிமைகள்கூடப் போராடிக் கிடைக்காத போது நாம் அதிரடியான பல முன்னெடுப்புகளை எடுக்க வேண்டி உள்ளது.

அதே போல் ஒரு பெண்ணாய் இருந்து ஆணாய் மாற எத்தனிக்கும் ஒரு திரு நம்பியின் அடிப்படை உரிமைகளை, அவர்களின் கோரிக்கை

களைக்கூட நாம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டியது நமது கடமை. ஒடுக்கப்பட்டதிலும் ஒடுக்கப்பட்டவர்களாய் இருக்கும் பெண் ஒரு திருநம்பியாய் (ஆணாய்) மாற நினைக்கும் போது, அதை விட அதிகமாய் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் ஒடுக்கப்படுவது குறித்து நாம் விரிவாய் பேச வேண்டியது அவசியம். பல பெண்கள் தன் சுயபாலாய் நினைக்கும் ஆணாய் மாறும் அந்தக் கால கட்டத்திற்குள் பல ஒடுக்கு முறைகளைச் சந்திக்கின்றனர். குறிப்பாக, கிராமத்தில் வசிக்கும் பெண்களின் வீட்டில் அவர்களுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கும் போது அவர்கள் அடையும் துயருக்கு அளவு இல்லை. அவர்களைப் பொறுத்தவரை நான் ஒரு ஆண். எப்படி ஒரு ஆணைத் திருமணம் செய்து கொள்ள முடியும்? என்கிற மன அழுத்தத்தில் வீட்டை விட்டு வெளியேறி அதன் பிறகு அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளைச் சொல்லி மாளாது.

அனைவரும் சமையல் அறைகளை உடைத்து அதாவது அறைகளைத் தடைகளாகப் பார்க்கிறேன். அதை உடைத்து அந்த நேரத்தை மிக பயனுள்ள சமூகப் பணிக்காக பயன்படுத்த வேண்டியது அவசியம். முன்னைவிட இப்போது தலைதூக்கி இருக்கும் மிக மோசமான பெண்களுக்கு எதிரான வன்முறையானது நுட்பமானது. ஆழமான விழிப்புணர்வுடன் உற்று நோக்கி அதைக் களைய, நேரத்தை மிக நேர்த்தியாகக் கையாள வேண்டிய தேவை இருக்கிறது

நுகர்வு பண்பாட்டில் இருந்து விடுபட்ட வளாய், விருப்பம் இல்லை எனில் குடும்ப அமைப்பு முறையில் இருந்து விடுபட்டவளாய், தாய்மை என்ற வட்டத்திற்குள்ளும் குடும்ப அரசியலின், தனிச் சொத்தின் ஆரம்பப் புள்ளியான குழந்தை பிறப்பில் இருந்து தன்னைப் பிரித்து எடுத்தவளாய், சம உரிமைக்கு இடமில்லாத ஆணிடம் காதல், பண்பாடு, கலாச்சாரம் போன்ற உணர்வுச் சிக்கல்களில் சிக்காத நடைமுறைச் சாத்தியப் பெண்ணாய், வார்த்தைகளால், உடலால் சுரண்டப் படுகிறோம் என்பதை உணர்ந்து எதிர்த்துக் குரல் கொடுப்பவளாய், அடிப்படைச் சட்டம் தெரிந்த வளாய் இருக்கப் பெண்ணானவள் முன் நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறாள்.

அது மட்டுமே போதுமானதாய் இல்லை. இதைச் சட்டமாக்கி அனைத்துப் பெண்களும் சுயத்துடன் தனக்கான வாழ்வை, தான் விரும்பிய வாறு வாழ்வதற்கு மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை நடைமுறைக்கு கொண்டு வர அனைவரும் கூட்டாக சேர்ந்து குரல் கொடுப்பதும் அவசியம்.

அ.வெண்ணிலாவின் ஒரு கவிதை வரிகள் நினைவுக்கு வருகிறது "உள்ளே வீசப்படும் செய்தித் தாளை அப்பாவிடம் கொடுக்கவும், கீரை விற்பவள் வந்தால் அம்மாவைக் கூப்பிடவும் கற்றுக் கொள்கிறது குழந்தை யாரும் கற்றுத் தராமலே...."

ஆணாதிக்கக் குடும்ப முறை, சமூகக் கட்டமைப்பு, தேவை இல்லாமல் சமூகமும் குடும்பமும் தூக்கிச் சுமக்கிற கலாச்சாரச் சிந்தனை, செயல்பாடுகள் இவையே குழந்தைகளுக்குச் சொல்லி விடுகின்றன அம்மா என்பவள் சமையல் அறையில் இருப்பவள். அப்பா கால் மேல் கால் போட்டு பேப்பர் படிப்பவர் என.

**அப்பாவைப்போன்ற 'துணைவன்' வேண்டும்**

பொதுவாக, இப்போது இருக்கும் இளம் பெண்கள், ஆண்களிடம் ஒரு ஃபேசன் ஸ்டேட் மெண்டை பார்க்கலாம். தனக்கு வரும் இணை அப்பாவை போல் இருக்க வேண்டும் என பெண்ணும், தனக்கு வரும் பெண் அம்மாவைப் போல் இருக்க வேண்டும் என ஆணும் நினைக்கின்றனர். தன் அப்பா அம்மாவைப் பெரும்பான்மைக் குடும்பங்களில் எப்படி ஆள்கிறார் என அந்தப் பெண் பார்த்தும், மகளிடம் அவர் காட்டும் அந்த அன்பை மட்டும் மையப்படுத்தி - அதுகூட பெண் சொல் மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அந்த ஆண் ( அப்பா) பயன்படுத்தும் யுக்தியாகவே மகளிடம் அதீதமாகப் பாசம் காட்டுகின்றார். (விதி விலக்குகள் இருக்கலாம்) அதனால் அம்மாவை அப்பா நடத்தும் விதம் பற்றி எல்லாம் யோசிக்காமல், அப்பா போல ஆணைப் பெண்கள் கேட்கின்றனர்.

அம்மா போலப் பெண் வேண்டும் என ஆண் கேட்பதில் பெரிய ஆச்சர்யம் இல்லை. அவனுக்கு அம்மா போல குடும்ப அமைப்பில் அடங்கிய, சமையல் அறையில் தன் பிழைப்பை நடத்திய, தாயானவள் தெய்வம் என்று பெயரெடுத்த, அந்த அம்மாவை அவனுக்கு 'ரீ பிலேஸ்' செய்ய மற்றும் ஒரு அடிமை தேவை. இதுவும் ஒரு ஆணாதிக்க யுக்தியே.

யாரும் யாருக்கும் மறுபிம்பமாக மாற முடியாது. இதை இக்கால இளம் பெண்களும், ஆண்களும் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெண்களுக்கான சட்டக் கோரிக்கை மட்டுமாக இதை நான் பார்க்கவில்லை. இது அனைவருக்கு மானது. வருங்காலத்தில் இது பலவகையில் குற்றங்கள் குறைய வழி வகை செய்யும். ஏனெனில், குறிப்பாக இக்கோரிக்கையில் பாலின சமத்துவத் திற்கான கோரிக்கைகள் மட்டும் இன்றி ஆண்கள், பெண்கள் என்ற இந்த இரண்டு பாலும் ஒருவரை ஒருவர் சிறு வயதில் இருந்தே சரியாக புரிந்து கொள்ள, பழக, குடும்பம் என்கிற அமைப்பைத் தாண்டிக் கற்க இவை உதவும். மேலும் இது பெண்களுக்கானதாக மட்டும் பார்க்கவில்லை. பெண்கள், குழந்தைகள், ஆண்கள் என அனை வருக்கும் மிகத் தேவையான அடிப்படை உரிமை யாகவும் அதை மீட்டெடுக்கவும் உதவும் அனைவரும் சேர்ந்து கரம் கோர்த்தால்...

**உ.திலகவதி** சட்டக் கல்லூரி மாணவி

# என்ன... உனக்குச் சமைக்கத் தெரியாதா ???



மிகச் சரியான நேரத்தில் இப்படி முற்போக்கான கோரிக்கைகளை வைத்து சமூகத்தை சிந்திக்க வைத்த காட்டாறு குழுவிற்கு நன்றியும் வாழ்த்துக்களும்.

காதலின் பெயரால் பெண்கள் கொல்லப் படுவதை மிகச் சாதாரணமாக கடக்கக்கூடிய சமூகத்தில் நாம் உள்ளோம். ஒருதலைக் காதல், நிராகரிப்பு, பிரிந்து செல்லுதல் போன்றவை இதற்கு காரணமாகக் கூறப்படுகின்றன. ஆசிட் வீசுவது, பாலியல் சீண்டல் செய்வது, வன்புணர்வது, குத்திக் கொல்வது, எரித்துக் கொல்வது என பெண்களின் மீதான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இப்படி ஒவ்வொரு வன்முறை நடக்கும் போதும், குற்றவாளியைத் திட்டித் தீர்ப்பது, அவனின் ஆண் குறியை அறுத்து எறிய சபதம் எடுப்பது, சாகும் வரை தூக்கிலிட ஆர்ப்பாட்டம் செய்வது, முகநூலில் முகப்புப் படம் மாற்றிக் கொள்வது சில நாட்களில் மறந்து கடந்து செல்வது. இது தான் பெண்கள் மீதான வன்முறைக்குப் பிறகான சுழற்சி.

இவற்றுக்கெல்லாம் ஆண்களை மட்டுமே குறை சொல்லி இந்தக் குற்றங்களின் அடிப்படையாக இருக்கும் சமூகத்தை நாம் ஒளித்து வைக்கக்கூடாது. ஆணையும் பெண்ணையும் சரிசமமாய் வளர்க்காமலும் அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பழக விடாமலும் ஆண்கள் பள்ளி, பெண்கள் பள்ளி என்று தொடர்ந்து இருபாலினரையும் பிரித்து வைக்கும் விளைவுதான் இது.

ஒரு ஆணும் பெண்ணும் சராசரியாக கண்ணைப் பார்த்துப் பேசிக்கொள்வது நம் கலாச்சார கட்டமைப்பில் கடினமாக உள்ளது. இருவரின் ஐ காண்டேக்ட் எனப்படும் அந்தப் பார்வைத் தொடர்பு ஏற்படுத்த முடியாமலேயே போகிறது. கீழே பார்த்துப் பேசுவது, செல்போனைப் பார்த்துப் பேசுவது, விட்டத்தைப் பார்த்துப் பேசுவது இது போன்ற உரையாடல்கள் தான் நாம் சமூகத்தில் பார்க்கிறோம். கண்களைப் பார்த்துப் பேசும் தைரியமும் திடமான உளவியலும் இங்கே இல்லவே இல்லை.

**கல்வி நிலையங்களில் பாலினப் பாகுபாடு**

சில ஆண்டுகள் பின்நோக்கிப் பார்த்தால் அரசுப் பள்ளிக்கூடம் என்பதே கிராமப்புறங்களில் சவாலாக இருந்தது. 30 கி.மீ க்கு ஒரு பள்ளி என்பது போன்ற நிலை இருந்தது. ஆண்களுக்கு - பெண்களுக்கு தனித் தனிப் பள்ளி என்ற எண்ணமோ வசதியோ இல்லாத நிலையில் ஒரு கிராமத்தின் அனைத்து ஆண் - பெண் மாணவர்களும் ஒரே பள்ளிக்கோ கல்லூரிக்கோ ஒரே பேருந்தில் செல்லும் நிலைமை இருந்தது. ஒருவருக்கொருவர் உதவி செய்துக்கொள்ளும் மனப்பான்மை, விளையாட்டு, அரட்டை, நட்பு என அந்தப் பள்ளிப்பருவத்தின் ஆண் - பெண் உறவுகள் புரிதலோடிருந்தது. "இவன் என் பள்ளிக்கூட நண்பன்" என்று பெண்கள் சொல்லும் நிலைமை இருந்தது. ஆனால் இன்று?

பள்ளிகள் ஆண்கள் பள்ளிகள் - பெண்கள் பள்ளிகள் எனப் பிரிந்திருக்கும் விளைவு, பெண்கள் பள்ளிக்கூட வாசலில் அவர்களிடம் பேச ஆண் மாணவர்கள் காத்துக்கொண்டும், பின் தொடர்ந்து கொண்டும் இருக்கிறார்கள். இந்த இடைவெளி மிகப்பெரிய குழப்பத்தை உண்டாக்குகிறது.

> பேசிவிட்டால் காதல், பின்தொடர்ந்தால் காதல், பார்த்தால் காதல், சிரித்தால் காதல் என காதல் பற்றிய புரிதல் இல்லாமல் போனதற்கும் காதலின் பெயரால் வன்முறை நடைபெறுவதற்கும் இந்தப் பிரிவினைகளும் புரிதலற்ற தன்மைகளுமே காரணம்.

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

ஆண்களுக்கென பெண்களுக்கென தனித் தனிப் பள்ளிகள், கல்லூரிகள் இருக்கக்கூடாது. அது பாலியல் புரிதலுக்கு மிகப்பெரிய கேடு. இருபாலர் கல்வி முறைகளும் அவர்களுக்கான "இருபால் பொதுவிடுதிகளும்" அமைக்க வேண்டும். இது சாத்தியமில்லை என கூறுபவர்களுக்காகவே ஜே.என்.யு எனப்படும் ஜவஹர்லால் பல்கலைக் கழகமும் எய்ம்ஸ் போன்ற கல்வி நிலையங்களும் ஒரு முன்னோடியாக இயங்கி வருகின்றன.

ஆண் மாணவர்களும் பெண்மாணவர்களும் பேசிக் கொள்ளக் கூடாது என்கிற கேவலத்தைக் கல்வி நிலையங்கள் வெளிப்படையாகச் செய்கின்றன. விலங்கினங்கள் கூட குறிப்பிட்ட இனத்தோடு பழகக் கூடாது என்ற நாகரிகமற்ற செயலைத் திணிக்காது. ஆனால் அதை இங்கே பெரிய நியாயம் போல் கல்வி கற்றுக்கொடுக்கும் நிறுவனங்களே அதிலும், அரசுக் கல்வி நிலையங்களும் செய்வது அபத்தம். மீறிப் பேசி விட்டால் அவர்களை அழைத்து தகாத வார்த்தைகளால் திட்டுவது, அபராதம் வசூலிப்பது, பெற்றோரை அழைத்துப் புகார் செய்வது, குற்றவாளிகளைப் போல் விசாரிப்பது போன்ற அசிங்கங்கள் வெளிப்படையாகவே நடக்கிறது. இந்தச் செயல்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்தும் இவ்வாறு பாலியல் பேதத்தை, பிரிவினையை ஊக்குவிக்கும் பள்ளிகளின் அங்கீகாரத்தையும் அரசு இரத்து செய்ய வேண்டும்.

### காது குத்துதல் குழந்தைகள் மீதான வன்முறை

பெண்களை போகப்பொருளாக மட்டுமே வளர்க்கும் எண்ணம் நம் சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. காதணிகள் பெண்களுக்காகவே வடிவமைக்கப்படுவதும், காதில் தொங்க தொங்க ஜிமிக்கிகள் மாட்டி விடுவதும் ஒரு பெண் வேகமாக தலையை ஆட்டிப் பேசக்கூட கூடாது என்ற திட்டமே. தங்கத்தின் பால் பெண்களை ஈடுபாடு கொண்டவர்களாக உருவாக்குவதில் இந்தச் சடங்குகள் பெரும் பங்கு வகிக்கின்றன. தொங்கத் தொங்க காதணிகள் அணிவது என்பது பெண்களுக்கு அசௌகரியமானதும் தங்கம் எனும் பட்சத்தில் ஆபத்தானதுமாகும். அதில் ஒரு விற்பனைச் சந்தையை உருவாக்கி பெண்ணை அதன் பேரில் திருப்பி விட்டு போகப்பொருளாகப் பாவிக்க வைக்கும் அபத்தமானதும் ஆகும். அதற்கு ஆரம்பப் புள்ளியாக இருக்கும் இந்த முட்டாள்தனமான காது குத்தும் விழாக்களை தடை செய்ய வேண்டும். அழகாகத் தெரிவதற்காக சின்னஞ் சிறு குழந்தை களுக்குக் காது குத்திக் கதறவைக்கும் இந்த முட்டாள் தனம் குழந்தைகள் மீதான வன்முறையே!

### மஞ்சள் நீராட்டு விழா ஒரு கேவலம்

மாதவிடாய் என்பது பெண்களின் உடலில் நடக்கும் சாதாரண சுழற்சி. இதை அசிங்கமாகவும் அவமானமாகவும் பார்க்கும் மனநிலையும் பாலியல் கல்வி அற்ற சமூகத்தில் பரவி நிற்கிறது. மாதவிடாய் என்பது எளிதாக கடக்கக்கூடிய ஒன்றுதான் என்ற பார்வை அறவே இல்லாமல் போயிருக்கிறது. விண்வெளியில் சாட்டிலைட் விடும் காலத்திலும் சானிட்டரி நாப்கின்களை கருப்புக் கவரில் சுற்றி வைத்து ஒரு அணு குண்டைப் போல் வீட்டிற்கு எடுத்து வரும் நிலை யில் தான் சமூகம் உள்ளது. மாத விடாய் பற்றி பேசவே கூடாது "ஷ்ஷ்..." என்கிறார் கள். ஆண்கள் இதைப் பற்றி தெரிந் துக் கொள்ளவே கூடாது அது பாவம் என்கிறார்கள். மாதவிடாய், மென்சஸ், பீரியட்ஸ் போன்ற வார்த்தைகளைச் சத்தமாக சொல்ல முடியாத சமூகம் இது. "தலைக்குக் குளித்தல் தீட்டு, வீட்டுக்குத் தூரம், ஹேப்பி பர்த்டே" எனும் குறிப்புப்பெயர்கள் இன்றளவும் உள்ளதே நமக்கு அசிங்கம்



பூப்புனித நீராட்டுவிழா என்பது குழந்தைகள் மீதான உரிமை மீறல். ஒரு சிறுமியின் தனிப்பட்ட உடல் நிகழ்வை ஊராரை அழைத்து தெரியப் படுத்துவது என்பது அச்சிறுமியின் விருப்பத்திற்கு அப்பாற்பட்டு நடக்கும் ஒரு வன்முறை. அப்படியே அவள் சம்மதித்தாலும் ஒரு மைனர் சிறுமியின் சம்மதம் என்பது தெளிவான சிந்தனையற்ற முடிவாகவே கருதப்படும். மாட்டைச் சந்தையில் அறிமுகப்படுத்துவது போல் "என் மகள் குட்டிபோடத் தயாராகிவிட்டாள்" என ஊராரிடம் அறிவித்து ஆண்களின் மத்தியில் அவளைக் கூனிக்குறுகி அமரவைக்கும் அந்த இழிசடங்கு தடை செய்யப்படவேண்டியது. அதை நிகழ்த்துபவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள். ஒரு மனிதனின் அகவுரிமையை (Right to Privacy) மீறும் செயலாக உள்ள இந்தச் சடங்கு அடிப்படை உரிமைக்கே எதிரானது. பெண்கள் காட்சிப்படுத்த வேண்டிய அலங்காரப் பொருட்கள் அல்ல. அவர்களின் முதல் மாதவிடாய் நிகழ்வு மாநாடு போல் பேனர் அடித்து கூட்டம் சேர்த்து சாப்பாடு போடும் நிகழ்வல்ல. "பேட் மேன் சேலன்ஜ்" செய்யும் இதே சமூகத்தில் தான் "அப்பா பேட் வாங்கிட்டு வாங்க" என ஒரு மகள் தந்தையிடம் கேட்க முடியாத நிலை உள்ளது. இந்நிலை மாற பெண்களை சந்தை மாடுகளைப் போல் பாவிக்கும் பூப்புனித நீராட்டு விழா போன்ற குப்பைகளைச் சமூகத்திலிருந்து தூக்கி எறிய வேண்டும்.

### நோ மீன்ஸ் நோ

பெண்கள் "ஆம்" என்றே சொல்லப் பழக்கப் படுத்தப்பட்ட உயிரினங்கள். "இல்லை" என்பது அவர்கள் அகராதியில் இல்லையென்றால் தான் அவர்கள் நல்ல பெண்கள். "நோ மீன்ஸ் நோ" என்பது திரையில் மட்டும் தான். ஆனால் இங்கே பெண்ணின் மௌனம் கூட சம்மதமே! பெரும்

Kitchen DEMOLISH VEDIC TRADITION'S

பான்மையான பெண்களின் திருமணங்கள் அவர்களின் சம்மதமில்லாமலேயே நடக்கிறது. கிழித்த கோட்டைத் தாண்டாதவளாய், அலங்காரப் பொம்மைகளாகத் திருமணத்தை ஏற்றுக் கொள்பவளே சமூகம் எதிர்பார்க்கும் "குடும்பப் பெண்".

பெண்களுக்குக் காதலிக்கும் உரிமையே இல்லை. அதிலும் சாதி மாறி, வர்க்கம் மாறிக் காதலித்துவிட்டாலோ, மாப்பிள்ளைகளின் தலைகள் தண்டவாளத்திலோ தெருவோரத்திலோ இரத்த வெள்ளத்தில் மிதக்கும். இதுவே இங்கே பெண்களின் திருமண உரிமை. பெண்களின் சம்மதமில்லாத திருமணம் ஒரு குற்றம் என்பதை உணர வேண்டும்.

**பொருளாதார விடுதலையே சுயமரியாதை**

திருமணத்திற்குப் பிறகு பெண்கள் வேலைக்குச் செல்வது, குடும்ப கௌரவத்திற்குக் கேடாகப் பார்க்கப்படுகின்றது. பொருளாதார விடுதலையே பாலியல் விடுதலைக்கு, பெண் விடுதலைக்கு இட்டுச் செல்லும். வேலைக்குச் செல்லும் பெண்களைத் தடுத்து நிறுத்தி அவர்களை வீட்டுக்குள்ளே அடைத்து வைப்பது ஒரு குற்றமாகவே பார்க்கப்படுவதில்லை. சுயமாக சம்பாதித்து தன் தேவைகளை நிறைவேற்றுக்கொள்ளும் பெண் அடுத்த கட்டமாக சமூகம் நோக்கிச் சிந்திப்பாள். ஆனால் சிறு சிறு தேவைக்கும் கணவனை எதிர்பார்த்துக் கையேந்தும் பெண்ணின் நிலையைத் தான் ஆணாதிக்கச் சமூகம் விரும்புகிறது. அதனை இனியும் அனுமதியோம். திருமணத்தில் பெண்ணின் சம்மதத்தையும், சுயமாகச் சம்பாதிப்பதையும் பெயரளவில் இல்லாமல் காவல் அலுவலர்கள் வழக்கறிஞர்கள் கொண்ட குழுவின் மூலம் உறுதிச் சான்றிதழ் வழங்க வழி செய்ய வேண்டும்.

**சிவப்பழகு என்னும் சிறை**

பெண் ஒரு போகப்பொருள். எங்கேயும் அவள் போகப் பொருள்தான். பணியிடத்தில் திரைப்படத்தில் விளம்பரத்தில் என எல்லா இடத்திலும். அவளின் அழகிற்காகத் தான் இந்தியாவில் எத்தனை வணிகம் நடக்கிறது! உலகின் அழகு சாதனங்கள் ஏன் நம்மை நோக்கிப் படை எடுக்கின்றன. அவர்களின் முதலீடு எதற்காக நம்மை நோக்கி உள்ளது ? ஏனென்றால் நாம் தான் அழகே பெண்ணின் தகுதி என நினைக்கிறோம். அதுவே அவளின் குறிக்கோள் அதுவே அவளுக்கு அனைத்தையும் பெற்றுத் தருகிறது என்ற பிம்பத்தை வளர்க்கிறோம். சிவப்புத் தோல் நீளமான முடி ஒல்லியான தேகம் இதன் பின்னால் போட்டிக் குதிரையென ஓட வைக்கிறோம். தோற்ற குதிரைகளைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கிறோம். இந்த வணிகம் பெண்ணின் மீதுதான் தன் மூலதனத்தை நிறுத்தியுள்ளது. அவள் அறிவார்ந்து சிந்தித்து கொஞ்சம் நகர்ந்தாலும் வியாபார அடித்தளம் ஆட்டம் கண்டுவிடும். அதனால் அவளைச் சிந்திக்கவிடாமல் சினிமா சீரியல் விளம்பரங்கள் என அனைத்திலும் அவளுக்கான உடலமைப்பை அவர்கள் கவனமாகப் பதிவு செய்கிறார்கள்.

**பெண் உடல் எனும் சந்தை**

இதற்கெல்லாம் மூலக்காரணம் பெண் என்றால் எப்படி இருக்க வேண்டுமென்ற சமூக வரையறையே. ஒல்லியான, வெள்ளையான பெண்களை உருவாக்குவதையே தலையாய கடமையாகச் செய்யும் வாணிபமும், பாலியல் பண்டமாகத் தான் பார்க்கப்படுகிறோம் என்பதை உணராமல் அழகென்ற மாயையை நோக்கி நகரும் பெண்ணினமும் ஆபத்தானதுதான். ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும்? தலைமுடியில் இடும் ஷாம்பூவிலிருந்து கால் நகத்தில் இடும் நெயில் பாலீஷ் வரை அனைத்தும் சமூகத்தால் முடிவு செய்யப்பட்டு வடிவமைக்கப்படும் விஷயங்கள் தான்.

பெண்ணை மென்மையாக, பூ மாதிரி, எந்த கடின வேலைகளையும் செய்ய விடாமல் அப்படியே திருமணம் என்ற பெயரில் ஒரு ஆணிடம் தாரை வார்க்கவே கவனமாக வளர்க்கிறார்கள். இதில் ஒரு பெண்ணின் தன் நம்பிக்கை என்பதே அவளின் சிவப்பழகுதான் என்கிற அளவில் விளம்பரங்கள் மூலம் பதிய வைக்கிறார்கள். சிகப்பழகு கிரீம்களில் வரும் அபாண்டப் பொய்களை நம்பி அதை வாங்கிக் குவிக்கிறார்கள். ஒரு பெண்ணின் அறிவும் திறமையும் அவளின் சிகப்பழகில் தான் உள்ளது என நம்பவைக்கிறார்கள்.

முகத்தில் சிறு பருக்கள் வந்தாலும் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு மன உளைச்சலுக்கு உள்ளாக வேண்டிய உயிரினமாகச் சித்தரிக்கிறார்கள். கருப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாட்டின் பெண்களைத் தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளி அதன் மூலம் மன உளைச்சலை ஏற்படுத்தி ஏமாற்றி லாபம் பார்க்கும் சிவப்பழகுக் கிரீம் வாணிபத்தை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.

**நகை, பட்டு வணிகங்களும் தடைசெய்யப்பட வேண்டியவையே**

பெண்களையே மையமாக வைத்துச் செயல்படும் நகைகள் ஆபரணங்கள் பட்டு ஆடைகள் புடவைகள் பெண்களை மேலும் அலங்கார பொம்மையாகக் காட்டும் அனைத்து வணிகத்தையுமே தடை செய்ய வேண்டும். ஒரு பெண் என்ன அணிய வேண்டும் என்பதை ஏதோ ஒரு மூளையில் அமர்ந்துள்ள ஒரு முதலாளி முடிவு செய்கிறான். பெண்ணை சுயமாகச் சிந்திக்கக்கூடிய உயிரினமாகக் கருதாமல் சுயமரியாதையற்று தன் அழகைத் தவிர வேறு எதைப்பற்றியுமே யோசிக்க விடாமல் சிறைபடுத்தவே இந்த வணிகங்கள் களை கட்டுகிறது. இப்படி ஜவுளிக் கடை பொம்மைகளைப் போல் அலங்காரப்படுத்தி தன் வாழ்வைப் பற்றி சிந்திக்கவிடாமல் செய்யும் அத்தனை பொருட்களையும் தடை செய்ய வேண்டும். அதிலும் உபயோகமே அற்ற அலங்காரத்திற்காய் மலர்

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S

வணிகத்தையும் மல்பெரி விவசாயத்தையும் தடை செய்து இயற்கையைக் காத்திடல் வேண்டும்.

### திருமணம் விலக்குதல் என்னுரிமை

எந்தத் துணையின்றியும் பெண்ணால் தனித்து வாழ முடியாது என்ற மடமையான கருத்து நம் சமூகத்தில் உள்ளது. ஒரு ஆணின் துணையின்றி, திருமணமின்றி வாழும் பெண்ணை கேவலமாகப் பார்ப்பது, அவதூறாகப் பேசுவது உட்பட பல வன்முறைகளை செலுத்துவது போன்றவை நிகழ்கிறது. ஒரு பெண் என்பவள் தனித்து வாழலாம் அவளால் அப்படி வாழ முடியும் அல்லது அப்படி ஒரு தேர்வு இருக்கிறது என்பதே இங்கே பலருக்கு தெரியாது. பெண் என்பவள் ஆனால் பாதுகாக்கப் பட வேண்டிய ஒரு பொருளென்று தான் மதங்களும் புராணங்களும் தெரிவிக்கின்றன. ஆண் காக்க வேண்டிய அவள் தன்னைத்தானே காத்துக்கொள்ள முடியாது, கூடாது என்பதே இங்கு ஊறிப்போனக் கருத்து. ஒரு குடும்பத்தின் ஒட்டுமொத்த கௌரவமும் அந்த குடும்பத்தின் பெண்களிடம் தான் உள்ளதாம். ஆண் பிள்ளை எந்தத் தவறு செய்தாலும் அது குடும்பத்தைப் பாதிக்காதாம்.

ஒரு பெண் எப்படி வளர்க்கப்படுகிறாள் எப்படி பேசுகிறாள் எப்படி சிரிக்கிறாள் யாரை கல்யாணம் செய்து கொள்கிறாள் என்பதில் தான் அந்த குடும்பத்தின் ஒட்டுமொத்த மானமும் உள்ளதாம். இப்படி அயோக்கியத்தனத்தை பெண்கள் மீது திணித்துவிட்டு அவளை அவளாக இருக்கவிடாமல் விரும்பியவனை மணக்கவிடாமல் கௌரவத்திற்காய் எத்தனை பெண்களின் கழுத்துகளை அருவாக்கள் ருசிபார்த்திருக்கிறது. இந்த மடமை ஒழிய வேண்டும். ஒரு குடும்பத்தின் கௌரவம் என்பது அதன் உறுப்பினர்களின் மன உணர்வுகளை மதிப்பதிலும் அடுத்தவரை ஏமாற்றாமல் சுரண்டாமல் ஆதிக்கம் செலுத்தாமல் வாழ்வதிலும் தான் உள்ளது.

பெண் வெறும் பெண் தான். உங்களின் ஆணவங்களுக்கு அவளை பலியாக்காதீர்கள். பெண்ணிற்குத் திருமணம் முடிவெடுக்கும் உரிமை யுள்ளது அதில் உங்கள் கௌரவத்தை திணிக் காதீர்கள். அப்படி திருமணமே வேண்டாமென்று முடிவெடுக்கும் பெண்களும் அதை பல நேரங்களில் தைரியமாக செயல்படுத்த முடியாமல் போவதற்கு சமூக பாதுகாப்பற்ற தன்மையும், பொருளா தாரமுமே முக்கிய காரணங்களாக உள்ளன. ஒரு பெண் யாரையும் சாராமல் தன் வாழ்க்கையை எந்த ஒரு குடும்ப அமைப்பும் அற்று சுயமாகவும் சுதந்திரமாகவும் சுயமரியாதையுடனும் வாழ உரிமையுடையவள். அதை உறுதி செய்வது அரசின் கடமை. எனவே தனித்து வாழ முடிவெடுக்கும் பெண்களுக்கு மாவட்டம் தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்க வேண்டும்.

### திருமண சமத்துவத்திற்குத் தனிக்குடித்தனம்

பலகாலமாக குற்ற உணர்வே இல்லாமல் பெண்கள் மீது செலுத்தப்படும் ஒரு வன்முறைதான் திருமணத்திற்குப் பிறகு பெண்கள் கணவன் வீட்டுக்குச் செல்லும் வழக்கம். ஆரம்பத்தில் இந்த அமைப்பு முழுக்க முழுக்க பெண்களின் பத்தினித் தன்மையைப் பாதுகாக்கவே உருவாக்கப்பட்டது. தொழிலுக்காக கணவன் வெளியில் செல்லும்போது அந்த மனைவி தனியே இருப்பதைத் தவிர்க்கவே இந்த ‘ஏழு அடுக்கு பாதுகாப்பு’ குடும்ப முறை. ஆணும் பெண்ணும் சமமானவர்களே! இருவரும் ஒரே திருமண முறையின் வழியாக வரும்போது பெண் மட்டும் தான் இத்தனை வருடம் வாழ்ந்த வீடு உறவுகள் உணர்வுகள் அனைத்தையும் துறந்து முன் பின் தெரியாத ஒரு வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பது என்ன நியாயம்?

புதிய வீட்டில் வாழ்வது, உறங்குவது, உண்பது, அங்கு இருப்பவர்களே இனி நம் வாழ்க்கையின் உறவுகள் என ஏற்றுக்கொள்வது போன்றவே எவ்வளவு பெரிய உளவியல் வன்முறை! அதிலும் காலம் காலமாக இவ்வாறு கணவன் வீட்டுக்குச் சென்று அங்கு ஏற்படும் பிரச்சனைகளால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட பெண்கள் ஏராளம் இல்லையா? கணவன் சார்பாக ஒரு குடும்பமே இருக்க தனக்கு ஆதரவாக யாருமே இல்லாத நிலையில் ஒரு பெண்ணின் மீது செலுத்தப்படும் ஒடுக்குமுறைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. இதன் நீட்சியாய் வரதட்சணை, எதிர்த்துப் பேசுதல், அடங்கிப் போகாமலிருத்தல் போன்ற காரணங்களுக்காக குடும்ப வன்முறைகள் கொலைகள் வரை நீண்டிருப்பது நமக்குத் தெரியாதா?

இதுபோன்ற கொடுமைகள் இனியும் நடக்கக் கூடாது. திருமண பந்தத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேண்டுமெனில் தனிக்குடித்தனம் வேண்டும். மனைவியுடன் இணைந்து வேலை பார்க்கும் எந்த கணவனையும் கணவன் வீட்டில் கூட்டுக்குடும்பமாய் வாழ்பவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். கணவன் மனைவி வேலை பகிர்தல், சம உரிமை, ஒருவரை ஒருவர் மதித்தல் போன்றவை கூட்டுக்குடும்பத்தில் சாத்தியமில்லை. அதோடு திருமணம் முடிந்தவுடன் ஒரு பெண் தன் உரிமைகளை விட்டுக்கொடுத்து சுயமரியாதையை விடுத்து கணவனின் வீட்டிற்குச் சென்று வாழ அவசியமும் இல்லை. எனவே தனிக்குடித்தன முறையைக் கட்டாயமாக்குதல் வேண்டும்.

### பெண் பிள்ளைபெரும் எந்திரமல்ல

இயற்கை வளங்கள் சீரழிந்து போவதற்கும், பூமி அழியத் தொடங்கியதற்கும் மக்கள் தொகை பெருக்கமே முழுமுதற் காரணம். பிள்ளை பெருதல் மட்டுமே வாழ்க்கையின் நோக்கமாகவும் அதுவே தலையாயக் கடமையாகவும் பெண்கள் வளர்க்கப் படுகிறார்கள். ஒரு பெண் பிள்ளை பெறாமல் இருக்க அவளுக்கு உரிமையும் தேர்வும் இருக்கிறது என்பதையே ஏற்றுக்கொள்ள முடியா சமூகம் நம்முடையது. “பெண்கள் பிள்ளை பெறும் எந்திரங்கள் அல்ல, பெண்களே! கருப்பையை

Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S

அறுத்தெறியுங்கள்" என்றார் பெரியார். இந்த அளவிற்கு முற்போக்கு விதை தூவப்பட்ட இந்தச் சமூகத்தில் பகுத்தறிவோடு சிந்தித்துப் பிள்ளை பெறுதல் நம் வாழ்வின் இலட்சியம் அல்ல என உணர்ந்து பெண்கள் வெளிவர வேண்டும். "என் இரத்தத்திலிருந்து வாரிசு வேண்டும். என் சொத்திற்காக வாரிசு வேண்டும். என் பெயர் சொல்ல வாரிசு வேண்டும்" என்கிற பிற்போக்குத்தனமான வாரிசு வெறி மனநிலையிலிருந்து ஆண்களும் வெளியே வர வேண்டும்.

ஆயிரக்கணக்கில் இருக்கும் ஆதரவற்ற குழந்தைகளையும் கணக்கில் கொண்டு அவர்களை வளர்க்கலாம் அல்லது குழந்தைகள் இல்லாமலும் தனித்து வாழலாம். அது இந்த பூமிக்கும் சமூகத்திற்கும் நாம் செய்யும் மிகப்பெரிய கடமை.

**வேலை பகிர்வு – ஆண்களின் கடமை**

எந்த ஒரு உயிரினமும் தன்னுடைய தேவைகளுக்குப் பிறரைச் சார்ந்து இருப்பதில்லை. உணவு, நீர், தன்னைத் தானே பராமரித்துக் கொள்ளுதல், இருப்பிடத்தை பார்த்துக்கொள்ளுதல் போன்ற அனைத்துமே ஆடு, மாடு, குதிரை, நண்டு, பறவை என அனைத்துமே சுய தேவையை தாமாகவே நிறைவேற்றிக்கொள்கின்றன. ஆனால் மனிதனுக்கு மட்டும், இருவர் சேர்ந்து வாழும் ஒரு வீட்டில் அந்த ஆண் வெளியில் வேலைக்குச் சென்றாலும் செல்லாவிட்டாலும் அவனுக்குச் சமையல் பெண் தான் செய்ய வேண்டும், துணியைப் பெண்தான் துவைக்க வேண்டும். அவன் சாப்பிட்ட பாத்திரத்தைப் பெண் தான் கழுவ வேண்டும். வீட்டைப் பெண் மட்டுமே பராமரிக்க வேண்டும். தன் தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்ள வக்கற்ற உயிரினமா ஆண் என தோன்றுகிறது. அதிலும் பிள்ளை வளர்ப்பில் ஆணுக்கும் பங்குண்டு என்பதை அவர்களால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. பிள்ளைபெறும் அமைப்பை பெண்கள் இயற்கையிலேயே கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகவே அவர்களை குழந்தை வளர்ப்பில் தள்ளிவிட்டு அதுவே அவர்களின் கடமையெனச் சொல்வது அயோக்கியத்தனம். பிள்ளை வளர்ப்பென்பது பெற்றோரின் சம பங்களிப்பு சார்ந்தது. அதை பெண்களிடமே தள்ளிவிடுவதும் பெண்கள் பிறக்கும் போதே பிள்ளை வளர்ப்பை பயின்றவர்கள் போன்றும் சித்தரிப்பது சரியல்ல அது நிச்சயமாக இருவரின் கடமை.

**சமையலறையைப் புறக்கணிப்போம்**

"சமையலறை உடைப்புப் போராட்டம்" என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க சமகாலப் போராட்டம் என்பது திண்ணம். இந்தத் தீவிர போராட்டம் என்பது சமையலறைகள் பெண்கள் மீது பட்டா போடப்பட்டது போன்ற பிம்பத்தை சுக்குநூறாக உடைக்க வல்லது. எழுத்துப்பூர்வமாக இருந்த சமையலறை எதிர்ப்பை போராட்டமாகக் கொண்டு வந்தது பெருமைமிகு செயல்.

"பார்ன் வித் சில்வர் ஸ்பூன்" என்கிற பழமொழி கேள்விப்பட்டிருப்போம். இங்கே பெண்கள் அனைவருமே "பார்ன் வித் டீ ஸ்பூன்" என்பது போலப் பார்க்கப்படுகிறார்கள். பிறக்கும்போதே சமைப்பதற்கான கரண்டியுடனே பிறந்தவர்கள் பெண்கள் என்ற கண்ணோட்டத்திலேயே பார்க்கப் படுகிறார்கள்..

சமையலறை என்பது சிறைச்சாலை! சமையல் என்பது வன்முறை! எத்தனையோ பெண் எழுத்தாளர்கள், விளையாட்டு வீராங்கனைகள், கலைஞர்கள், விஞ்ஞானிகளின் கனவுகள் சமையலறையின் அடுப்புத் தீயில் பொசுக்கப்பட்டிருக்கும். இன்றும் கூட ஒரு பெண் சமைக்கத் தெரியாது எனக் கூற வெட்கப்பட வேண்டுமாம்! சமையல் என்பது ஒருவரின் உணவுத்தேவையைத் தானே நிறைவேற்றிக் கொள்ளும் வழிமுறை அது தெரியாது எனும் பட்சத்தில் ஆணோ பெண்ணோ அதைக் கற்றுக் கொள்வது அவரவரின் வாழ்க்கைக்கு உதவுமே அன்றி அது பெண்ணுக்கான கடமை என்பது மடமையே.

ஒரு பெண் சமைக்கத் தெரியாது என்றால் "என்ன...உனக்கு சமைக்கத் தெரியாதா?" என ஹார்ட் அட்டாக் அடையும் சமூகம் தான், ஆண் சமைக்கத் தெரியாது என்றால் "நீ சமைக்கக் கத்துக்கிட்டு என்ன பண்ணப் போற" என்கிறது. சாப்பிட்ட தட்டைக் கூட எடுக்கப் பழக்கப்படுத்தாத ஆண் பிள்ளைகளிடமிருந்து தான் நாம் சமத்துவத்தையும் பெண்ணை மதிக்கும் தன்மையையும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறோம்..."இப்பலாம் யாருங்க சாதி பாக்குறா?" பாணியில், "இப்பலாம் எங்கங்க பொம்பளைங்க சமைக்குறாங்க எல்லாம் ஆண்கள் தான், ஹோட்டல்ல விழாக்களில் ஏன் சென்னைல வசிக்கும் பாதி பேச்சுலருங்க அவங்களே தான் சமச்சுகிறாங்கன்" னு ஒரு கோஷ்டி சுத்துது...

அவங்களுக்கெல்லாம் நாம் நினைவு படுத்த வேண்டியது, இது அனைத்துமே பொருளாதார லாபத்திற்காகத் தவிர கடமைக்காக அல்ல. ஆம்.. வெளியூரில் வேலைப் பார்க்க வரும் ஆண்கள் தினமும் வெளியில் வாங்கி சாப்பிட முடியாது என்ற பொருளாதார நெருக்கடிக்காய் சமைக்கிறார்கள். ஹோட்டல்களில் சமைக்கும் ஆண்கள் சம்பளத்திற்காய்ச் சமைக்கிறார்கள். சமையல் மட்டும் அல்ல ஆண்கள் செய்யும் பிற வேலைகளும் உதாரணத்திற்கு துணி துவைத்தல், பாத்திரம் கழுவுதல் போன்ற அனைத்து வேலைகளையும் பொருளாதார நோக்கத்தோடும் தங்களது சுய தேவைக்காகவும் விருப்பப்பட்டும் தான் செய்கிறார்கள்.

ஆனால் பெண்களோ அதைப் பிறவிக்கடமை போலவும் அதற்கான கூலி எதையும் குடும்பத்தில் வாங்காமலும் விரும்பாவிடினும் சமையலறைக்குள் தள்ளப்பட்டுக் கட்டாயமாகச் சமைக்க வைக்கப்படுகிறார்கள். விளம்பரங்களும், சமையல் பெண்ணுக்கானது என்பது போல் சமையல் பொருட்களைப் பெண்களை வைத்து மட்டுமே விளம்பரப்படுத்துகிறார்கள். ஏதேனும் சமையல் பற்றிய விவாதம் வந்தாலும் ஒரு பெண்ணிற்குச்



சமைக்கத் தெரியுமா தெரியாதா என்பதை தெரிந்து கொள்ளாமலேயே, “இந்தச் சமையலுக்கு இத தானங்க அதிகம் போடனும்?” என மிகச் சாதாரண மாக - பெண் என்றால் இது தெரிந்திருக்கும் என்ற புரிதலோடு கேட்கிறார்கள்.

சமையலைப் பற்றிய சந்தேகங்களை ஒரு குழுவில் உள்ள பெண்ணிடம் ஏன் கேட்க வேண்டும். அதோடு, “அவ நல்லா சுடுதண்ணி சமைப்பா” என்று இளம்பெண்களை கேலி செய்யும் வழக்கம் உள்ளது. ஏன் இப்படி ஆண்களைக் கேலி செய்வதில்லை? பெண்கள் தான் சமைக்க வேண்டும் என்ற உளவியல் குழந்தைகளிடமும் உள்ளது. பால்பேக்கட்டை அம்மாவிடமும் நியூஸ் பேப்பரை அப்பாவிடமும் குழந்தைகள் குடுப்பதாய் எழுதப்பட்ட கவிதையும் ஒரு பெண் தன் வாழ்நாளில் எத்தனை இட்லி களையும் தோசைகளையும் சமைக்கிறாள் என்ற கவிதையும் தான் நினைவுக்கு வருகிறது. இளம் வயது முதல் கல்விக்கு முழுக்கு போட்டுச் சமையலறையில் தள்ளிவிடப்பட்ட பெண்களின் வரலாறுகளும் அடுப்படியின் கரிச்சுவரில் எழுதப்பட்டிருக்கும். இனியும் சமையலறை பெண்களுக்கானது என்ற உளவியலை உடைப்போம். சமையலறையைப் புறக்கணிப்போம். அரசும் வீட்டு வேலைகளில் பிள்ளை வளர்ப்பில் சரிபாதி பங்களிக்காத ஆண்களைத் தண்டிக்க வேண்டும்.

**கணவன் செய்தாலும் வன்புணர்வே**

“காதலற்ற முத்தம் ஒரு வன்முறை” என்கிற தோழர் செங்கவியின் வரிகளை நினைவுப் படுத்துகிறேன். இந்தியாவில் பல பெண்களுக்கு காதலற்ற முத்தங்களே சம்மதமில்லாத் திருமணங் களின் மூலம் வன்முறையாக வழங்கப்படுகின்றது. திருமணம் என்பது வன்புணர்விற்கு ஒரு லைசென்ஸாகப் பார்க்கப்படுகின்றது. “நான் உன் தாயை எப்படி வன்புணர்ந்தேன் (How I raped your Mother)" என்னும் குறும்படத்தில் திருமண பந்தத்தில் நடத்தப்படும் வன்புணர்வைப் பற்றிப் பேசியிருப் பார்கள். அதில் ஒரு பெண் தன் கணவனால் தான் வன்புணரப்பட்டதாகச் சொல்லும்போது அனை வரும் சிரிப்பார்கள். அப்படித்தான் நம் சமூகம் உள்ளது.

கணவனால் செய்யப்பட்டால் அது வன்புணர் வல்ல; உடலுறவு என்ற புரிதலைத்தான் கலாச்சாரம் கொடுத்துள்ளது. கணவன் மட்டுமல்ல ஒரு பெண்ணின் விருப்பமின்றி அவளுடன் யார் உறவு கொண்டாலும் அதன் பேர் வன்புணர்வு தான். கணவனால் வன்புணரப்பட்டுப் பெறப்பட்ட குழந்தைகள் ஏராளம்! இவை ஒர் குற்றமாகவே கருதப்படுவதில்லை. ஒரு பெண்ணின் உடல் மீது அவளின் கணவனுக்கு முழு உரிமையும் உள்ள தென்கிறது கலாச்சாரம். அதனை வன்மையாகக் கண்டித்து தண்டனைகளை வலுவாக்க சட்டமோ மழுப்பலாக தீர்ப்புகள் எழுதுகிறது. திருமண பந்தத்திற்குள் நடக்கும் பாலியல் குற்றங்கள் கடுமையான தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

**சொத்துரிமை பெயரளவிலா?**

பெண்களுக்குச் சரிசமமான சொத்துரிமை உள்ளது எனச் சட்டம் சொன்னாலும் இன்றும் அவை முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படுவ தில்லை. திருமணம் செய்து வைத்த பிறகு அந்தப் பெண்ணிற்குப் பிறந்த வீட்டின் சொத்தில் எந்தப் பங்குமில்லை அதைச் சட்டரீதியாக பெற்றுக் கொள்ளும் விழிப்புணர்வும் அவர்களிடமில்லை. ஆணாதிக்கம் சொத்து விவகாரத்தில் ஓங்கியுள்ளது. சொத்தில் சமவுரிமை என்பது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. எனவே சொத்தில் பெண்களுக்கு சரிபாதி பங்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப் படுத்த தனி ஆணையம் அமைக்கப்பட வேண்டும். மேலும் அவ்வாறு பெண்களுக்கு அளிக்கப்படாமல் ஏமாற்றி வைத்துள்ள சொத்துகளை ஆண்களிட மிருந்து பிடுங்கி பெண்களுக்குப் பகிரிந்தளிக்க வேண்டும். திருமணக் காலங்களில் பிள்ளைகள் பெற்றோரிடம் பணம் நகை கேட்பதையும் குற்ற மாக்க வேண்டும்.

பெரியாரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இக்கோரிக்கைகளை ஒரு கருத்துக் கணிப்பாக மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் காட்டாறின் இந்த முயற்சியையும் யாருமே முன்னெடுக்கத்துணியா இத்தனை முற்போக்கான கோரிக்கைகளையும் வரவேற்கிறேன். பாலியல் சமத்துவத்திற்கான அடித்தளமான இந்த கோரிக்கைகள் நிச்சயமாக சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த கருத்துக் கணிப்புகளை பரப்புவோம் பாலியல் சமத்துவம் கொண்ட சமூகம் படைப்போம்.

**தோழர் திருச்சி பெரியார் சரவணன்**
மாநில கொள்கை பரப்புச் செயலாளர்,தமிழக வாழ்வுரிமைக் கட்சி

# குடும்ப அமைப்பு உடையவேண்டும்

இந்தியக் குடும்பஅமைப்பு என்பது வன்முறையான ஜனநாயகம் அற்ற ஒரு அமைப்பு. இங்கு பெண் என்பவள் ஒரு சொத்து மட்டுமே. அவளின் உணர்வுகள், உணர்ச்சிகள் சமையலறையிலும், கட்டிலறையிலும் வைத்துப் புதைக்கப்படுகின்றன.

பெண் திருமணமாகிச் செல்லும் இடத்தில் சம்பளமில்லா வேலைக்காரியாக நடத்தப்படுவதும், பண்பாடு, கற்பு, பக்தி, ஒழுக்கம் எனும் பெயரில் அவளின் உழைப்பு இரக்கம் இல்லாமல் சுரண்டப்படுகிறது. ஒரு சமூகத்தில் ஏன் பெண்களின் நிலை இப்படி ஆனது என்பதை விசாரிக்க, நாம் சற்றுப் பின்னோக்கி பயணிக்க வேண்டி உள்ளது.

ஆம். ஆரியர் இந்நாட்டில் நுழையும்போது வந்தவர்கள் அனைவரும் ஆண்கள்தான். நாடோடியாய் மேய்ச்சல் நிலம் தேடி வந்தவர்கள் இங்குள்ள கருப்பு திராவிடப் பெண்களுடன் உறவு வைத்துக்கொள்கின்றனர். ஆரியர்கள் தனக்கான பெண் இணையை இந்த மண்ணிலேயே தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் வேறுவழி இல்லாமல் திராவிடப் பெண்களிடையே கலக்கும் நிலை ஏற்பட்டது.

தான் உயர்ந்தவன் என்கின்ற அகங்காரத்தின் காரணமாக தன்னுடன் சேர்ந்து வாழும் பெண்ணை ஆரியர்களால் அங்கீகரிக்கக்கூட முடியவில்லை. அனைத்துப் பிரிவினருக்கும் ஜாதியப் படிநிலையைக் கட்டமைத்த ஆரியர்கள், ஜாதி போன்ற (அவர்களது பார்வையில்) அந்தஸ்தையோ - பாதுகாப்பையோ பெண்களுக்கு வழங்கத் தயாரில்லை.

மேலும், பெண்களை நயவஞ்சகர்கள், சந்தேகத்திற்குறியவர்கள், பாவ யோனியில் பிறந்தவர்கள், சமமாக நடத்தப்படக் கூடாதவர்கள் என்றெல்லாம் சட்டமாக எழுதி வைத்தனர். இந்தச் சமூக ஒழுக்கக் கோட்பாடுகள் அனைத்தும் ஒரு மூலத்திலிருந்தே நகல் செய்யப்படுகிறது. இந்தப் பெண்ணடிமைத் தனத்தின் மூலம் பார்ப்பன வர்ணாசிரமக் கோட்பாடுதான்.

இந்தப் பார்ப்பன வர்ணாசிரமக் கோட்பாட்டில் இருந்தே இந்தச் சமூகம், தன் வாழ்க்கை முறையை நகல் செய்துகொண்டது. இந்தத் தோற்றுவாய்தான் இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் வேதமாய், வெகு மக்களின் உளவியலாய் மாறியிருக்கிறது. இந்த வந்தேறி ஆரியச் சட்டங்களின் வெளிச்சத்தில்தான் தற்போதைய குடும்ப அமைப்பையும், பெண்ணுக்கான ஒழுக்க, கற்பு, கடவுள் விதிகளைப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஒவ்வொரு வீட்டு உணவு மேசையிலும், அந்த வீட்டுப் பெண்ணின் ரத்தம் பறிமாறப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது. ஒவ்வொரு வீட்டுப் படுக்கை அறையிலும் அந்தப் பெண்ணின் கற்பனைகள் காவு வாங்கப்படுகின்றது. உடலுறவின் விருப்பத் தேர்வு அங்கு நடைபெறுவதில்லை. தன் ஆசையையோ, அதிருப்தியையோ அவள் வெளிப்படுத்த முடியாத நவீன அடிமையாக நடத்தப்படுகின்றாள்.

எனவே, ஒரு தேசத்தில் அம்பது விழுக்காடு உள்ள உழைக்கும் சக்தியான பெண்களை வீட்டில் அடிமையாய் வைத்திருக்கும் எந்த ஆணுக்கும் வெளியில் சுதந்திரத்தைப்பற்றி பேச யோக்கியதை இல்லை. ஒரு தேச விடுதலை என்பது பெண் விடுதலையோடு தொடர்புடையது என்கின்ற நோக்கில் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டவனாவோம். இந்தச் சுயநலமான ஜனநாயகமற்ற, வன்முறையான குடும்ப அமைப்புதான் சொத்தையும், அரசையும் உருவாக்குகிறது.

‘குடும்பம்’ என்பது எப்படிப் பெண்களுக்கு எதிரானதோ, அதுபோல் ‘அரசு’ என்பது மக்களுக்கு எதிரானது. இந்த அரசை வீழ்த்த வேண்டுமானால் குடும்பத்தை வீழ்த்த வேண்டும். குடும்பத்தை வீழ்த்த வேண்டுமானால் குடும்பத்திலிருந்து பெண்களை விடுவிக்க வேண்டும். இதற்கு முதல் நிபந்தனையாக சமையலறை அற்றவீடு. அன்பால், காதலால் நண்பர்களாக வாழும் அமைப்பு.

பேராசான் காரல் மார்க்ஸ் வழங்கிய ‘கம்யூனிசம்’ என்பதன் பொருளே! ‘கம்யூன்’ என்றாலே இனக்குழு என்பதுதான். இனக்குழுக் களுக்கான அரசியலே கம்யூனிசம். எனவே ஒரு ‘கம்யூன் வாழ்க்கை’யில் தான், ஒரு பெண் தன் உடலைத் தானே சொந்தம் கொண்டாட முடியும். அப்படி அந்தப் பெண் தன் உடலைத் தானே சொந்தம் கொண்டாடத் தொடங்கிவிட்டால், ‘குடும்பம்’ என்கின்ற அமைப்பு கட்டுடையும். குடும்பம் கட்டுடைந்தால் அரசு வீழும். அரசு இல்லாத ஒரு சமூகமே கம்யூனிசம். பெண் விடுதலை என்பது ஆண் விடுதலை மட்டுமல்ல, அது தேச விடுதலையோடும் தொடர்புடையது.

தோழர் நற்றமிழன். ப -இளந்தமிழகம் இயக்கம்

# சமையலறைகளைத் தடைசெய்! பொது உணவகங்களை உருவாக்கு!

**காட்டாறு இதழியக்கத்தின் கோரிக்கைகள் மீதான இளந்தமிழகம் இயக்கத்தின் மீளாய்வு.**

*சக மனிதனை ஏன் ஒதுக்கி வைக்கின்றீர்கள்? என சமத்துவப் பார்வையில் கேள்வி எழுப்பிய பெரியார், அதற்குக் காரணமான சாதி, மதம், வேதம், கடவுள் என எல்லாவற்றையும் எதிர்த்துத் தொடர்ந்து போராடினார். அதேபோல மானுடச் சமூகத்தில் சரிபாதியான 'பெண்' ஏன் அடிமையானாள்? என்ற கேள்வியை எழுப்பி அதற்கான பதில்களை வரலாற்றிலிருந்து எடுத்து எழுதினார். ஆண் - பெண் சமத்துவமான சமூகத்திற்காகத் தொடர்ந்து பேசியும், எழுதியும் போராடியவர் பெரியார்.*

*பெரியார் போராடிய ஆண்- பெண் சமத்துவமான சமூகம் அமைந்து விட்டதா? எனக் கேட்டால் இல்லை என்பதே சரியான பதிலாக இருக்கும். அன்றைய நிலையை விட ஓரடி முன்னால் நகர்ந்திருக்கும் சமூகத்தை, பின்னோக்கிக் கற்காலத்திற்குக் கொண்டு செல்வதற்கான எல்லா முயற்சியையும் மதவாதிகளும், பிற்போக்கு வாதிகளும் செயல்படுத்தி வருகின்றார்கள். மோடி தலைமையிலான இந்துத்துவ அரசு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருப்பது அவர்களுக்குக் கட்டற்ற அதிகாரங்களை வழங்கி உள்ளது.*

*இந்த நேரத்தில் பெரியார் போராடிய 'ஆண் - பெண்' சமத்துவ சமூகக் கருத்துகளை முன்வைத்து பண்பாட்டுத்தளத்தில் தொடர்ந்து செயல்பட்டு வரும் 'காட்டாறு' இதழியக்கம் பின்வரும் கோரிக்கைகளை வைத்து அடுத்த ஓராண்டுக்குத் தொடர் செயல்பாட்டைச் செய்யத் திட்ட மிட்டுள்ளது நமக்கு நம்பிக்கையளிக்கின்றது. இந்தக் கோரிக்கைகளைப் பற்றிய இளந்தமிழகம் இயக்கத்தின் கருத்து இதோ.*

*"பள்ளி - கல்லூரிகளில் ஆண் - பெண் இருபாலரும் கலந்து அமரும் முறையை அகர வரிசைப்படி (Alphabetical order) நடைமுறைப்படுத்து!"*

*"JNU, AIIMS போன்ற உயர்கல்வி நிறுவனங் களில் உள்ள 'இருபால் பொதுவிடுதி' முறையை (Co - Hostels or Unisex Hostels) பள்ளி - கல்லூரிகள் அனைத்திலும் நடைமுறைப்படுத்து!" என்கின்ற கோரிக்கைகள், குழந்தைகள் வளரும் வயதிலேயே இருவருக்கும் இடையில் சமத்துவத்தை ஏற்படுத்தும். இதைத் தடுப்பதற்காக "பள்ளி - கல்லூரி வளாகங்களில் ஆண் - பெண் மாணவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதையும், பழகுவதையும் தண்டிக்கும் காட்டுமிராண்டிகள் நடத்தும் பள்ளி, கல்லூரிகளை இழுத்துமூடு. அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்!" என்ற கோரிக்கை ஏற்புடைய ஒன்றாக இருந்தாலும், இந்தக் கோரிக்கையை சட்டமாக்குவதற்காக நீண்ட போராட்டம் தேவைப்படும்.*

*"கல்லூரி - பல்கலைக்கழகங்களில் உள்ள Anti Sexual Harassment Cell களில் நிர்வாகம் தவிர, மனநல ஆலோசகர்கள் - காவல்துறை - மகளிர் அமைப்பு களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கு!" என்ற கோரிக்கை செயல்படாமலும், பல குற்றங்கள் மூடி மறைக்கப்படுவதையும் தவிர்த்து குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க உதவும்.*

*"பள்ளிக்கல்வியிலிருந்தே பாலியலையும் ஒரு பாடமாகக் கற்பி!" என்ற கோரிக்கை மிகவும் முக்கியமான ஒன்றாகும். "வழக்கு எண் 18/9" திரைப்படத்தில் காட்டப்படுவது போல இன்றைக்கு எட்டாம் வகுப்பு, அதற்கு மேல் படிக்கும் மாணவர்களின் செல்போனில் போர்னோ படங்கள் தான் நிரம்பி வழிகின்றன. இதை எல்லாம் தவிர்ப்பதற்குப் பாலியல் கல்வி என்பது தேவையான ஒன்றாகின்றது.*

*"சிவப்புத் தோலே முக்கியம் என்ற எண்ணத்தை உருவாக்கும் சிவப்பழகு க்ரீம் வணிகத்தைத் தடைசெய்!", "அலங்காரப் பண் பாட்டைத் தூண்டும் நகை வணிகம், பட்டு வணிகம், மலர் வணிகங்களைத் தடைசெய்! பட்டு நூல் உற்பத்திக்கான மல்பெரி விவசாயம், மலர் விவசாயத் தைத் தடைசெய்!" போன்ற கோரிக்கைகளை அரசு ஏற்காது. ஏனென்றால் இன்றைய அரசுகளை இயக்குவதே வணிகர்கள் தான். அதற்குப் பதிலாக 'அழகு' என இன்றைக்குச் சொல்லப்படுவதன் பின்னுள்ள அரசியல், வணிகம் தொடர்பான*

கருத்துகளைத் தொடர் பிரச்சாரம் செய்வது சரியாக இருக்கும். சந்தையில் இது போன்ற அலங்காரப் பொருட்கள் புறக்கணிக்கப்படும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

"பெண்களை அலங்காரப் பொம்மைகளாக உருவாக்கும் காது குத்து விழாக்களைத் தடைசெய்!", "பெண்களை இழிவுபடுத்தும் பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!" போன்ற கோரிக்கைகள் பண்பாட்டுத்தளத்தில் அதிர்வுகளை உண்டாக்கும். அதேநேரம் மிகவும் அவசியமான கோரிக்கை களாகும். இந்தக் கோரிக்கைகளுக்காக நாம் தொடர்ந்து போராட வேண்டும்.

"திருமணங்களில் பெண்களின் சம்மதத் தையும், பெண்கள் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கு!" என்ற கோரிக்கையில் பெண்கள் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கு என்பதை, திருமணமான பின்னர் பெண்கள் வேலைக்குச் செல்வதை ஆண்கள் தடுக்கக் கூடாது, மீறித் தடுப்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று மாற்றலாம்.

அதே நேரம் வெளி வேலைக்குச் செல்லாமல் வீட்டில் உழைக்கும் பெண்களின் உழைப்பை இந்தச் சமூகம் மதிக்க வேண்டும். வேலைக்குச் செல்பவர் களுக்காவது எட்டு மணி நேரம் மட்டுமே வேலை. வீட்டில் இருக்கும் பெண்களுக்கோ எப்பொழுதுமே வேலை. இந்த நிலையை மாற்ற "இல்லப் பராமரிப்பிலும், சமையல் உள்ளிட்ட அனைத்து வீட்டு வேலைகளிலும், குழந்தை வளர்ப்பிலும் சமஉழைப்புக் கொடுக்காத ஆண்களுக்குக் கடும் தண்டனைகள் வழங்கு!" என்ற கோரிக்கை அவசியமான ஒன்றாகின்றது.

பெண்கள் எல்லோரும் பணிக்குச் செல்லுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். 30 பெண்களுக்கு மேல் பணிபுரியும் இடத்தில் குழந்தைகள் பராமரிப்பு மையம் அமைக்க வேண்டும் எனத் தொழிற்சாலைச் சட்டம் சொல்கின்றது. ஆனால், இது பெரும்பாலான இடங்களில் இல்லை. இதை அரசு உறுதியாக அமல்படுத்த வேண்டும். இதேபோல பெண்கள் கல்வி பயிலும் பள்ளிகளிலும், பணிபுரியும் இடங்களில் சானிட்ரி நாப்கினை அரசே இலவசமாகக் கொடுக்க வேண்டும். பெண்கள் கல்வி பயிலும் அரசுப் பள்ளிகளில் தண்ணீர் வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சரியான தண்ணீர் வசதி கொண்ட கழிவறைகள் இல்லாததால் பெண்கள் பள்ளியை விட்டு இடைநிற்றல் அதிகமாக உள்ளது.

திருமணங்களின் பெண்கள் சம்மதம், திருமணத்திற்குப் பின் பணிக்குச் செல்வதைத் தடுக்கும் ஆண்களுக்கு தண்டனை போன்றவற்றை உறுதிப்படுத்த காவல்துறை - வழக்கறிஞர்கள் கொண்ட தனி ஆணையத்தை உருவாக்கு! என்ற கோரிக்கையும் சரியான ஒன்றே.

"பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு, கடவுளையே மாற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயத்தை உருவாக்கும் 'குலதெய்வ வழிபாடு' களைத் தடைசெய்!" என்ற கோரிக்கையை தனி நபர் வழிபாட்டு உரிமை என்பதன் அடிப்படையில் முக்கியமான ஒன்றாகும்.

"திருமணம் தேவையில்லை என்றும், 'குடும்ப அமைப்பே வேண்டாம்' என்றும் முடிவெடுத்துத் தனித்து வாழத் துணிந்த பெண்களுக்கு, மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்கு!" எனும் கோரிக்கையுடன் "தனியே கல்வி பயிலும், உழைக்கும் மகளிருக்கான விடுதிகளையும் அரசு மாவட்டம் தோறும் ஏற்படுத்த வேண்டும்" என்பதையும் சேர்க்க வேண்டும்.

**பிள்ளைபெற்றுக்கொள்ளாதவர்களுக்கு சீனாவில் முன்னுரிமை**

"திருமணத்திற்கு முன்பே கருத்தடைச் சிகிச்சை செய்பவர்களுக்கும் - பிள்ளை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் அரசின், கல்வி - வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கு!" மக்கள் தொகை அதிகம் கொண்ட சீனாவில் ஏற்கனவே இது அமலில் உள்ளது. சீனாவுக்கு அடுத்த நிலையில் உள்ள இந்தியாவிற்கு மிகவும் தேவையான கோரிக்கை.

"திருமணத்தின் பெயரால் - கணவன் என்ற உரிமையால் நடக்கும் *(Marital Rape)* பாலியல் வன்முறைகளைக் கடும் குற்றமாக்கு!" என்ற கோரிக்கை பண்பாட்டுத் தளத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தும் ஆனால் இது மிகவும் முக்கியமான கோரிக்கையாகும்.

"திருமணங்கள் உறுதிசெய்யப்படும் போதே, அந்த மணமக்களுக்குத் 'தனிக் குடித்தனம்' என்பதைக் கட்டாயமாக்கு!" இந்த கோரிக்கையில் 'கட்டாயமாக்கு' என்பதற்குப் பதிலாக, பெண்களின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது சரியாக இருக்கும்.

"அனைத்துக் குடும்பங்களிலும் பெண் களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த அதிகாரம் படைத்த தனி ஆணையம் உருவாக்கு! சொத்துரிமை வழங்காத ஆண்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து பெண்களுக்குப் பகிர்ந்தளி!" எனும் கோரிக்கை மற்ற எல்லா கோரிக்கைகளையும் விட மிக முக்கியமான ஒன்று. பொருளாதாரச் சுதந்திரமின்மையே இன்றைய அடிமைநிலையில் பெண்கள் நீடிக்க வைக்கின்றது. பொருளாதார சுதந்திரம் பெண் களுக்கு வழங்கப்பட வேண்டும்.

"திருமணக் காலத்தில் பெற்றோரிடம், பிள்ளைகள் நகை, பணம், பொருட்கள் கேட்பதைக் கடும் குற்றமாக்கு!" எனும் கோரிக்கையுடன் "ஆடம்பரத் திருமணங்களை அரசு தடை செய்ய வேண்டும்" என்பதையும் சேர்க்க வேண்டும்.

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

**பொது உணவகங்களை உருவாக்கு! – இளந்தமிழகம்**

*“சமையலறை உடைப்புப் போராட்டம்” நடத்த இருக்கும் ‘காட்டாறு’ இதழியக்கம் அது தொடர்பாக எந்தக் கோரிக்கையும் வைக்காமல் இருப்பது ஆச்சர்யமளிக்கின்றது. பல வெளிநாடுகளில் இருப்பது போன்ற “பொது உணவகங்கள்” அல்லது “சமூக உணவுக்கூடங்கள்” இங்கும் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்மொழிகின்றோம்.*

*பெரியாரிய இயக்கங்கள் ஏதும் பயிற்சி முகாம்கள் நடத்துகின்றதா? அப்படி நடத்தினால் நம் மகளை அங்கு அனுப்ப வேண்டும் என்று என்னிடம் கூறினார் என் இணையர், அவரது கேள்வியை நான் பின்வரும் கோரிக்கையாக இங்கு வைக்கின்றேன். பெரியாரின் கருத்துகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்கான “கோடை கால முகாம்கள்”, “வார இறுதிப் பயிற்சி வகுப்புகள்” நடத்த வேண்டும். ஆர்.எஸ்.எஸ் கல்வி நிலையங்களில் ஊடுருவி வரும் இந்நேரத்தில் இது மிகவும் தேவையான ஒன்றாகும்.*

*பெரியாரின் கனவை முன்னெடுத்துச் செல்வதற்காகத் தொடர்ந்து செயல்பட்டு வரும் ‘காட்டாறு’ இதழியக்கத்திற்குத் இளந்தமிழகம் இயக்கம் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதே வேளையில், கருத்துத் தளத்திலும், போராட்டக் களத்திலும் உங்களுடன் இணைந்து செயல் படுவோம் எனவும் உறுதி கூறகின்றோம்.*

**காட்டாறு:**

ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனி சமையலறைகள், அதில் பெண்ணின் உழைப்பு முடக்கம், ஆணாதிக்கம் என்பவைகளுக்கு மாற்றாக, அரசே தரமான உணவை வழங்கும் பொது உணவகங்களை – சமூக உணவுக்கூடங்களை அமைக்க வேண்டும் என்ற இளந்தமிழகம் இயக்கத்தின் முன்மொழிவு மிகவும் அவசியமானது. இரஷ்யப் பயணத்திற்குப் பிறகு, தோழர் பெரியார் இதுபோன்ற பொது சமையல்கூடம் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

பல பெரியார் இயக்கத் தோழர்கள் அதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கின்றனர். அரசே இதைச் செய்வது சரியாக இருக்கும். முதலில், அதுபோன்ற உணவகங்களில் போய்ச் சாப்பிடலாம். தனித்தனி சமையலும், சமையலறைகளும் வேண்டியதில்லை என்ற எண்ணம் மக்களுக்கு உருவாக வேண்டும். மக்களுக்கு அந்த எண்ணம் உருவாக வேண்டுமானால், முற்போக்காளர்கள் முதலில் மாறவேண்டும். முதற்கட்டமாக, ஏதாவது ஒரு ஊரில், முற்போக்கு அமைப்புகளில் உள்ள தோழர்களின் குடும்பங்கள் இணைந்து இதைத் தொடங்க முயற்சிக்க வேண்டும். நாம் தொடங்கினால், மக்களுக்கும் அந்த எண்ணம் தோன்றும்.

நமது கோரிக்கைகள் அனைத்துமே அரசுக்கு வைப்பது போல இருந்தாலும், அதற்கு முன் மக்களிடையே ஒரு மனமாற்றம் உருவாக வேண்டும் என்பதைப் புரிந்துதான் முன்வைக்கிறோம். அந்த மனமாற்றத்துக்கான தொடக்கமாக, ஒரு விவாதத்தைத் தொடங்குவது தான் நமது கோரிக்கைகளின் நோக்கம். தொடர்ந்து முயற்சிப்போம்.








**தோழர் நந்தினிதேவி**
தமிழர் அறிவியப் பேரவை

# தனிக்குடித்தனத்தைக் கட்டாயமாக்கு!

இன்றைய வாழ்வியல் முறையில் தனிக்குடித்தனம் அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது என்பது தான் நிதர்சனம். இருமணம் இணைந்தால் மட்டுமே திருமணம். பண்டைய தமிழர் வாழ்க்கை அகம், புறம் என்று வாழ்க்கை இரண்டு வகையாகக் கொண்டனர். இவற்றுள் ஒரு ஆணும், பெண்ணும் காதலால் இணைந்து தனக்குள்ளே இன்பம் துய்த்து வாழும் அகவாழ்வு மீண்டும் மலரவேண்டும். உடல் மொழி அறிய, அவர்களுக்குத் தேவை தனிமையே. இருவேறு சூழ்நிலையில் பழக்கப்பட்ட ஆணுக்கும், பெண்ணுக்கும் உணவு, உடை, சுவை, பழக்கவழக்கங்கள், விருப்பு, வெறுப்பு இப்படி பலவும் ஒத்திசைவாக அமைவதில்லை.

இதனை இந்தத் தலைமுறை உணர்ந்தாலும், இது ஏதோ பாவச்செயல் போல சித்தரிப்பது ஆணாதிக்கச் சமூகத்தின் உச்சக்கட்டப் பார்வை. பெண் தனக்கான பணி, இணையரைத் தேர்வு செய்யும்போது, ஆணும், பெண்ணும் சேர்ந்து வெற்றிகரமாக வாழ்க்கை வாழக் கனவுகளையும் சுமந்து சுகவாழ்வு வாழ இயலும் அல்லவா?

சங்கத் தமிழர் வாழ்வியல், தனிக்குடும்பத்தை ஆதரித்தது. களவு வாழ்க்கை வாழ்ந்து காதலுடன் கடந்தவர்கள் தான் நம் முன்னோர்கள். இடைப் பட்ட ஜாதிய சமய, மதச்சாயங்கள் தான் ‘குடும்பம்’ என்ற காதல் வாழ்க்கையைச் சுயநலமாக மாற்றிப் போட்டது. பிற்போக்கான குறுகிய சிந்தனை உள்ள ஜாதி, மதவாதத் தலைமுறையின் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் நமக்குப் பாதகமாகவே அமையும். பெண்ணடிமை, ஜாதிவெறி இவை மேலோங்கிய பழமைவாதிகளின் பரிந்துரைகள் கண்மூடித்தனமானவை. அதிகமான விவாகரத்து என்ற நிலைக்கு, கணவன் - மனைவி கருத்து வேற்றுமைகளைவிட, நெருங்கிய உறவுகளின் நெருக்கடிகளும், தலையீடுகளுமே மணமுறிவுக்கு வழிவகை செய்கின்றன.

நிகழ்வுகளிலும், விழாக்களிலும் ஒன்றிணைந்து கொண்டாடிக்களிப்பதுவும், முடிந்ததும் இயல்பாய்த் தன் கூடுகளைத் தேடும் ஜோடிப் பறவைகளாய் பிரிவதுமாக அமைந்தால் உறவுப்பாலம் பலப்படும். “கிட்ட இருந்தால் முட்டப்பகை” என்ற பழமை மொழியின் உண்மைத் தன்மையை ஒவ்வொருவரும் அனுபவித்துத் தான் வருகிறோம். கூட்டுக்குடும்ப உறவுமுறைகளில் போன தலைமுறையில், கட்டுப்பட்டியாகவே வாழ்ந்து அதன் ரணங்களை ஆராத தழும்புகளாக சுமந்து வாழும், பெண்கள் இன்றைய சுதந்திரத்தின் எதார்த்தத்தைக்கூட கேள்விக்குள்ளாக்குவது இயல்புதானே.

. நேற்றுவரை பெற்றோரின் நிழலில் வாழ்ந்தவர்களுக்கு உலகம் விரிந்து எதார்த் தங்களைப் பட்டியல் போட்டுக்காட்டும். நீந்திக் கரை தேடும் போது, அந்த அனுபவங்கள் நாளைய தலைமுறைக் குழந்தைகளைக் செப்பனிடப் பயன் படும். அந்த அனுபவம் தனித்குடித்தனம் நடத்தும் போது தான் வசப்படும். பிடிகளைத் தளர்த்துங்கள். சுதந்திரம் எத்தகையது எனச் சுவாசித்து, அனுபவத்தைப் பாடமாக ஏற்றுத் தானும் வாழ்ந்து, தலைமுறையையும் வாழவைப்பார்கள்.

ஒட்டுமொத்தமாய் முதுமைக்கு டாட்டா காட்டிவிட்டு, எப்படி? இது துரோகம் அல்லவா என்றால்... ‘இல்லை’ என்பதுதான் என் பதில். முதுமைக்கும் தனிமை அவசியம்தான். ஒட்டுமொத்த மாய்த் தவிப்பது அல்ல. அடுத்த தெருவில், அடுக்குமாடிகளில் அடுத்தடுத்த குடிஇருப்புகளில் எனத் தனித்து விடுங்கள். தாம்பத்தியம் 40 இல் தான் இனிக்கும், 60 இல் தான் சுவைக்கும். கடமை முடிந்த களைப்பை, மீண்டும் 60 களின் காதல் மறுபரிசீலனை செய்யும்.

முயன்று பாருங்கள். இல்லை அவர்களின் தனிமைக்கு வயது ஒத்த நண்பர்களுடன் பகிர்வதும், கடந்த காலத்தை அசைப்போட்டு மீதிப்பாதியைச் சுகமாய் வலிகள் மறந்து கடந்துவருவார்கள். எது வாழ்க்கை? வயது ஒத்தவர்களுடன் பகிர்வது தானே வாழ்க்கை? வெறும் கட்டிலும், கைத்தடியும் மட்டுமேவா வாழ்க்கை?

கூட்டுக்குடும்பமுறை என்பது இன்றைய தலைமுறை கனவுகளைச் சிதைக்கும். வாழ்ந்த வாழ்க்கை, குடும்பம் இப்படி ஒட்டு மொத்தமாய் இடம் பெயர்ந்து வரும் பெண்கள் கூட்டுக் குடும்பத்தில் வேற்று ஆளாகவே தெரிவாள். மாறாக, தனிக்குடித்தனம் அவளது சுதந்திரத்தைப் பறிக்காமல், இயல்பாய்க் குடும்பவாழ்க்கை வாழவும் - ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் கொண்டாடி மகிழவும் வாய்ப்பு உருவாகும்.

பிணக்குகள் தோன்றினாலும் தானாய் மறையும். ஊடல் இயல்புதானே? மூன்றாம் நபர் தலையீடு இல்லாமல் இருந்தால் தனிமனித உணர்வுகள் மதிக்கப்படும். ஒற்றுமையும் பலப்படும். சிந்திப்போம், செயல்படுவோம்.

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S

**செ.மா.சாந்தி** தமிழ்நாடு திராவிடர் கழகம்



# நெருப்போடுதான் நம் பயணம்

சமூகப் பண்பாட்டுத் தளத்தில் தனக்கென்று ஒரு கட்டற்ற பாதையை உருவாக்கிக் கொண்டு சுதந்திரமாய்ப் பாய்ந்து கொண்டிருக்கிறது காட்டாறு. காட்டாற்றின் இந்தப் பயணம் என்ன மாதிரியான விளைவுகளை இந்தச் சமூகத்தில் ஏற்படுத்திவிட முடியும்? என்கிற அய்யங்கள். இந்தப் பயணம் என்ன செய்வதற்காக..? என்கிற இளக்காரம், இதெல்லாம் என்னமோ...? என்கிற அலட்சியம் இப்படிப் பல பார்வைகளை - குரல்களை எதிர்கொண்டுதான் காட்டாறு பயணிக்கிறது.

இது, தன் கரைகளில் எதிரொலிக்கும் எதிர்மறைக் குரல்கள் குறித்துக் கவலைப்படவில்லை என்பதற்கு ஒரு பெரும் சாட்சி, தன் இலக்கை நோக்கிப் பேரிரைச்சலோடு பாய்வதிலேயே காட்டாறு குறியாயிருக்கிறது என்பதே ஆகும்.

களப்போராட்டக் கலகக்காரர்கள்கூட ஆள்களைக் கருத்தில் கொண்டு சில நேரங்களில் தமது வேகத்தில் சில கூட்டல் கழித்தல்களைச் செய்வதை நாம் அறிவோம். அதுதான் எதார்த்தமும் கூட. ஆனால், பெரியாரியல் என்பது தந்தை பெரியார் அவர்களே குறிப்பிட்டதைப் போல, வெறும் சீர்திருத்தம் அல்ல; ஒரு தலைகீழ் மாற்றம், புரட்சி என்கிற சொற்களைக் காட்டாறு கட்டுப்பாட்டோடு கையாண்டு வருகிறது என்றே சொல்வேன்.

காரணம், இதைச் சொல்வதால் இவர்கள் கோபிப்பார்களோ, இவர்கள் எல்லாம் வருத்தம் அடைவார்களோ, இதனால் இப்படி இப்படி எதிர்ப்புகள் பலப்பட்டுவிடுமோ என்றெல்லாம் கவலைப்படாமல் தான் சொல்ல வருகிற சேதிகளை, நாளைய தலைமுறையின் மீது சுமத்திவிடுவதற்கு காட்டாறு தயக்கம் காட்டியதே இல்லை என்பதுதான் இது காலம் காட்டாறை கவனித்து வருகிறவர்கள் புரிந்திருக்கிறோம்.

இது சரியல்ல என்று சிலர் வாதிடக்கூடும். இது சமூகப் பண்பாட்டுத் தளத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகிற ஒரு கிளர்ச்சியின் நாற்றாங்கால் முயற்சி என்று என்போன்றோர் கருதக்கூடும். ஆனால், இவை எதைப்பற்றியும் காட்டாறு கவலைப்படவுமில்லை, கண்டு கொள்ளவும் இல்லை என்பதை அதன் போக்கில் பயணிப்போரின் செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

இப்போதுகூட, “சமையலறைகளை உடைப்போம்” என்கிற ஒரு விவாதக்களம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது வெறும் விவாதக் களமாக மட்டும் இல்லை என்று நான் நம்புகிறேன். காரணம், கடந்த ஆண்டுகளில் சமையலறைப் புறக்கணிப்பு (Boycott kitchen) என்றுதாம் இவர்கள் சொல்லி வந்தார்கள். அதுவே பெரும் வாத-பிரதிவாதங்களை உண்டாக்கியது. எங்கே? சமூக வெளியிலா? இல்லை...சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டாளர்களிடையே!

இப்போது முந்தைய கிளர்ச்சி அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருக்கிறது. அதாவது Boycott என்பதிலிருந்து *Demolish* என்பதாக. அதாவது ‘புறக்கணிப்பு’ அடுத்த கட்டமாக ‘உடைத்து நொறுக்குவது’ என்பதாக அந்தச் சொல் முன்னோக்கி நகர்ந்திருக்கிறது.

*Demolish kitchen* சமையலறைகளை நொறுக்கு வோம் என்றால் என்ன? வீட்டுக்குள் ஏற்கனவே கட்டி வைத்திருக்கிற சமையல் அறைகளை எல்லாம் சம்மட்டியால் அடித்து உடைத்துவிட்டு சமைய லறை இல்லாத வீடாக்கிவிடுவதா? என்றால், அது இல்லை. சமையலறைக்கென்றே ஒரு ஜீவன் இந்த சமூகத்தில் வளர்க்கப்படுகிறதே அதை மாற்றுவது.

பெண்ணியவாதிகள் என்போர் முதற் கட்டமாக, சமையல் என்கிற தொல்லையிலிருந்து பெண் மக்களை வெளியேற்றுவதற்கு முயற்சிப்போம் என்பதுதான் அது என்று நான் புரிந்து கொள்கிறேன்.

அப்படியா? அப்படியானால் சாப்பிடுவதற்கு என்ன செய்வது? என்று ஒரு வித மிதப்பான கேள்வி வருகிறது. ஆண்களிடமிருந்து மட்டுமல்ல; பெண்களிடமிருந்தும் தான். நல்லது. இதே கேள்வியால் ஏளனத்தோடும், மிதப்போடும் கேட்பதற்குப் பதிலாக, கொஞ்சம் கவலையோடும், உண்மையான தேவையின் அக்கறையோடும் கேட்டுப்பார்க்கலாமே?

இந்தச் சமூகத்தில் மலம் அள்ளுவதற்கு என்றே ஒரு சாதி பரம்பரை பரம்பரையாக இருக்கிற காரணத்தினால்தானே மனிதர்கள் மலம் அள்ளும் மகா கேவலமான ஒரு சமூக அமைப்பை இந்த விஞ்ஞான காலத்திலும் மாற்றாமல் அப்படியே விட்டுவிட்டு, மலம் அள்ளும் தொழிலாளியின் துயரங்களை வெட்கமே இல்லாமல் நாம் கடந்து போய்க்கொண்டிருக்கிறோம்.

இதே போலத்தான் சமைக்க, துவைக்க, வீட்டைப் பராமரிக்க, வாரிசுகளைச் சுமந்து பாதுகாக்க என்று ஒரு சாதி (பெண்கள்) இருக்கிறது என்பதால் தானே அதை மாற்றவோ, அதில் திருத்தம் செய்யவோ அக்கறை காட்டாமல் இந்த ஆணாதிக்கச் சமூகம் அமைதியாய்க் கடந்து போய்க் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு கள்ள மவுனங்களும் ஒற்றைப் புள்ளியில் நிற்கின்றனவா? இல்லையா?

ஆக, சமையலறைகளை உடைப்போம் என்கிற முழக்கத்தின் பின்னணியில் ஒரு புரட்சிகரமான சிந்தனையின் போர்க்குரல் இருக்கிறது என்பதாகவே இதை நான் பார்க்கிறேன். மிகைப்படுத்தப் பட்டவையாகத் தெரியுமானால் அவர்கள் நரைத்த கிழவனின் உரத்த முழக்கங்களை மீண்டும் ஒருமுறை ஊன்றிப் படித்து உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும் என்று மிக்க பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

சமையலறை உடைப்பு என்ற முழக்கத்தின் கூடவே, பால் வேறுபாடு களைந்து பொது இடங்களைப் பயன்படுத்துவது, பள்ளி-கல்லூரிகளில் பொதுவிடுதிகள் அமைப்பது, பாலியல் கல்வி, காதுகுத்து, பூப்புநீராட்டு விழாக்கள் தடை, திருமணத்தில் பெண்ணின் கருத்துகளை - உரிமைகளைப் பாதுகாப்பது, திருமணம் செய்து கொள்ளாமல் வாழவிரும்பும் பெண்களுக்கான விடுதிகள், தனிக்குடித்தனம், குலதெய்வ வழிபாடு தடை, சிவப்பழகு விளம்பரத்தடை, கணவன் பெயரிலான பாலியல் வன்முறை, திருமணக் கொடைத் தடை, குடும்பப் பொறுப்புகளில் சமபங்கு, சொத்துரிமை இப்படி பல முழக்கங்களை முன் நிறுத்துகிறது இந்தச் சமையலறை உடைப்பு போராட்டம்.


மேலோட்டமாக பார்ப்போரும், மாற்றங் களுக்கு எதிரானவர்களும் இவற்றிற்கு மிக எளிய விடையைச் சொல்லிவிடுகிறார்கள். இதெல்லாம் சரிப்பட்டு வருமா? என்கிற ஏளனக்கேள்விதான் அவர்களது விடை என்பது நமக்குத் தெரியும். இவர்களையும் உள்ளடக்கிய இந்தச் சமூகத்திற்கு நான் ஒன்றைச் சொல்வேன். இவையெல்லாம் ஒரு காலத்தில் இந்தச் சமூகத்தால் விலக்கப்பட்டு, இவற்றைச் செய்வதே நகைப்புக்குரியது, வெட்கக் கேடானது என்கிற அளவுக்கு இந்த மூடத்தனங்கள் முடக்கப்படும் காலம் வரும். அதேபோல் இங்கே வேண்டும் என்று முன்மொழியப்பட்டிருக்கிற கோரிக்கைகள் நடைமுறைக்கு வந்து, இவற்றுக்காகவா ஒருகாலத்தில் நீங்கள் போராடினீர்கள்? என்று நாளைய நம் சந்ததிகளே நம்மோடு பேசுவார்கள்.

எனவே காட்டாறு முன்மொழிந்திருக்கிற இந்த முழக்கங்களை அப்படியே தமிழ்நாடு திராவிடர் கழகம் வழிமொழிகிறது. இறுதியாய் கூடுதலாய் ஒரு செய்தி.

கடந்த ஆண்டு பெரியார் நினைவு நாளில் இருந்து எங்கள் வீட்டில் ஞாயிற்றுக்கிழமைகள் பெரும்பாலும் (தவிர்க்க முடியாத ஒன்றிரண்டு கிழமைகள் தவிர) Boycott kitchen தான். அதாவது ஞாயிறு காலையில் நாங்கள் வழக்கத்துக்கு மாறாக தாமதமாகவே எழுவோம். எனது இணையர் நாகராசன்தான் தேனோடு சாண்ட்விச் அல்லது ப்ரட் ஆம்லெட் போன்ற ஒரு சிறிய அளவிலான சிற்றுண்டியைத் தயார் செய்வார். அவ்வளவுதான் மதியம் இரவு இரண்டு வேளைகளும் உணவகங்களில் சாப்பிடுவோம் அல்லது சில வேளைகளில் சமைக்காத உணவு.

ஞாயிறு அன்று எங்கள் வீட்டில் அடுப்புப் பற்றவைக்கிற வேலையை 75 சதம் குறைத்துள்ளோம். இது எங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த மகிழ்ச்சியைப் பெருக்க முயற்சிக்கிறோம். எங்கள் குழந்தையிடமும், எங்கள் வீட்டில் புழங்கும் குழந்தைகளிடமும் இந்தச் செய்தியைத் தொடர்ந்து பகிர்ந்து வருகிறோம். பெரியார் பற்ற வைத்துள்ள புரட்சி நெருப்பு என்பது காலந்தோறும் பற்றிப் படர்ந்து கொண்டே இருக்கும். அது பிற்போக்குகளைச் சுட்டெரிக்கும்! முற்போக்கு களுக்குக் கதகதப்பான சுகத்தை, மகிழ்ச்சியை பகிர்ந்தளிக்கும்.




Make it compulsory that women should have their consent in marriage and that they should earn independently .
To confirm and issue certificate in this regard form a separate board including advocates and police officials.
Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S


Community deity worship must be prohibited. The biggest gender discrimination of the practice to change one's own community god after marriage should be opposed strongly.
Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S


Boycott fairness cream production which makes people diffident in their perseverance of beauty. Obsession of the thought fair skin is beauty must be broken.
Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S


Ban jewelry, silk and flower merchandize which promotes beauty tradition. Strictly ban mulberry production and floriculture.
Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S


Government should create separate hostels for women who prefer 'independent living' saying no to marriage institution.
Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S


Kitchen
DEMOLISH
VEDIC TRADITION'S
Make it compulsory to practice nuclear family culture from the time of marriage itself.

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com













